www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி


**கலககலாவல்லி மாலை**


வெண்டாமரைக்கன்றி உம்மனம்
சொல்லவெம் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ?
சனம், ஈழம் அழித்தபின்
உண்டாம் உறைந்த குருதி, மண்மேல்
உயர்ந்து நிற்க
கண்டார் நடுங்க கர்ச்சித்துக்
கொடிநடுவாய் சகலகலா வல்லியே'

இதழ் 76 ஜூலை 13 - ஜூலை 26, 1995 7/=

## யாழ் குடாநாடு மீதான

# அரசின் 'மனிதாபிமான' யுத்தம்!



யுத்தம் சமாதானத்தைத் தராது!-குமுது

பக்கம்-4



யாழ்ப்பாணம் மீது யுத்தமா? அரசியல் தீர்வா? -உயங்கொட

பக்கம்-6



நியாயாதிக்கத்தை இழந்துவிட்டது அரசு!-சண்

பக்கம்-7



கடத்தப்பட்ட இளைஞர்கள் பொல்கொட ஏரியில்?

பக்கம்-2

**யுத்தத்தை நிறுத்து! யுத்தத்தை நிறுத்து! யுத்தத்தை நிறுத்து! யுத்தத்தை நிறுத்து!**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காணாமல் போகும் இளைஞர்களும் ஏரியில் மிதக்கும் சடலங்களும்

கொழும்பில் அண்மையில் தமிழ் இளைஞர்கள் காணாமல் போய்க் கொண்டிருக்கிறார்கள். மறுபுறத்தில் மர்மமான முறையில் ஆறுகளில் இளைஞர்களது சடலங்கள் கிடைத்து வருகின்றன. சடலங்கள் சிதைக்கப்பட்டதாலும், ஆற்று நீரில் உப்பியிருப்பதாலும் அவை யாருடையவை என அடையாளம் காணமுடியவில்லை.

இதேவேளை தமிழ் இளைஞர்கள் காணாமல் போனது தொடர்பாக சரிநிகருக்குக் கிடைத்த தகவல்கள் அரச படையினருக்கு உள்ள தொடர்பை ஊர்ஜிதப்படுத்துகின்றன. இதோ சில தகவல்களும் உண்மைகளும்.

### சின்னத்துரை பாஸ்கரன்

ஜூன் மாதம் 22ம் திகதி முற்பகல் பதினொன்றரை மணியளவில் எல்ஸ்பின்ஸ்ரன் தியேட்டருக்கருகில் சின்னத்துரை பாஸ்கரன் (26) ஓட்டோவில் சென்று கொண்டிருந்த போது விசேட அதிரடிப்படையினரால் மறித்து சோதனையிடப்பட்டுள்ளார். சோதனையிடப்பட்ட போது இவரிடம் 54ஆயிரம் பணமும் இருந்திருக்கிறது. பாஸ்கரனை மாத்திரம் நிற்கச் சொல்லிவிட்டு ஓட்டோவை அனுப்பி வைத்தனர். ஓட்டோ சாரதி பாஸ்கரனுடைய நண்பரர்கையால் அவர் ஹுசைனியா வீதியில் அமைந்திருக்கும் பாஸ்கரனின் வீட்டுக்குச் சென்று அவரின் மனைவியிடம் தெரிவித்திருக்கிறார். சாரதியுடன் உடனே சென்று மாளிகாவத்தை பொலிஸில் பாஸ்கரனின் மனைவி முறைப்பாடு செய்த போது ''விசேட அதிரடிப்படையினர் தான் பாஸ்கரனை கைது செய்தனர் என நிரூபிக்க முடியுமா?'' எனப் பொலிஸார் வினவியுள்ளனர்.

ஜூன் 27ம் திகதி நண்பகல் பாஸ்கரன் தொழிற்புரிந்த 'சண் வீடியோ' கடைக்கு (இது விவேகானந்தாக் கல்லூரிக்கருகில் உள்ளது) அரச இலச்சினை பொறிக்கப்பட்ட வெள்ளை நிற 'பிக்கப்' வாகனத்தில் வந்த சிலர் மேசையின் மீது ஒரு சிறிய பார்சலை வைத்து விட்டு சென்றுள்ளனர். அவர்கள் போனதன் பின்பு அப்பார்சலை பிரித்து பார்த்த போது பாஸ்கரன் அணிந்திருந்த கைக்கடிகாரம் கைக்குட்டையால் சுற்றப்பட்டு தபால் உறையில் இருந்திருக்கிறது. (அத்தபால் உறையில் சிங்களத்தில் பாஸ்கரனது பெயர் விலாசம் என்பன தட்டச்சு செய்யப்பட்டிருந்தது) அவரது மனைவி அதனை தனது கணவனது பொருட்களே என அடையாளம் காட்டினார். இதுவரை பாஸ்கரன் பற்றிய தகவல்கள் எதுவுமேயில்லை.

### சண்முகநாதன், துருபரன்

கொட்டாஞ்சேனை வீதியில் மாரியம்மன் கோவிலுக்கு முன்னால் இருக்கின்ற சோமா கபேயில் காலை உணவு சாப்பிடுவதற்காக (7 மணிக்கும் 8 மணிக்குமிடையில்) சென்ற ஐயாவு சண்முகநாதன் (வயது-26) கிட்ணபிள்ளை துருபரன் (வயது 27) ஆகிய இரு இளைஞர்களும் கடைக்கு உள்ளே சென்றிருந்த போது லேண்ட் றோவரில் வந்த ஆயுதம் தாங்கிய படையினர் உள்ளே புகுந்து இருவரையும் ஏற்றிச் சென்றுள்ளனர்.

சண்முகநாதன் எனும் இளைஞர் கொட்டாஞ்சேனை சுப்பர் மார்கட்டில் சில்லறை கடையொன்றில் வேலை பார்த்து வரும் சாதாரண இளைஞர். துருபரன் எனும் இளைஞர் கொட்டாஞ்சேனை வாசல வீதியில் அமைந்துள்ள 'வாசல கொம்யூனிகேஷன்'இல் வேலை பார்த்து வருபவர். இவர்கள் இருவரைப் பற்றிய தகவல்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. இவர்களது பெற்றோர்கள் தொடர்ந்து தேடி அலைந்த வண்ணமுள்ளனர்.

### கொலின்

ஜூன் மாதம் 4ஆம் திகதி கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்துக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த மரிசீலன் மைக்கல் கொலின் (வயது -21) எனும் இளைஞர் தேவாலயத்துக்கு முன்னால் வெள்ளை வேனில் வந்த இராணுவத்தினரால் கொண்டு செல்லப்பட்டுள்ளார். இவரைப்பற்றிய தகவல்களும் இதுவரை எதுவுமில்லை.

இதேபோல் ஜூன் மாதம் 26ம் திகதி மட்டக்குளியில் கைதான துரைசிங்கம் மரினா மற்றும் தெமட்டக்கொடையில் கைது செய்யப்பட்ட செல்வராஜா பிறிஸ்தியன் ஆகியோர் பற்றியும் இதுவரை எந்த தகவலும் இல்லையெனத் தெரிகிறது.

இவர்கள் கைது செய்யப்பட்டது அல்லது கடத்தப்பட்டது ஏன்? எங்கு வைக்கப்பட்டுள்ளனர்? எப்போது விடுதலை செய்யப்படுவார்கள்? உயிருடன்தான் இருக்கிறார்களா? போன்ற உறவினர்களது எந்தக் கேள்விக்கும் இதுவரை எதுவித பதிலும் இல்லை.

ஆனால் ஆறுகளில் மிதந்து வருகின்றன சிதைக்கப்பட்ட பல இளைஞர்களது சடலங்கள் என்பதும் அதிற்பல தமிழர்களது என்பதும் மட்டும் தெரிகின்றது. அண்மையில் வெளியான சிங்கள மாற்றுப் பத்திரிகைகளான ஹிரு, யுக்திய ஆகிய பத்திரிகைகள் கூட இது அரச படையினரின் வேலை என தலைப்புச் செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

''கண்டெடுக்கப்படுகின்ற சடலங்களைப் பற்றிய செய்திகளை தவிர்க்க முடியாமல் பல சிங்களப் பத்திரிகைகள் வெளியிடுகின்ற போதும் அவை தமிழர்களது என்று சொல்லத் தயங்குவது தெரிகிறது!

எப்படியிருந்தபோதும் காலாவதியாகிப் போன காணாமல் போனோர் கமிஷன்கள் காணாமல் போய்விட்ட வழக்கமான நிலையினூடே வழமையான .....

**என்.எஸ். குமரன்**

# நெடுந்தீவு அரசாங்க அதிபர் கொலையா? தற்கொலையா?

''நெடுந்தீவு அரசாங்க அதிபர் பிரான்ஸிஸ் நிக்கலஸ் தற்கொலை செய்து கொண்டு இறந்தார்'' எனும் செய்தி சில நாட்களுக்கு முன் வந்திருந்தது. ஆனால் சரிநிகருக்கு அவரது உறவினர் ஒருவர் மூலமாக கிடைத்திருக்கும் தகவல்கள், அவை திட்டமிடப்பட்ட கொலையே என்று இப்போது தெரிவித்திருக்கின்றன.

அத்தகவலின்படி நெடுந்தீவுக்கான அரசாங்க அதிபராக பிரான்ஸிஸ் நிக்கலஸ் நியமிக்கப்பட்ட புதிதில் அங்கு அதிகாரம் கொண்டிருக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியடன் ஓரளவு இணங்கியே தனது கடமையை ஆற்றி வந்திருக்கிறார் என்ற போதும் சிறிது காலத்திற்குள்ளேயே ஈ.பி.டி.பியினரின் இம்சைகள் தாங்க முடியாது முரண்பட்டிருந்தார் என்றும், தொடர்ச்சியாக நிக்கலஸ்ஸிற்கும் ஈ.பி.டி.பியினருக்கும் இடையில் தகராறு ஏற்பட்டிருந்ததாகவும் அத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யூன் மாதம் 8ஆம் திகதி பி.ப.3.00 மணியளவில் நிக்கலஸின் வீட்டுக்குள் புகுந்த ஈ.பி.டி.பியினர் விசாரணை செய்ய வேண்டுமெனக் கூறி நிக்கலஸை அழைத்துள்ளனர். அவர்களோடு செல்ல மறுத்துள்ள அவர் வாக்குவாதப்பட்டதும் ஈ.பி.டி.பியினர் திரும்பிச் சென்றுவிட்டனர் என்ற போதும், அன்று இரவு 9.00 மணியளவில் மீண்டும் அவரது வீட்டுக்குச் சென்ற ஈ.பி.டி.பி.யினர் வெல்லையில் அதாவது நெடுந்தீவின் தென்பகுதி கடற்கரையில் படகு வந்து நிற்பதாகவும், அப்பகுதிக்கு பொறுப்பான கிராமசேவையாளர் சண்முகலிங்கமும் பாடசாலைக்கு வெளியே வந்து நிற்பதாகவும் விசாரணைக்கு அல்ல அழைக்கிறோம் என்றும் கூறி கூட்டிச் சென்றுள்ளனர். ஆனால், அப்படியெதுவும் நடக்கவில்லை. மாறாக ஈ.பி.டி.பியின் அலுவலகம் அமைந்திருக்கும் முன்னாள் பொலிஸ் நிலையத்திற்கு அவர் கொண்டு செல்லப்பட்டு மிகவும் கோரமாக தாக்கப்பட்டிருக்கிறார். ஆத்திரமும் வேதனையும் தாங்கமுடியாது அவர் ''தொம்மையப்பரே என்னை காப்பற்ற யாரும் இல்லையா'' என்று கதறியிருக்கிறார். சத்தமிட்டுக் கொண்டே அவர்களை தள்ளிவிட்டு ஓட அவர் முயன்றபோது அவரை விரட்டிப் பிடித்த ஈ.பி.டி.பி.யினர் அவரை அடித்தே கொன்றிருக்கின்றனர். இதை வீதிக்கு மறுபுறம் அமைந்திருக்கும் வீடுகளில் இருந்து சிலர் நேரடியாகப் பார்த்துமிருக்கின்றனர். இவரது அபயக்குரல் கேட்டும் உதவிக்கு யாரும் செல்ல முடியவில்லையாம். இரவு 1 மணியளவில் அவரது உடலை கொண்டு சென்று வீட்டில் கொடுத்த ஈ.பி.டி.பியினர் நிக்கலஸ் தூக்கு போட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டார் எனக் கூறியுள்ளனர்.

கன்னம், கழுத்து, தலை போன்ற பகுதிகளில் மிக மோசமான காயங்கள் இருந்திருக்கின்றன. தற்கொலை செய்து கொண்டவரின் உடம்பில் எப்படி இக் காயங்கள் ஏற்பட்டது எனும் கேள்விகளுக்கு பதில் சொல்ல யாரும் இல்லை; ஏன் கேட்கக் கூட யாரும் கிடை யாது என்கிறார் சரிநிகருக்கு தகவல் தந்த நிக்கலஸின் உறவினர்!

# தேவை ; ஒரு தற்காப்பு யுத்தம்

ஜூன் 28ஆந் திகதி அதிகாலை மண்டைதீவின் மீது புலிகள் நடத்திய தாக்குதலினால் இலங்கை அரசாங்கத்தின் இராணுவம் படு தோல்வியடைந்துள்ளது என்பது தற்போது விவாதத்திற்கிடமற்றதாகும்.

அதற்கு நான்கு திணங்களிற்கு முன் தீவு மீது தாக்குதலொன்று நடத்தப்படும் என இராணுவ இர்கசிய புலனாய்வுப் பிரிவு தெரிவித்திருந்ததாகத் தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி ஜூன் 27ஆந் திகதி அவ்வாறான தாக்குதலொன்றிற்கு முகங்கொடுக்கக் கூடிய யுத்த - முன் பயிற்சியொன்று நடத்தப்பட்டதாகத் தெரிய வருகிறது.

தீவு மீது நடத்தப்பட்ட தாக்குதலில் புலிகளின் படைப் பிரிவுகள் பிரதிகூலமான நிலப் பரப்பொன்றிலேயே இருந்தன. அதாவது ஆழமற்ற கடலிலாகும். இலங்கை அரசாங்கத்தின் படைப்பிரிவுகள் நன்கு உறுதியான அகழிகளுடன் கூடிய நிலப்பரப்பிலேயே இருந்தன. தாக்குதல் நடத்தியோர் சிறு படகுகளில் கடல் வழியாகவே வந்திருக்க வேண்டும்.

மண்டைதீவுப் பாதுகாப்பிற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தது யுத்தத்தில் கூர்மையடைந்த படைப் பிரிவொன்று அல்லவென இப்போது தெரியவருகிறது. தாக்குதலின் முதற் சுற்றிலேயே பெரும்பான்மையினர் போராட்டத்தைக் கைவிட்டுத் தப்பி ஓடினர்.

துணைப் படைப் பிரிவுகளை அனுப்ப இலங்கை அரசாங்கத்தின் இராணுவத் தளபதிகளுக்கு நேர காலம் தேவைப்பட்டது. புலிகளின் விமான எதிர்ப்புத் துப்பாக்கிக் குழுக்கள் திரும்பவும் யாழ்ப்பாணம் செல்லும் வரை விமானப் படை தனது விமானங்களை பயன்படுத்துவதைத் தவிர்த்திருந்தன. தாக்குதல் நடத்தப்பட்டது கடலினால் எனத் தெரிந்திருந்தும் கடற்படையினால் செய்யக்கூடிய எதனையும் பற்றி அறிய முடியவில்லை.

மூன்றாம் ஈழப் போரின் ஆரம்பம் முதலே இத்தகைய யுத்த நிலைமையே இருந்து வருகிறது. யுத்த களத்தில் பலச் சமநிலை இலங்கை அரசாங்கத்திற்குப் பாதகமானதாகவே தொடர்ந்தும் இருந்து வருகிறது.

புலிகளின் விமான எதிர்ப்புத் தாக்குதல் படைப் பிரிவைக் கருத்திலெடுக்காது பறக்க முடியுமென விமானப் படைத் தலைவர்கள் ரூபவாஹினீயில் கூறிய கதைகள் இதனூடாகப் பொய்யாக்கப்பட்டுள்ளன. கடற் புலிகளின் பலத்துடன் மோதக் கடற் படைக்கு ஒன்றில் முடியாது, அல்லது அது அதில் தோல்வியடைந்துள்ளதெனக் கருதப்படுகிறது.

ஆகக் குறைந்தது புலிகளின் யுத்த பலத்திற்கும் தற்காப்பு யுத்தமொன்றினாலாவது பதில் கொடுக்க இலங்கை அரசாங்கத்தின் யுத்த பலம் இன்னும் வெற்றி பெறவில்லை.

இந்நிலைமை ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கக் காலத்தில் இருந்த நிலைமையை ஒத்தது. தற்போது நடைபெறவுள்ளது. யுத்த களத்தில் முகங்கொடுக்கும் தோல்விகள் குறைத்துக் கொள்ளத் தவறாது தென்பகுதியில் யுத்த மனநிலையை வளர்த்தெடுப்பதற்கே உதவப் போகிறது.

யுத்தத்தை நோக்கியோ, சமாதானத்தை நோக்கியோ அரசாங்கத்தின் கொள்கைகள் இன்னுமே ஒருமைப்பட்ட வேலைத்திட்டமொன்றுக்கு வர யுத்த அமைச்சர் இன்னும் பிரதான அமைச்சுக்கள் இரண்டின் அமைச்சர் பதவியை வகிக்கிறார்.

இன நல்லிணக்க அலுவல்கள் பிரதி அமைச்சரைக் காணக் கிடைக்கவில்லை. அரசின் பொதுசனத் தொடர்பு சாதனங்களுக்கும் பொதுசனத் தொடர்பு சாதன அமைச்சருக்கிடையிலும் தொடர்புகள் எதுவும் இல்லைப்போலுள்ளது.

புலிகள் தற்போது நேர காலம் பார்த்து பூநகரி போன்ற இராணுவ முகாமொன்றின் மீது முற்றுகையிட்டுத் தாக்குதல் ஒன்றை நடத்துவர் என்பது தற்போது அநேக இராணுவ அரசியல் விமர்சகர்களின் கருத்தாகும். சில வேளைகளில் அவ்வாறான போராட்டமொன்று மூன்றாம் ஈழப் போரின் தீர்மானகரமான போராட்டமாக மாற இடமுள்ளது. அவ்வாறான போராட்டமொன்றின் தோல்வியொன்றினால் தெற்கிலும் வடக்கிலும் இராணுவ சமநிலை மட்டுமன்றி அரசியல் சமநிலையும் இரு சாராரினதும் தீவிரவாத சக்திகளைப் பலப்படுத்தும்படி மாற்றமடையும்

அவ்வாறு நடைபெற்றால் சந்திரிகா அரசாங்கத்தின் சமாதானம், ஜனநாயகம் தொடர்பான அரசியல் திட்டம் மீண்டும் எழுந்திருக்க முடியாதளவிற்கு ஆபத்திற்கு உட்பட நிறையவே இடமுள்ளது.

நாம் சொல்வது இதுதான். அரசாங்கத்தின் தலைவர்களே! யுத்த களத்தின் நிலைமை மிக அபாயமானதாகும். யுத்த களத்தில் தொடர்ந்தும் தோல்வியுறும் அரசாங்கமொன்றிற்கு அரசியல் தீர்வொன்றிற்காக இந்நாட்டு மக்களை அழைக்க முடியாது. அதுமட்டுமன்றி அரசியல் தீர்வொன்றை முன் வைத்தாலும், அதனை நடைமுறைப்படுத்த முடியாது.

நாம் யுத்தவாதிகள் அல்லர். ஆனாலும் புலிகளின் யுத்தத் தாக்குதல்கள் மத்தியில் தற்காப்பு யுத்தமொன்று 'அவசியமானதெனக் கூறுகிறோம். அது பரந்த சமாதான மூலோபாயத்தின் ஒரு முக்கிய பிரிவாகும் என நம்புகிறோம்.

யுத்த களத்தில் நடைபெறும் பாரதூரமான தோல்விகளைத் தவிர்த்துக் கொள்ள முடியாவிடின் அரசாங்கத்தினால் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது என்பதும் அதேயளவு உண்மையாகும்.


**ஆசிரியர் தலையங்கம் -யுக்தியவில் -1995-07-09**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஏறாவூர் பெண்ணும் சிறுவனும் கொலை! -நடந்த கதை இது!



சாரங்கன்

ஏறாவூரில் கடந்த வாரம் முஸ்லீம் பெண் ஒருவரும், ஒரு சிறுவனும் பொலிசாரால் கோரத்தனமான முறையில் கொலை செய்யப்பட்டனர். இதை எதிர்த்து ஊர்வலம் சென்ற மக்கள் மீதும் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். பலர் காயமடைந்துள்ளனர்.

எறாவூர் நகர பிரதேச செயலாளர் பிரிவின் கிழக்கு எல்லையாக அமைந்துள்ள கிராமம் சதாம் ஹுசைன் கிராமமாகும். இக்கிராமம் ஈராக்கிய அரசாங்கத்தால் ஏறாவூர் முஸ்லீம் மக்களுக்கென அமைத்துக் கொடுக்கப்பட்ட 100 வீடுகளைக் கொண்டது. இக்கிராமத்தின் ஒரு எல்லையாக தளவாய் என்னும் தமிழ்க் கிராமம் இருக்கின்றபடியாலும், 1990ம் ஆண்டில் இக்கிராமத்தினூடாகவே புலிகள் ஏறாவூருக்குள் வந்து முஸ்லீம் மக்களைச் சுட்டுக் கொன்றனர் என்ற காரணத்தினாலும் சதாம் ஹுசைன் கிராமத்தில் 1990ம் ஆண்டு தொடக்கமே பொலிஸ்காவல் அரண்கள் அமைக்கப்பட்டிருந்தன. இவ்வாறான காவல் அரண் ஒன்றில் இருந்த பொலிசாராலேயே பகீரா என்ற 26 வயது இளம் பெண் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பின் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இக்கிராமத்தில் அமைந்துள்ள வீடுகள் அனைத்தும் சற்றுத்தூரத் தூர அமைந்திருந்த காரணத்தினால் வேறொருவரையும் உதவிக்குக் கூட கூப்பிட முடியாத நிலையில் பரிதாபகரமாக பகீரா என்ற பெண்ணும் அவருடன் துணைக்காகத் தங்கியிருந்த ஜுனைட் றிஸ்வி என்ற 9 வயது சிறுவனும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இக்கொலையைச் செய்தவர் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உடுகம்பொல என்னும் பொலிஸ்காரர் ன்றெு சொல்லப்படுகிறது. கொலை செய்யப்பட்ட பெண்ணின் வீட்டுக்கருகிலேயே பொலிஸ் காவல் அரண் அமைக்கப்பட்டிருக்கின்றது. கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவன் கடந்த இரண்டு வருடங்களாக மத்திய கிழக்கில் வேலை செய்து கொண்டிருக்கின்றார். பகீராவும், ஃபர்சானா என்று அழைக்கப்படும் அவருடைய இரண்டு வயது மகளும் தனியாகவே இவ்வீட்டில் வசித்து வந்துள்ளனர். இந்நிலையில் இவருடைய வீட்டிற்கருகாமையில் இருக்கும் பொலிஸ் காவல் அரணுக்கு காவலுக்கு வரும் பொலிசார் இப்பெண்ணுக்குத் தொல்லை கொடுப்பதும், அவரைச் சீண்டுவதும் தொடர்ந்து நடந்து வந்துள்ளது. இதன் காரணமாக இப்பெண் தன்னுடன் தன்னுடைய அக்காவின் மகனாகிய ஜுனைட் றிஸ்வி என்ற சிறுவனை துணைக்கு வைத்திருந்தார். இவருடைய தாயாரும் அண்மையிலேயே தனது கணவனை இழந்த காரணத்தினால் இஸ்லாமிய மார்க்க ஆசாரங்களின்படி ''பர்தா'' வில் இருந்துள்ளார். 'உடுகம்பொல என்ற பொலிஸ்காரர்தான் தொடர்ந்து இப்பெண்ணைத் தொந்தரவு செய்பவராக இருந்திருக்கிறார்.

சம்பவம் நடந்த தினத்தன்று முன்கூட்டியே பல முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப் பெண் குடியிருந்த வீட்டின் குளியலறை வீட்டுடன் இணைந்ததாகவும், இலகுவில் உட்செல்லக் கூடியதாகவும் இருந்த காரணத்தினால் சம்பவம் நடந்த அன்று பகல் வேளையில் அவ்வீட்டினுள் பிரவேசித்த உடுகம்பொல, மின்சார இணைப்புக்களைத் துண்டித்துள்ளார். பின்னர் இதே உடுகம்பொலவும் வேறு இரு பொலிசாரும் அதே குளியலறை வழியாக உட்புகுந்து வீட்டினுள் ஒளிந்திருக்கின்றனர். மாலை வேளை வீட்டிற்கு வந்த பகீரா வீட்டில் மின்சாரம் இல்லாததைக் கவனித்துவிட்டு நேரத்துடன் படுக்கைக்குச் செல்லும் நோக்கில் கதவுகளைச் சாத்தியிருக்கிறார். அச்சமயம் வீட்டினுள் ஏற்கனவே ஒளிந்திருந்த பொலிஸ்காரர் இப்பெண்ணைப் பாலியல் வல்லுறவு செய்துள்ளனர். தகவல் வெளிவராமல் இருக்க பகீராவைக் கொலை செய்து விட்டனர்.

இவை அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த 9 வயது சிறுவனான ஜுனைட் றிஸ்வியையும் கொலை செய்துவிட்டு வந்தவழியே வெளியேறி விட்டனர். பொலிசார் வெளியேறிச் சென்றபின் இப்பெண்ணின் 2 வயது மகளான ஃபர்சானா சற்றுத் தூரத்தில் இருந்த பக்கத்து வீட்டுக்கு அழுது கொண்டு சென்றிருக்கின்றாள். பக்கத்து வீட்டுக்காரர் என்ன என்று கேட்டதற்கு உம்மா, நானா என்று கூறிவிட்டு அழுதவாறு திக்பிரமை பிடித்தவள் போல் இருந்திருக்கின்றாள். சந்தேகம் கொண்ட அயலவர்கள் குழந்தையைக் கூட்டிக்கொண்டு சென்று பார்த்தபோது பகீராவும், ஜுனைட் றிஸ்வியும் படுகொலை செய்யப்பட்டிருப்பது தெரிய வந்தது. சற்று நேரத்தில் கிராமம் முழுவதும் அல்லோலகல்லோலப்பட்டது.

கிராமத்தினுள் புலிகள் தான் வந்து விட்டனர் எனப் பயந்த இக்கிராம மக்கள் தங்கள் குழந்தைகளை சமயலறையினுள் மறைத்து அவர்கள் மேல் விறகுகளை அடுக்கி வெளியே தெரியாமல் செய்து விட்டு, வருகின்ற புலிகள் தங்களை மட்டும் கொலை செய்யட்டும் என வீதிக்கு வந்து விட்டனர். சிறிது நேரத்தில் குழப்பம் புலிகளினால் அல்ல, 'பகீரா' கொலையுண்டமையாலேயே ஏற்பட்டது என அறிந்து கொண்டனர். இதற்கிடையில் குழந்தையிடம் இருந்து ஒரு சில வார்த்தைகளின் மூலம் தாயையும், சகோதரனையும் கொலை செய்தது பொலிசார்தான் என்பதைக் கிராம மக்கள் புரிந்து கொண்டனர்.

ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் இதுபற்றி முறையிடப்பட்டபோது அதை அவர் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. புலிகள் செய்திருப்பார்கள் என்று சொல்லிச் சமாளித்துவிட்டார்கள். ஆனால் பொது மக்களோ தவறாமல் பொலிசார்தான் கொலை செய்திருக்கின்றார்கள் எனக் கூறி நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்தியபோது நடவடிக்கை எடுப்பதாக ஒப்புக்கொண்டு, கொலை செய்யப்பட்ட பெண்ணான பகீராவுடன் நீண்ட நாட்களுக்கு முன்பு மனஸ்தாபப்பட்ட றஃமான் என்னும் ஊர்காவல் படை வீரரை கைது செய்துள்ளனர். அத்தோடு றஃமான்தான் சம்பவம் நடந்த அன்று தனக்கு 3 மணித்தியாலயம் லீவு தரவேண்டும் என்று கூறி நச்சரித்ததாகவும், இக்கொலையைச் செய்வதற்குத்தான் லீவு எடுத்துள்ளார் என கொலை செய்த உடுகம்பொல முன்னின்று கூறியுள்ளார். ஆனால் பொது மக்கள் இதை நம்பத் தயாராக இல்லாத காரணத்தினாலும் கொலை செய்த பொலிஸ்காரரை இறந்த பெண்ணின் குழந்தை மூலம் இனம் கண்டுவிட்ட காரணத்தினாலும் மறுநாள் ஏறாவூரில் பொலிசாருக்கெதிராக ஊர்வலமும், கடையடைப்பும் மேற்கொள்ளப்பட்டது. கொலை செய்த பொலிசார் தண்டிக்கப்பட வேண்டும் என்றும், கைது செய்யப்பட்ட ஊர்காவல் படைவீரர் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் உரிய நடவடிக்கை எடுக்காத பொலிஸ் பொறுப்பதிகாரி உடன் இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என்றும் பொது மக்கள் கோஷமிட்டனர். இதற்கிடையில் அன்று ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் இருந்து எந்தவொரு பொலிசாரும் வெளியில் கடமைக்கு அனுப்பப்படவில்லை. பொது மக்களின் ஆர்ப்பாட்டங்களையடுத்து தளவாய் கிராமத்தில் இருந்த பொலிசார் மேலதிகமாக ஏறாவூர் பொலிஸ் நிலையத்திற்கு வரவழைக்கப்பட்டு பொதுமக்களின் மீது தாக்குதல் நடாத்துமாறு உத்தரவிடப்பட்டது. பொது மக்களுக்கெதிராகப் பொலிசார் மேற்கொண்ட தாக்குதலில் பலர் காயமடைந்தனர். இறுதியில் பொது மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதனால் வெள்ளைத்தம்பி அப்துல் காதர் (36) கொல்லப்பட்டார். ஏனைய 9பேர் சூட்டுக்கு இலக்காகினர். இச்சமயம் அங்கு வந்த ஐ.தே.க, பாராளுமன்ற உறுப்பினர் அலிசாகிக் மௌலானா உடனடியாக மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகருடன் தொடர்பு கொண்டு உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரியதையடுத்து இராணுவத்தினர் கடமைக்கு அழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. கைது செய்யப்பட்ட ஊர்காவல்படைவீரர் விடுதலை செய்யப்பட்டு அப் பொலிஸ் நிலையப்

→ 15இல்

# மட்டக்களப்பு: தமிழ் - முஸ்லீம் விரோதத்தை வளர்க்க அரசபடைகள் முயற்சி



-சா

மட்டக்களப்பில் இலங்கை அரசின் படைகள் தங்களுடைய முகாம்கள் தாக்கப்பட்டால் பதில் தாக்குதல் நடாத்துவது சுற்றியுள்ள அப்பாவிப் பொது மக்கள் மீது என்ற நிலை தொடர்கிறது. அண்மையில் நடாத்தப்பட்ட தரவைக் குளம் இராணுவ முகாம் தாக்குதலில் இருந்து ஜூலை 2 இல் வந்தாறுமூலையில் இடம்பெற்ற தாக்குதல்கள் வரை இது நன்கு நிரூபிக்கப்பட்டாகிவிட்டது. இதற்கும் அப்பால் கடந்த மாதம் ஒருவித சம்பவங்களும் நடைபெறாமலே மட்டக்களப்பு நகர் முழுவதும் தொடர்ந்து 12 மணித்தியாலங்களுக்கு மேல் பொலிஸ் மற்றும் இராணுவ நிலைகளில் இருந்து பொது மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி மிக மூர்க்கமான முறையில் தாக்குதல் நடாத்தப்பட்டது. இந்நிலை ஆரம்பத்தில் இருந்து தொடர்ந்தாலும் 3ம் கட்ட ஈழப் போருக்குப் பின்பு இது தீவிரமடைந்துள்ளது.

1990ம் ஆண்டின் பிறகு முஸ்லீம்களுக்கெதிராக விடுதலைப் புலிகளினால் நடாத்தப்பட்ட கோரமான தாக்குதல்களின் வடுக்கள் இன்னும் மறையாத நிலையில் மீண்டும் இவ்வாறானதொரு நடவடிக்கையைத் தூண்டும் வகையில் அரசபடையினர் இயங்கி வருவது இன்று அம்பலப்பட்டுப் போயுள்ளது. அண்மையில் காத்தான்குடியில் இருந்து முஸ்லீம்கள் அனைவரும் குறித்த காலக்கெடுவுக்குள் வெளியேற வேண்டும் என புலிகள் அறிவித்துள்ளதாக வெளியிடப்பட்ட கடிதமும், அண்மையில் ஏறாவூரில் முஸ்லீம் பெண்ணையும் சிறுவன் ஒருவனையும் கொலை செய்துவிட்டு அதை விடுதலைப் புலிகள்தான் செய்தார்கள் என செய்யப்பட்ட பிரசாரமும் திட்டமிட்ட முறையில் முஸ்லீம் மக்களை தமிழ் மக்களுக்கு எதிராக திருப்ப அரசபடைகள் எடுத்த முயற்சி என்பது இப்போது தெரியவந்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லீம் ஊர்காவல் படைகளை அமைத்து அதைத் தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்த திட்டமிடப்பட்ட முயற்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து இவ்வாறான நடவடிக்கைகள் அரச படைகளினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மறுதரப்பில், புலிகளின் நிலைப்பாட்டை நோக்கும்போது எப்படியாவது கிழக்கில் தமக்கென ஒரு நிரந்தரமான தளத்தை அமைக்க வேண்டும் என்பதிலும், அத்தளத்தை மட்டக்களப்பு மாவட்டத்தின் வட மேற்கில் காட்டுப்பிரதேசத்தை அண்டியதாக அமைக்க வேண்டும் என்பதிலும் முக்கிய குறியாகக் கொண்டு தமது தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இராணுவத்தினரை எந்தெந்த உபாயங்களுக்கூடாகவெல்லாம் தாக்கமுடியுமோ அவ்வாறெல்லாம் தாக்கி வருகின்றார்கள். இதில் பொதுமக்களின் இழப்புகளை வழமைபோலவே புலிகள் கவனத்தில் எடுக்கவில்லை. இவ்வாறான புலிகளின் தாக்குதலின் விளைவாக வாகரையை மையப்படுத்திய பரந்த காட்டுப்பகுதி இன்று புலிகளின் முழுக் கட்டுப்பாட்டில் வந்துள்ளது. இப்பகுதிகளில் இருந்த அரசபடைகளின் முகாம்கள் அனைத்தும் வாழைச்சேனைக்கு நகர்த்தப்பட்டுள்ளன. புலிகள் தமது பாதுகாப்பு நிலைகளை அமைத்துக் கொண்டு தமது செயற்பாடுகளைத் தொடர்கின்றனர். இப்பகுதியில் முன்னர் அரசபடையினர் இருந்த போது உணவுப் பொருட்களை மிகச் சொற்ப அளவில் எடுத்துச் செல்ல அனுமதித்த படையினர் தற்போது அதையும் தடுத்து விட்டனர். இதனால் வாகரை மக்கள் உணவுப் பொருட்களைப் பெறுவதற்கு மிகுந்த சிரமப்படுகிறார்கள். ஆனால் வாழைச்சேனை பிரதேசத்தில் உள்ள இராணுவ முகாம்களைச் சுற்றி யிருக்கும் கிராமமக்கள் அனைவரையும் இரவு வேளைகளில் அரசபடையினர் தங்கள் முகாம்களைச் சுற்றித் தங்கவைக்கும் வேலையைச் செய்து வருகின்றனர். இதன் காரணமாக கிரான், சந்திவெளி, சித்தாண்டி, முறக்கொட்டாஞ்சேனை ஆகிய கிராம மக்கள் தங்கள் கிராமங்களை விட்டு வெறியேறி மட்டக்களப்பு நகரில் உள்ள தமது உறவினர்களிடம் தஞ்சம் புகுந்துள்ளனர்.

புலிகளின் தாக்குதல்கள் அதிகரிக்க அதிகரிக்க அரசபடையினரும் இவ்வாறான நடவடிக்கைகளைப் பரவலாக்கிக் கொண்டே செல்கின்றனர்.

இதேவேளை படையினர் தற்போது புதிய அறிவிப்பு ஒன்றைச் செய்துள்ளனர். படையினர் தற்போது பயன்படுத்திவரும் பொதுமக்களின் வீடுகளை கையளிக்கத் தயாராய் இருப்பதாகவும், உரியவர்கள் விரும்பினால் வீட்டில் வந்து குடியிருக்கலாம் என்றும் அறிவித்துள்ளனர். இதுவும் கூட முகாம்களுக்கு பக்கத்தில் பொது


தொடர்ச்சி பக்கம் 15இல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யுத்தம் மூலம் சமாதானம் சாத்தியமில்லை



குமுது குஸும் குமார, ''மாவத்த'' எனும் முன்னோடி அரசியல், கலாசாரச் சஞ்சிகையின் இணையாசிரியர்களில் ஒருவராகப் பணிபுரிந்தவர். இப்போது சமூகக் கோட்பாடுகள் (Social Theory) எனும் துறையில் கனடா யோர்க் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்திற்கென ஆய்வு செய்து வருகிறார்.

அரசாங்கம் உறுதியளித்திருந்த தீர்வுத்திட்டம் இன்னும் மக்கள் முன் வைக்கப்படவில்லை. அரசாங்கத்தின் ஒரு பகுதியினர், எல்லாத்தரப்பிலும் இணக்கப்பாடு எய்தும் வரைக்கும் தீர்வுத்திட்டத்தை வெளியாகுவதை எதிர்க்கிறார்கள். மறுபுறத்தில் தமிழ் அரசியல் கட்சிகளும், பொ.ஐ.மு. கூட்டணியின் சில கட்சிகளும் தீர்வுத் திட்டத்தை முன்வைக்கும்படி கேட்கிறார்கள். எல்லாத் தரப்பிலும் இணக்கப்பாடு என்பதைக் காரணம் காட்டி அரசியல் தீர்வுத்திட்டத்தை முன்வைப்பதில் தாமதம் காட்டி வருகிற அதே நேரம் யாழ்ப்பாணம் மீதான முழு அளவுத் தாக்குதலுக்குத் தயாரிப்புகளையும் செய்வது என்பது அரசாங்கம் தோல்வியை நோக்கி நகருகிற முதலாவது படியாகும்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற வேண்டும் என்னும் அவா ராணுவத்தின் சில தரப்பினரிடையேயும், பிரதானமான பத்திரிகைகளிடமும் சிங்கள இனவாதிகளிடமும் பரவலாகக் காணப்படுகிறது. யுத்தமோகிகள் இத்தகைய திட்டங்களை முன்வைக்கிற போது அரசாங்கத்திற்கு அவற்றை இனங்கண்டு கொள்வதில் சிரமம் இருக்காது. ஆனால் சமாதானத்தின் பெயரால் இத்தகைய ஆலோசனைகள் முன் வைக்கப்படுகிற போதே அரசாங்கம் திசை கெட்டுச் செல்லச் சாத்தியங்கள் உள்ளன. சமாதானத்தை ஏற்படுத்துவது என்ற பெயரில் முன்வைக்கப்படும் யுத்த நோக்கிலான திட்டங்களின் அபாயங்களைப் பற்றிச் சுட்டிக் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கம்.

### யுத்தம் மூலம் சமாதானம்?

இத்தகைய திட்டங்களின் மையம் இது தான்:

தீர்வுத்திட்டம் உடனடியாக வெளியிடப்பட வேண்டும். இத்திட்டம் வடக்கு-கிழக்கு மக்களின் நம்பிக் கையை அரசாங்கத்துக்குப் பெற்றுத்தரும். புலிகள் ஒருபோதும் சமாதானத்துக்கு வரமாட்டார்கள் என்பதால் அவர்களை அழிக்க யாழ்ப்பாணம் மீது படையெடுப்பு நடத்த வேண்டும். புலிகளை அழித்த பிற்பாடு வடக்கில் தீர்வுத்திட்டத்தை அமுல்படுத்தலாம், கூடவே சமாதானமும் ஏற்படும்.

இந்தத் திட்டத்தின் அடிநாதமாக இருக்கும் தந்திரோபாயம் என்னவென்றால் முதலில் சமாதான அரசியல் தீர்வுத் திட்டம்; பிறகு புலிகளை அழிக்க யுத்தம். இது வடக்குத் தமிழ் மக்களைப் புலிகளிடம் இருந்து பிரித்துச் சமாதானம் நோக்கி வென்றெடுப்பதாகும். இந்த நோக்கில்தான் பேச்சுவார்த்தைகளையும் அரசாங்கம் நடத்தியிருக்கிறது என்று தோன்றுகிறது. இந்தத் திட்டத்தின்படி தமிழ் மக்கள் சமாதானத்தை விரும்புகிறார்கள்; ஆனால் புலிகள் அல்ல. எனவே சமாதானக் கரத்தைத் தமிழ் மக்களுக்கு நீட்டி அவர்களைப் புலிகளிடம் இருந்து பிரித்து விட வேண்டும். அப்படிப் பிரித்து விட்டால் புலிகளை ராணுவ ரீதியாக அழிப்பது சுலபம். சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது அரசாங்கத்தின் உள்நோக்கமாக இருந்தது இந்த அம்சம்தான் என்றால் அது புலிகளை அரசியல் தற்கொலை செய்யும்படி கேட்பதற்குச் சமனானதாகும். புலிகள் கழுத்தில் சயனைட் அணிந்திருப்பதால் அவர்களை இலகுவாக தற்கொலை நோக்கித் தள்ளிவிடலாம் என்று கருதினார்களோ என்னவோ!!!

கடந்த பன்னிரண்டு வருடங்களாக யுத்தத்தை அனுபவித்து வரும் தமிழ் மக்கள் சமாதானத்துக்காக ஏங்குகிறார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. அதனால் மட்டுமே தமிழ் மக்களைப் புலிகளிடம் இருந்து பிரித்து வென்றெடுத்து விடலாம் என்று கருதுவது எந்தத் தர்க்கத்தின் அடிப்படையில் என்றுதான் தெரியவில்லை!

தமிழ் மக்களைப் புலிகளிடம் இருந்து வென்றெடுப்பது என்பது தீவிரமான பல நடைமுறைச் சிக்கல்களைக் கொண்டுள்ளது. இவற்றைப் புரிந்து கொள்ள முற்படுகிற போது புலிகளின் ஆதிக்க வாதத்துக்கு எதிரான எமது நிலைப்பாடு இப்புரிதலைச் செய்வதைத் தடுகக்க் கூடாது.

புலிகளுக்கு எதிரான ஒரு யுத்தத்தில் சாதாரண குடிமக்களைப் பிரித்தறியவே முடியாது என்பது எப்போதோ தெரிந்த விஷயம். அப்படிப் பிரித்துப் பார்க்கலாம் என்று வாதிடுபவர்களுக்கு 1987-90 காலப்பகுதியில் தென்னிலங்கை நிகழ்வுகள் நல்ல உதாரணமாக அமையும். ஐ.தே.க.அரசாங்கத்தின் கொலைக் குழுக்களால் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் ஜே.வி.பியை அழிப்பது என்ற பெயரில் கொல்லப்பட்டார்கள். புலிகளை அழிப்பது என்று யுத்தம் செய்வது ஆயிரக்கணக்கான பொதுமக்களைக் கொன்றொழிப்பதிலேயே முடியும்.

''முதலில் தீர்வுத்திட்டம் பிறகு யுத்தம்'' என்று வாதிடுபவர்கள் புலிகளை அழித்து விட்டால் சமாதானம் வந்து விடும் என்று எங்களை நம்பச் சொல்கிறார்கள். இன்னொருபுறமோ யுத்த நிபுணர்களும், ராணுவத் தந்திரோபாய வாதிகளும் எமக்கு அடிக்கடி சொல்லி வருவது என்னவென்றால் புலிகளை ராணுவரீதியாக ஒழிப்பது சாத்தியமேயில்லை. தேவையென்றால் அவர்களைப் பலவீனமாக்கத்தான் நம்மால் முடியும் என்பதாகும். இதுவும் கூட நீண்டகால யுத்தமொன்றின் மூலமே சாத்தியமாகும் என்று அவர்கள் சொல்கிறார்கள்.

ஏதாவது 'அதிசயம்' நடந்து புலிகளை முற்று முழுதாக அழித்து விடலாம் என்று ஒரு கதைக்கு வைத்துக் கொண்டாலும் யுத்தத்துக்கு ஒரு றுதி முடிவு வரும் என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை. இவ்வகையான திட்டங்களை நாம் எதிர்ப்பதன் காரணம் ஏராளமான மனித அழிவுகளை ஏற்படுத்தும் என்பதனால் எழுகிற நியாயபூர்வமான கோபம் மட்டுமல்ல.

இத்தகைய நடவடிக்கைகள் ஏற்படுத்தப்போகும் பாதிப்புகள் பல தலைமுறைகளுக்கு இலங்கையின் சமூகங்களுக்கிடையே சமாதான சகவாழ்வைப் பாதிக்கும் என்பதும் அரசியல் தளத்தில் மிகவும் முக்கியமானதாகும்.

'புலிகளை அழித்துவிட்டால் சமாதானம் பிறக்கும்' என்ற கொள்கை சிங்கள இனவாதிகளிடமும் காணக் கிடைக்கிறது என்பதுதான் சுவாரசியமானது. இந்த இனவாதிகள் மேலும் சொல்வார்கள்: ''கிழக்கு ராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த போது எல்லாச் சமூகங்களும் சமாதானமாக வாழ்ந்தனதானே. அதுபோல வடக்கிலும் செய்யலாம்''. இதனுடைய தர்க்க ரீதியான முடிவு என்னவெனில் யுத்தத்தை வழிமொழிவது இனப்பிரச்சினை என்ற ஒன்று இருக்கிறது என்பதையே மறைந்துவிடும்.

### அரசியல் தீர்வு

வடக்கு-கிழக்கு யுத்தத்துக்கான இறுதித் தீர்வை வெறும் யுத்த தந்திரோபாயங்களால் அடையமுடியாது. தீர்வு இங்கு வாழும் சமூகங்களுக்கிடையான உறவுகள் பற்றிய அரசியல் பிரச்சினையாகும். இந்தச் சமூகங்கள் தனித்துவம் வாய்ந்தவையாகத் தம்மைக் கருதிக் கொள்பவை. இன்றைய தேசிய இனப்பிரச்சினையின் சாராம்சம், தமிழ், சிங்கள, முஸ்லீம் சமூகங்கள் அயலவர்களாக இந்த நாட்டில் தொடர்ந்தும் சமத்துவத்துடனும் கௌரவத்துடனும் சமாதானமாக வாழ முடியுமா, முடியாதா என்பதே.

சமாதானமும் ஐக்கியமும்தான் எமது குறி என்றால் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களைக் கொல்லும் ஒரு யுத்தத்தின் மூலம் அவற்றை அடையலாம் என்பது ஒரு மாயை, அல்லவா? புலிகளை அழிப்பது என்பதும் கூட ஏராளமான தமிழ் இளைஞர்களை - இவர்கள் கடந்த 12 வருடங்களுக்கு மேலாக யுத்தச் சூழலிலேயே வளர்ந்து வந்தவர்கள் -அழிப்பது தான். (இந்த யுத்தத்தில் அழியப் போகும் சிங்கள முஸ்லீம் இளைஞர்களைப் பற்றியும் கடந்த பன்னிரண்டு வருடங்களுக்கு மேலாக யுத்தத்தால் பீடிக்கப்பட்டுள்ள நமது சமூகங்களின் ஆத்தும நாசம் பற்றியும் தனியாக விரிவாக எழுதப்பட வேண்டும்.)

ஏற்கெனவே கொல்லப்பட்டவர்களின் சமாதிகளோடும் நடுகற்களோடும் இனிக் கொல்லப்பட இருப்பவர்களையும் சேர்த்தால். வடக்கு ஒரு மாபெரும் மரண வீடாக மாறிவிடும் அல்லவா? இத்தகைய நிலைக்கு வடக்கு மக்களைத் தள்ளி விட்டுள்ள அரசாங்கத்தையோ அல்லது அந்த அரசாங்கத்தால் நியமிக்கப் படும் இன்னொரு ஆட்சியாளரையோ இந்த மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்? இந்த நிலைமை மேலும் தீவிரவாதத் தன்மை கொண்ட இயக்கங்கள் உருவாவதற்குத்தானே வழி வகுக்கும்?

கடந்த பன்னிரண்டு வருடங்களாக யுத்தத்தைத் தவிர வேறொன்றும் அறியாத ஒரு தலைமுறை வளர்ந்து வருகிறதே. அதைப்பற்றி என்ன சொல்கிறோம்? இந்த யுத்தத்தின் குழந்தைகளுக்கு சிங்களவர்களும் முஸ்லீம்களும் அந்நியர்களாகத்தானே தெரிகிறார்கள்?

இன்னொருதரம் இந்தக் குழந்தைகள் யுத்தத்துக்குள் தள்ளப்படுவது என்றால் அவர்களுடைய மனநிலையில் எத்தகைய பாதிப்புகள் ஏற்படும்? இந்த மனோநிலையில் எத்தனை எத்தனை புலிகள் உருவாகப் போகிறார்கள்?

புலிகள் ராணுவரீதியாகத் தோற்கடிக்கப்பட்டாலும் அதன் பின்னர் அமையப் போகிற அரசு வடக்குக் கிழக்கு மக்களை பயங்கரத்துள் ஆழ்த்த மாட்டாது என்பதற்கு ஏதாவது உத்தரவாதம் உள்ளதா? இத்தகைய சூழலில் வடக்குக் கிழக்குக்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்க முன் நிற்பார்கள். கொழும்பில் மையங் கொண்டிருக்கும் தமிழ்க் குழுக்களாகும் ENDLF டில்லியில் தலைமை அலுவலகத்தை வைத்திருக்கிறது.)

த.வி.கூட்டணியை விட ஏனையவை இன்றும் ஆயுதபாணிகளாக இலங்கை அரசின் அனுசரணையோடு செயற்பட்டு வருகிறார்கள். கொழும்பில் இடம் பெற்றுள்ள பல கொலைச் சம்பவங்களுக்கு இக்குழுக்களே - குறிப்பாக PLOTE உம் EPDPயுமே பொறுப்பு என்று வலுவான அபிப்பிராயம் நிலவுகிறது. அதிகாரத்திலுள்ளபோது இந்தக் குழுக்கள் மக்களை எவ்வளவு பயங்கரமான முறையில் நடத்தினார்கள் என்பதை வடக்குக் கிழக்கு மக்கள் மறந்துவிடுவது சாத்தியமில்லை. ராணுவத் தன்மையைப் பொறுத்தவரை இந்தக் குழுக்களுக்கும் புலிகளுக்கும் இடையேயான வேறுபாடு அளவில் (degree)தான் உள்ளதே தவிர சாராம்சத்தில் (Substance) அல்ல. எனவே வடக்குக் கிழக்கில் இந்தக் குழுக்கள் IPKFஇன் காலத்தில் கொண்டு வந்த சமாதானத்தைவிட உன்னதமான சமாதானம் எதையும் கொண்டுவரும் என்பது சந்தேகமே.

### தார்மீக நியாயப்பாடு

யுத்தத்தின் மூலம் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருதல் என்னும் கருத்தியலின் பொய்மையை விளக்குவது, இந்த யுத்தத்தின் மூலம் தமிழ் மக்களின் பார்வையில் அரசாங்கம் இழந்து விடப் போகிற தார்மீக நியாயப்பாடு ஆகும். கோர யுத்தத்தை தனது மக்களின் ஒரு பகுதியினர் மேல் அவிழ்ந்து விடும் எந்த அரசாங்கமும் அந்த மக்கள் மீது தார்மீக நியாயப்பாட்டைக் கொண்டிருக்க முடியாது. 1994ல் ஐ.தே.க. அரசாங்கத்தை வீழ்த்தியது இந்தத் தார்மீக நியாயப்பாடின்மை தான். சமாதானப் பேச்சுக்களின் தோல்விக்குப் பிற்பாடு இந்த அரசாங்கத்தினதும் கரங்களில் இரத்தக்கறைகள் படிந்து விட்டன. அரசாங்கம் முற்று முழுதாகத் தன்னை இரத்தக் குளியலுக்குள் ஆழ்த்தப் போகிறதா இல்லையா என்பதுதான் இப்போதைய கேள்வி. இத்தகைய நிலை இப்பொழுது தற்காலிகமாகப் பிரிந்துள்ள வடக்கையும் தெற்கையும் முற்றாகவும் நிரந்தரமாகவும் பிரித்து விடாது எனபதற்கு ஏதாவது உத்தரவாதம் உள்ளதா?

எனவேதான் யுத்தத்தை முற்றாக நிராகரிக்க வேண்டும் என்று நாம் சொல்ல விரும்புகிறோம். யுத்தத்திற்குப் பதிலாக அரசியல் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். தீர்வுத்திட்டத்துக்கு ஐ.தே.கவின் இணக்கப்பாட்டைப் பெறுவது என்பது யதார்த்தமல்ல. ஐ.தே.க. இந்த விஷயத்தில் எப்போதும் அரசியல் சந்தர்ப்பவாதத்தையே கடைப்பிடிக்கும். அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் ஐ.தே.க.வின் ஆதரவு ஒருபோதும் முன் நிபந்தனையாக இருக்க முடியாது. சமாதானத்துக்கும் அரசியல் தீர்வுக்காகவும் வாக்களித்த 62 வீதமான மக்களுக்குத்தான் அரசாங்கம் பதில் சொல்ல வேண்டுமே தவிர வேறுயாருக்குமல்ல!

உண்மையில், இந்த மக்களிடம் நேரடியாகச் சென்று தீர்வுத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அவர்களுடைய ஆதரவைப் பெறவேண்டும். கூடவே, தீர்வுத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குச் சாத்தியமான எல்லா சக்திகளையும் ஒன்று திரட்ட வேண்டும். தீர்வுத்திட்டத்திற்கான ஆதரவை மக்கள் மத்தியில் திரட்டப் பகிரங்கமான கலந்துரையாடல்களும் கூட்டங்களும் நடாத்தப்பட வேண்டும். குறிப்பிட்ட காலத்துக்குப் பிற்பாடு அரசாங்கம் தீர்வுத் திட்டத்தைச் சட்டமாக்க வேண்டும்.

### புலிகளில்லாமல் சமாதானமா?

புலிகளின் சம்மதமில்லாமல் எப்படித் தீர்வுத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது? என்ற கேள்வி எழுகிறது. அப்படி ஒரு நிலை ஏற்படுமானால் வடக்கில் தீர்வுத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான சிக்கலை வடக்கு மக்களே புலிகளுடன் தீர்மானிக்கும்படி விட்டுவிட வேண்டியதுதான். தெற்கிலும் கிழக்கிலும் உடன்பாடான மற்றைய கட்சிகளுடன் இணைந்து தீர்வுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

தொடர்ச்சி பக்கம் 15இல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புதைகுழிகளை நோக்கி

'ஒப்பிரேஷன் லீப்' என்று பெயரிடப்பட்ட 'முன்னேறித் தாக்கும்' நடவடிக்கையை ஆரம்பித்தாயிற்று. புலிகள் தரப்பில் பெருமளவு சேதமும், இராணுவ தரப்பில் ஓரிருவர் இறந்தும் பொதுமக்களுக்கு எத்தகைய பாதிப்பும் இல்லாத விதத்தில் இந்நடவடிக்கை முன்னேறி மூளாய்வரை வந்துவிட்டதாக அரசுதரப்பில் அறிவிக்கப்படுகிறது. நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயத்தின் மீது வீசப்பட்ட குண்டுகள் அங்கிருந்த அகதிகளில் 85 பேரது உயிரைக் குடித்துவிட்டதாக வேறு செய்திகள் தெரிவித்தபோதும், இவையெல்லாம் புலிகளின் கட்டுக்கதைதான்; இறந்து போன தமது உறுப்பினர்களை சிவிலியன்களாகக் காட்டி அனுதாபத்தைச் சம்பாதிக்க அவர்கள் முயல்வதாக அரசு தரப்பில் அறிவிக்கப்படுகிறது. தெற்கில் மிதந்த தமிழர்களின் சடலங்கள் கூட புலிகளால் கொல்லப்பட்டு வீசப்பட்ட சடலங்களே என்றும், அரசாங்கத்துக்கு மனித உரிமைகள் மீறல் தொடர்பான நெருக்கடியை ஏற்படுத்தவே புலிகள் இவ்வாறு செய்கின்றார்கள் என்றும் கூட வதந்திகள் திட்டமிட்டுப் பரப்பப்படுகின்றன.

'சமாதானத்தை' நிலைநாட்டுவதற்காக, புலிகளுடன் யுத்தம் தொடுத்திருக்கும் அரசின் இராணுவ இலக்குகளை இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க மிகத் தெளிவாகவே அறிவித்திருக்கின்றார். முடியுமானளவு அதிகப்படியான புலிகளை கொன்றொழிப்பதும், அவர்களின் வசமுள்ள பகுதிகளை மீட்டெடுப்பதுமே அந்த இலக்குகள். நவாலி தேவாலய வளவில் தங்கியிருந்த மக்களை புலிகள் என அறிவிக்கும் நெஞ்சுரம் வாய்ந்த அரசாங்கத்திற்கு, பெருமளவு புலிகளைக் கொன்றொழிப்பது எவ்வளவு சாதாரண விடயம் என்பது வெளிப்படை. இக்கட்டுரை எழுதுகின்றபோது 2 நாள் யுத்தத்திலேயே 300 பொதுமக்கள் கொல்லப்பட்டும் இன்னும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தும் உள்ளதாக எமக்குக் கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. யுத்தம் மூலம் சமாதானத்தைக் கொண்டுவர முடியும் என்கிற கோட்பாட்டை உயர்த்திப் பிடித்துக் கொண்டு களத்தில் இறங்கியுள்ள அரசாங்கம், விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் சிவில் நிர்வாகத்தை நடைமுறைப்படுத்த ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கின்றது. யுத்தம் தொடங்கிய பகுதிகளிலிருந்து கிட்டத்தட்ட 3 லட்சம் மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர். மக்களே இல்லாத பிரதேசத்தில் சிவில் நிர்வாகத்தை நடாத்த உத்தரவிடும் அரசாங்கத்தின் கேலிக் கூத்துக்களின் உச்சமாக அமைந்துள்ளது இந்த அறிவிப்பு. இப்போது பிடிக்கப்படும் இடங்களில் சிவில் நிர்வாகத்தை கொண்டுவருவது என்றால் முதலில் கைப்பற்றப்பட்ட பலாலி, வசாவிளான், மயிலிட்டி, காங்கேசன்துறை மாவிட்டபுரம் பகுதிகளில் இந்த 'சிவில் நிர்வாகத்தை ஏற்கனவே ஏற்படுத்தி இருக்க வேண்டும்'. ஆனால், அது பற்றி இதுவரை எந்த அறிவிப்பையும் இந்த அரசு வெளியிடவில்லை! (அங்கும் மக்கள் இல்லை என்பது வேறு விடயம்) ஆனால் இப்போது தாக்குதல் தொடங்கியதும் சிவில் நிர்வாகம் பற்றி அறிவித்துள்ளது!

புலிகளைச் சாட்டாக வைத்து வடக்கு தமிழ் மக்களைத் தாக்குவதே நடைமுறையாக இருப்பதால், தமது மனிதாபிமான யுத்தத்தை நியாயப்படுத்துவதற்கு அரசாங்கத்துக்கு இத்தகைய அறிவிப்புகள் அவசியமாக உள்ளன. 'யுத்தத்தின் இலக்கு சமாதானம்' என்று அரசு அறிவிக்கிறது. தமது யுத்தத்திற்கு ஆதரவாக முழு நாட்டையும் அணிதிரட்டும் நோக்குடன் 'வெண் தாமரை' இயக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. இந்த இயக்கம் நாடு பூராவும் சமாதானத்திற்காக யுத்தம் புரிவது ஏன் அவசியம் என்று பிரச்சாரம் செய்யவுள்ளது. யுத்தத்துக்கான பாதுகாப்பு நிதிதிரட்டலுக்கும், யுத்தத்துக்கு முழுநாட்டு மக்களையும் ஆதரவாக திரட்டுவதற்கும் இந்த வெண்டாமரை இயக்கம் பயன்படுத்தப்படப் போகிறது.



எப்படியோ அரசாங்கத்தின் இலக்குகள் மிகவும் தெளிவானவை. யுத்தத்தை முடியுமானளவு உக்கிரமாக நடாத்துவது; அதற்கான முழு ஆதரவையும் மக்கள் மத்தியில் திரட்டுவது; தமது யுத்தத்தை மனிதாபிமான அடிப்படையிலான யுத்தமாக பிரச்சாரம் செய்வது; புலிகளை முற்றுமுழுதாக ஒடுக்கி, அரசு சொன்னபடி நடக்கவைப்பது. இதற்காக எவ்வளவு உயிர் அழிவுகள், சேதங்கள், செலவுகள் ஏற்பட்டாலும் பரவாயில்லை... என்பவையே அதன் குறிக்கோள்கள். ஒருபால் வெற்றி பெற்றதும், ஏதாவது ஒரு தீர்வை அறிவித்துவிட்டு, தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்த்துவிட்டதாக மார்தட்டிக் கொள்வது அரசாங்கத்தின் அடுத்த கட்டத் திட்டம்.

இந்தத் திட்டத்திற்கு ஒருபகுதி சிங்கள, தமிழ் 'முற்போக்கு' புத்திஜீவிகளும் பத்திரிகையாளர்களும் ஜனநாயகவாதிகளும் மற்றும் அரசியல் கட்சியினரும் தமது ஆதரவை வெளிப்படையாக தெரிவித்துவிட்டனர். அரசு யுத்தம் தொடங்கும் வரை அது அவசியம்; புலிகளை அடக்குதல் முக்கியம் என்று கூறிவந்த தமிழ் அரசியல்கட்சிகள் அல்லது அவற்றின் பிரமுகர்கள், இப்போது யுத்தம் தொடங்கியதும், மக்கள் கொல்லப்படுவதாக கேள்விப்படுகிறோம்.... ஐயோ... அவர்கள் இல்லாத இடமாக பார்த்துச் சண்டையிடுங்கள்' என்று ஓலமிடுகிறார்கள் 'வீடு சுடுகிற ராசாவுக்கு நெருப்பெடுத்துக் கொடுக்கும் மந்திரிகளாக இருந்த ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, புளொட், ஈ.பி.டி.பி மற்றும் கோஷ்டியினர் இப்போது பொதுமக்கள் கொல்லப்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என்று அறிக்கை விட ஆரம்பித்துள்ளனர். யுத்தத்தின் விளைவுகட்கு புலிகள்தான் பதில் சொல்ல வேண்டும் என்று வேறு கூறியிருக்கின்றனர். ஈ.பி.ஆர்.எல்.எப் - சுரேஷ் பிரேமச்சந்திரனின் இப்படிக்கூறும் பத்திரிகை அறிக்கையை படிக்கும் ஒருவருக்கு இவர்கள் எப்படியெல்லாம் பழிகளை யாருடைய தலையிலாவது போட்டுவிட்டு தப்பிக் கொள்ள முயல்கிறார்கள் என்பது விளங்கும்! யுத்தத்தின் விளைவுகளுக்குப் புலிகளும் பதில் சொல்ல வேண்டும் என்பது உண்மை. யுத்தத்தை வழிமொழிந்ததில் தமிழ் குழுக்களுக்குப் பங்கு இருக்கவில்லையா? சமாதானப் பேச்சில் ஈடுபட விரும்பிய போதெல்லாம் அரசுக்கும் ஜனாதிபதிக்கும் புலிகளை அழித்துவிட்டுத்தான் பேச வேண்டுமென்று ''மந்திரலோசனை'' கூறவில்லையா? சமாதானத்தின் பேரால் யுத்தத்தை நடாத்த முடியும் என்ற 'தத்துவத்தை' அரசாங்கத்துக்கு போதிக்கவும், இடைக்கால அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதற்காக அதற்காக வால்பிடிக்கவும் செய்யவில்லையா? தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டபின் பின்கதவால் அதிகாரத்துக்கு வர ஆசைப்பட்டு யுத்தத்தை பிரேரிக்கவில்லையா?

இவையெல்லாம் விரைவில் வெளிவரப் போகும் விடயங்கள். அப்போது யார் யார் எவ்வெவற்றுக்குப் பதில் சொல்வது அவசியம் என்று தெரிய வரும்.

இந்த யுத்தத்துக்கு ஒவ்வொருவரும் பொறுப்பாளிகள் தான். புலிகள், அரசு, கூட்டணி உள்ளிட்ட அனைத்து தமிழ்க் கட்சிகளுக்கும் இதில் பொறுப்பிருக்கிறது. தமது கோரிக்கைகளை அரசு ஏற்கவில்லை என்பதற்காகப் புலிகளும், போர்நிறுத்த உடன்படிக்கையை ஒருதலைப்பட்சமாக மீறியமைக்காக அரசும் போர் புரிய நேரிட்டமையை விளங்கிக் கொள்ளலாம்.

ஆனால், இந்த தமிழ் கட்சிகளும் குழுக்களும் யுத்தத்தை 'பொதுமக்கள் பாதிக்கப்படாமல்' நடாத்துமாறு கேட்பது எந்த அடிப்படையில்? அரசாங்கம் அரசியல் தீர்வை முன்வைத்துவிட்டதா? தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறும் இவர்கள், அவர்கள் பாதிக்கப்படுகின்ற யுத்தத்தை ஆதரிக்க எந்த நியாயத்தை வைத்திருக்கிறார்கள்? இனப்பிரச்சினைக்கு இவர்கள் கூறும் தீர்வுதான் என்ன? அதை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டுவிட்டதா?

உண்மையில் இவர்களின் மக்கள் கொலைபற்றிய முதலைக் கண்ணீருக்கு ஒரேயொரு நோக்கம்தான் இருக்க முடியும். மக்கள் கொலையை இந்த நேரத்தில் தாம் ஆதரிக்கவில்லை என்று கூறாவிட்டால் எதிர்காலத்தில் நடக்கக் கூடிய தேர்தலில் தமக்கு வாக்குப் பொறுக்க வாய்ப்பு இல்லாமல் போய் விடலாம் என்ற அச்சத்தை தவிர வேறு காரணம் எதுவும் இல்லை என்பது வெளிப்படை.

## நாசமறுப்பான்

சமாதானத்துக்கான யுத்தம் என்ற கருத்தை பிரச்சாரம் செய்பவர்கள் அடுத்த பிரிவினர். சமாதானத்துக்காக இந்த அரசிடம் யுத்தத்தை தவிர வேறு எந்தத் திட்டமுமே இருந்ததில்லை என்ற உண்மையை மறந்து (மறைத்து) விட்டு இவர்கள் இந்தப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். வடக்கு கிழக்கு நிலைமை பற்றிய எத்தகைய பொறுப்புணர்வோ அறிவோ பார்வை வீச்சோ அற்ற இவர்கள், அரசாங்கத்தின் ஆலோசகர்களாகவும், அடிவருடிகளாகவும் மாறிப் போயினர்.

ஆக, தமிழ்க் கட்சிகளும் சரி, ''சமாதானப் போர்'' என்று அரசுக்கு வக்காலத்து வாங்குகிறவர்களும் சரி செய்ய விரும்புவதெல்லாம், வடக்கின் மக்களது குருதி வெள்ளத்தில் அரசு நாட்டவுள்ள சிறுபான்மை மக்களை வாள் காட்டி மிரட்டும் சிங்கக் கொடியை நாட்டுவதற்கும், தமிழ் முஸ்லீம் மக்களின் அரசியல் உரிமைகளுக்கு சமாதி கட்டுவதற்கும் துணை போவது தான்!

> எப்படியோ அரசாங்கத்தின் இலக்குகள் மிகவும் தெளிவானவை. யுத்தத்தை முடியுமானளவு உக்கிரமாக நடாத்துவது; அதற்கான முழு ஆதரவையும் மக்கள் மத்தியில் திரட்டுவது; தமது யுத்தத்தை மனிதாபிமான அடிப்படையிலான யுத்தமாக பிரச்சாரம் செய்வது; புலிகளை முற்றுமுழுதாக ஒடுக்கி, அரசு சொன்னபடி நடக்கவைப்பது. இதற்காக எவ்வளவு உயிர் அழிவுகள், சேதங்கள், செலவுகள் ஏற்பட்டாலும் பரவாயில்லை... என்பவையே அதன் குறிக்கோள்கள்.

'சமாதானம், ஆம், ஜனநாயகத்துடன்' என்றும் சமாதானம் இன்றேல் மீண்டும், யுத்தமல்ல, சமாதானமே என்றும் கூறியவர்கள் இன்று எங்கு போய்விட்டாாகள்? புலிகளை அழித்தபின் சமாதானம் பற்றி பேசலாம், அதுவரைக்கும் நமக்கேன் வம்பு என்று ஒதுங்கிக் கொண்டுவிட்டார்கள் போலும்! ''பேச்சுப் பேச்சென்னும் பெரும்பூனை வந்தக்கால் கீச்சுக் கீச்சென்னுமாம் கிளி என்று தெரியாமலா சொன்னார்கள்!

வடக்கு கிழக்கின் இனப்பிரச்சினைக்கு 'அரசியல்தீர்வு' ஒன்றை முன்வைக்கும் விருப்போ, பொறுப்புணர்வோ திராணியோ அற்ற இந்த அரசின் யுத்தம், வடக்கு கிழக்கு மக்கள் மீதான ஆக்கிரமிப்பு யுத்தமே அன்றி வேறல்ல!

சமாதானம் என்பது இந்த அரசாங்கத்தின் கேலிக்கூத்துக்களின் ஒன்று என்றுதான் இப்போது தோன்றுகிறது.

புதைகுழிகளைத் தோண்டி பதவிக்கு வந்த அரசாங்கம், தன்னை பதவியில மர்த்திய மக்களுக்கு புதைகுழியைத் தோண்டிக் கொண்டிருக்கிறது.

கூடவே, சமாதானம்,ஜனநாயகம், மனித உரிமைகள் எல்லாவற்றிற்கும் தான்.

இந்த அரசுடன் கூட நின்று இவற்றுக்காக வாய்கிழிய கத்துபவர்களுக்கும் சேர்த்துதான் இந்தப் புதைகுழி என்பது வரலாறு. அப்போது இவர்களுக்காக கண்ணீர் விடுவதற்கு எலும்புக் கூடுகளும் மிஞ்சாது!

> யுத்தம் மூலம் சமாதானத்தைக் கொண்டுவர முடியும் என்கிற கோட்பாட்டை உயர்த்திப் பிடித்துக் கொண்டு களத்தில் இறங்கியுள்ள அரசாங்கம், விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் சிவில் நிர்வாகத்தை நடைமுறைப்படுத்த ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கின்றது. யுத்தம் தொடங்கிய பகுதிகளிலிருந்து கிட்டத்தட்ட 3 லட்சம் மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர். மக்களே இல்லாத பிரதேசத்தில் சிவில் நிர்வாகத்தை நடாத்த உத்தரவிடும் அரசாங்கத்தின் கேலிக் கூத்துக்களின் உச்சமாக அமைந்துள்ளது இந்த அறிவிப்பு. இப்போது பிடிக்கப்படும் இடங்களில் சிவில் நிர்வாகத்தை கொண்டுவருவது என்றால் முதலில் கைப்பற்றப்பட்ட பலாலி, வசாவிளான், மயிலிட்டி, காங்கேசன்துறை மாவிட்டபுரம் பகுதிகளில் இந்த 'சிவில் நிர்வாகத்தை ஏற்கனவே ஏற்படுத்தி இருக்க வேண்டும்'. ஆனால், அதுபற்றி இதுவரை எந்த அறிவிப்பையும் இந்த அரசு வெளியிடவில்லை!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "அரசிற்கு இலாபம் தரக்கூடியது யாழ்ப்பாணம் மீதான முற்றுகை அல்ல"

**- கலாநிதி ஜயதேவ உயங்கொட**

எமது நாட்டின் நாளைய நிகழ்வுகள் மிகக் கெட்ட கனவுகளாக மாற இடம் இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. ஒரு படுமோசமான நிலைமையை உருவாக்குவதற்கான பின்னணி தயாரிக்கப்பட்டும், சக்திகள் கட்டி எழுப்பப்பட்டும் வருவதையும் காணக் கூடியதாக இருக்கிறது. இந்நிலைமை ஏற்படுவதைத் தவிர்க்கும் வழிமுறைகள் பற்றிச் சிந்திப்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

நான் காணும் படுமோச ஒரு நிலைமையைக் குறித்துக் காட்டும் பிரதான அம்சங்களில் இரண்டு தற்போதே வெளித் தெரிய ஆரம்பித்துள்ளன. அவையாவன: சர்வ கட்சிகளின் உடன்பாடு ஒன்று ஏற்பட்ட பின்னரே வட பகுதிப் பிரச்சினைக்கு அரசாங்கம் முன்வைக்கும் அரசியல் தீர்வைத் தெரியப்படுத்துவது என அரசாங்கத்தின் பிரதான அரசியல் பேச்சாளரும் எமது நண்பருமான அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் அவர்கள் தெரிவித்தது;

இரண்டாவது யாழ்ப்பாணக் குடா நாட்டினுள் ஜுலை-ஒகஸ்ற் காலப் பகுதியினுள் பாரிய யுத்தம் ஒன்றிற்காக அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் தயாராவதாக உள்ள தகவல்கள்

இவை இரண்டும் எனது மனதினுள் பெரும் பீதியை ஏற்படுத்துகின்றன. இப்பீதி எனது தனிப்பட்ட உயிர்குறித்த பீதி அல்ல, இது ஒரு அரசியல் பீதியாகும்.

மேற்கூறிய காரணங்கள் இரண்டும் உண்மையானால் அவற்றினால் ஏற்படும் அரசியல் விளைவுகள் மிகவும் பயங்கரமானவையாக இருக்கப்போகின்றன.

அவற்றை வெவ்வேறாக நோக்குவோம்.

### அரசியல் தீர்வுத் திட்டமும் சர்வ கட்சி களின் உடன்பாடும்:


வட பகுதிப் பிரச்சினைக்குச் சர்வ கட்சிகளின் உடன்பாடு ஒன்று தேவை எனக் கூறுவதன் அர்த்தம் தீர்வுக்கு ஐ.தே.க.வின் ஒத்துழைப்புத் தேவை என்பதே ஆகும். பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை ஒகஸ்ற் மாதத்தில் முறியடிப்பதாக எல்லா இடங்களிலுமே பிரசாரம் செய்து வரும் ஐ.தே.கட்சியானது அரசாங்கத்தின் அரசியல் தீர்வுக்கு உடன்பாட்டை வழங்கும் என்று எதிர்பார்ப்பது நகைப்புக்கிடமானதாகும்.

கடந்த ஒகஸ்ட், நவம்பர் தேர்தல்களில் தீவிர சிங்கள இனவாதத்தைத் தூண்டிய, தற்போதும் தீவிர இனவாதத்தைத் தூண்டிவரும் ஐ.தே.க. வின் உடன்பாடு கிடைக்கும் அரசியல் தீர்வு என்னவாக இருக்கும்? ஐ.தே.க வின் தற்போதைய அரசியல் சூதாட்டத்தின் படி பார்க்கிறபோது வட பகுதிப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை வழங்கப் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கோ சந்திரிகாவிற்கோ அது ஒத்துழைப்பு வழங்கும் என்று எவ்விதத்திலும் எதிர்பார்க்க முடியாது பொதுஜன ஐக்கிய முன்னணியின் அரசியல் தலைவர்கள் அரசியல் அரிச்சுவடியை மறக்கக் கூடாது.உடன்பாடு (CONSENSUS) தொடர்பாக எழும் முரண்பாட்டை அடுத்து எடுப்போம். அரசியல் அமைப்புத் திருத்தம் தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக் குழுவினுள் ஐ.தே.க.வும் ஆமோதிக்கும் ஒரு உடன்பாடு ஒன்றைக் கட்டி எழுப்புவதற்கே அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் முயல்கிறறார். ஐ.தே.கவின் ஒத்துழைப்புடன் உடன்பாடு ஏற்படுமென்றால் அது ஜனாதிபதி முறை ஒழிப்பு தொடர்பாகவே இருக்கக் கூடும் என்று நாம் கருதலாம்.

இந்த உடன்பாடு பொ. ஐ. மு. அரசாங்கத்தைக் கவிழ்க்கும் ஐ.தே.கவின் சூதாட்டத்தின் ஒரு பகுதி என்பது தெளிவு. சந்திரிகாவையும் பொ.ஐ.முன்னணியையும் வெற்றி பெற வைத்த 62.5% மக்கள் வாக்குகள் சிங்கள, தமிழ், முஸ்லீம் சமூகங்களின் உடன்பாடு ஒன்றைத் திட்டவட்டமாகக் காட்டியுள்ளது என்பதை அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கணக்கில் எடுக்க வேண்டும். இம் மக்களுடைய உடன்பாடு இன்றி அரசியல் தீர்வொன்றிற்கு எதிராக வாக்குக் கோரித் தோல்வி அடைந்த ஐ.தே.கவின் உடன்பாட்டைப் பெற்றுக் கொள்ளக் கூடிய சாரமற்ற அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்றை அரசு முன்வைக்குமானால் அது மிகப் பாதகமான அரசியல் முடிவாகும்.

யாழ்ப்பாணம் மீதான யுத்தத்தால்:-

1. அரசாங்கப் படையினர் பாரிய அளவில் கொல்லப்படுவர்
2. விடுதலைப் புலிகள் மிகக் குறைந்தளவு கொல்லப்படுவர்
3. வடபகுதிப் பொதுமக்கள் பாரிய அளவில் கொல்லப்படுவர்



யுக்தியவிலிருந்து தமிழில் சி.சி.விநோத்

சர்வ கட்சிகளின் உடன்பாடு என்ற கருத்தினூடாக அரசாங்கம் முயற்சி எடுப்பதென்பது பொதுஜன ஐக்கிய முன்னணி அதிகாரத்திற்கு வரத் தோள் கொடுத்த ஜனநாயகச் சக்திகளைப் புறந்தள்ளி பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு என்றென்றும் பகைமையாக உள்ள சக்திகளுடன் உடன்படுவதும் கூட்டுக்கள் ஏற்படுத்துவதும் அரசியல் சந்தர்ப்பவாதமாகும். சந்திரிகாவின் அரசாங்கமும் சந்தர்ப்பவாத அரசாங்கமாக மாறுவதைக் காண அவ் அரசாங்கத்தை அமைக்கச் சிறு அளவிலேனும் தோள் கொடுத்த நாம் எவருமே விரும்பவில்லை. ஆனாலும் இன்று சியாம் மற்றும் அரபுர நிக்காயக்களின் மகா நாயக்க தேரர்கள் விடுத்துள்ள பத்திரிகை அறிக்கைகளை நோக்கும் போது தெரிய வருவது என்னவென்றால் இவ் அரசாங்கத்தினரும் சந்தர்ப்பவாத மற்றும் சுய தோல்விவாத கூட்டுக்களிற்குச் செல்வதா இல்லையா என்ற முரண்பாட்டு நிலையாகும்.

அரசாங்கம் அவ்வாறு ஒரு சந்தர்பவாத நிலைப்பாட்டை எடுக்காது என நான் எதிர்பார்க்கிறேன். அரசியல் குறும்பார்வை காரணமாக அரசாங்கம் அவ்வாறு செய்தால் அரசாங்கத்திற்கு நெருங்கிய ஜனநாயக சக்திகள் அரசாங்கத்திடமிருந்து வெளியே தள்ளப்படுவதும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு என்றென்றும் பகைமை காட்டிய சக்திகளுடன் அரசாங்கம் அரசியல் கூட்டுக்களுக்கு வருவதுமாகும். இதுவரை காலமும் தம்மைப் பாதுகாத்த அரசியலாளர்கள ஜனநாயக விருப்பு மிக்கவர்கள், நிபந்தனைகள் எதுவுமின்றி அதனைத் தொடர்ந்தும் செய்வார்கள் என அரசாங்கம் தொடர்ந்தும் எதிர்பார்க்கக் கூடாது. தோழர் சுமணசிறி லியனகே ஏப்ரல் இறுதியில் யுக்திய புத்திரிகையில் சரியாகக் கூறியபடி இவ் அரசாங்கத்தையும் ஐ.தே.க. அரசாங்கத்தையும் வேறுபடுத்தும் தீர்மானகரமான சாதனமானது, பிரச்சினைக்குப் பலமானதும் நிலை நிற்கக் கூடியதுமான நியாயமான அரசியல் தீர்வொன்றை அரசு வழங்குமா அல்லது வழங்காதா என்பதே ஆகும்.

அரசியல் தீர்வொன்றிற்கு சர்வ கட்சி உடன்பாடு என்ற கருத்து கடந்த காலத்தில் ஐ.தே.க அரசாங்கத்தினால் மிகத் தந்திரமாகப் பாவிக்கப்பட்ட எவ்வித பயன்பாடும் இல்லாத பிரச்சினைகளிலிருந்து தப்பும் (EVASIVE) முயற்சியேயாகும். திரு. ஜயவர்த்தன சர்வ கட்சி உடன்பாடொன்று பற்றிப் பேசியபடி யுத்தம் புரிந்தார் திரு. பிரேமதாசவும் அதனையே செய்தார். சந்திரிகாவும் அதனையே செய்யமாட்டார் என நாம் எதிர்பார்க்கிறோம்.

### வடக்கில் யுத்தம்

யாழ்ப்பாணக் குடா நாடு மீது மாபெரும் முற்றுகையிடல் ஒன்றை ஆரம்பித்து முழு வட பகுதியையுமே புலிகளிடம் இருந்து பறித்தெடுக்கலாம் என்ற கருத்து ஆயுதப் படைகளின் சில பிரிவினர் மத்தியிலும், சில பத்திரிகையாளர்கள் மத்தியிலும், சிங்கள இனவாத சக்திகள் மத்தியிலும் நிலவும் கருத்தாகும். ஏப்ரல் 19 ஆந் திகதியின் பின்பு இக் கருத்து மீண்டும் ஒரு முறை மேலெழுந்துள்ளதுடன் அக் கருத்தை செயற்படுத்த இவ் அரசாங்கம் முன்வர நிறையவே இடமிருப்பதாகவும் பத்திரிகைகள் வாசிக்கும் போது தெரிய வருகிறது.

வட பகுதி மீது ஆரம்பிக்கும் மாபெரும் அளவிலான யுத்தமொன்றின் போது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குறுகிய கால விளைவுகள் ஏற்பட நிறையவே இடமுள்ளன:

1. அரசாங்கப் படையினர் பாரிய அளவில் சொல்லப்படுவதும் காயப்படுவதும்
2. விடுதலைப் புலிகள் மிகக் குறைந்தளவு கொல்லப்படுவதும் காயப்படுவதும்
3. வட பகுதிப் பொது மக்கள் பாரிய அளவில் கொல்லப்படுவதும் காயப்படுவதும்
4. வட பகுதித் தாக்குதலின் கடுமையைக் குறைக்க புலிகள் தென் பகுதியில் கொழும்பில் தாக்குதல்களையும் அழிவு வேலைகளையும் ஆரம்பிப்பது
5. வட பகுதிப் பொது மக்கள் படுகொலைக்குப் பதிலடியாகப் புலிகளினால் சிங்கள, முஸ்லீம் பொதுமக்கள் படுகொலை செய்யப்படுவது

இவ் அனைத்து விடயங்களிலுமே பாரதூரமான அரசியல் தீங்குகளும் ஏற்படுவது நிச்சயமானதாகும். அத்தீய விளைவுகளில் ஒரு பிரதான அங்கமானது சர்வதேச ரீதியிலும் இந் நாட்டுத் தமிழ் மக்கள் மத்தியிலும் அரசாங்கம் மீது தற்போதுள்ள நன்மதிப்பும் நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் இல்லாது போவதாகும். சர்வதேச சமூகம் தற்போது பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதானது சமாதானம் தொடர்பாக அரசாங்கம் காட்டியுள்ள அர்ப்பணிப்பும் புலிகளின் யுத்தமயத் தாக்குதல்களிற்கு அரசாங்கம் உட்பட்டு உள்ளமையினாலும் ஆகும். ஆனாலும் யாழ்ப்பாணத்தில் செய்யப்படும் மாபெரும் தாக்குதலொன்றின் பின் இந்நிலைமை மாறுபட நிறையவே இடம் உள்ளது. அந்நிலையில் சர்வதேச சமூகத்தின் வெறுப்பு அரசாங்கத்தின் மீது திரும்புவதைத் தவிர்க்க முடியாது இருக்கும். சர்வதேச சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட அரசாங்கமொன்றிற்கு ஏற்படும் விதியை நாம் 94 இற்கு முற்பட்ட காலத்தில் கண்டோம்.

அரச படைகள் யாழ்ப்பாணத்தின் அதிகாரத்தைக்கைப்பற்றுகிறாகள் என்று வைத்துக் கொண்டாலும், அது ஒரு குறிப்பிட்ட நிபந்தனையின் கீழ் அதாவது புலிகள் தந்திரோபாயப் பின் வாங்குதலொன்றை (TACTICAL RETREAT) செய்தால் மட்டுமே இது சாத்தியமாகும். தந்திரோபாய ரீதியாகப் பின் வாங்கும் புலிகள் அதன் பின்பு செய்வது இந்தியப் படைகளுக்குச் செய்ததைப் போல் இலங்கை படையினர் தொடர்ந்தும் கெரில்லாத் தாக்குதல்களை நடத்துவதாகும். அப்போது அரச படைகளுக்குத் தாம் கைப்பற்றிய நிலப்பரப்பை பாதுகாக்கும் மாபெரும் சிக்கலான போராட்டத்தை நடத்த வேண்டி ஏற்படும். ஆகக் குறைந்தது யாழ்ப்பாண மக்கள் கதைக்கும் மொழியைக் கூடத் தெரியாத இராணுவமொன்றிற்குத் தாம் கைப்பற்றிய நிலப்பரப்பை நிர்வகிக்க அம் மக்களை அடித்து நொறுக்கிப் பாரிய அளவில் மனித உரிமைகளை மீறி யுத்த வன்முறை வழிகளிலேயே செயற்பட வேண்டியிருக்கும். அவ்வாறான நிலைமையொன்று ஏற்பட்டால் சர்வதேச சமூகம் சந்திரிகா அரசாங்கத்தைக் கண்டிப்பதைப் பற்றி நாம் அதிசயப்பட வேண்டியதில்லை. யுத்தம் நீடித்தால் சர்வதேச சமூகம் இலங்கையை மறக்கும் என அண்மையில் இலங்கைக்கு வந்த ஜேர்மன் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் விடுத்த அபாய எச்சரிக்கையை அரசாங்கம் பாரதூரமானதாகக் கணக்கிலெடுக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மாபெரும் யுத்தமொன்றின் நிச்சயமான பெறுபேறாக நான் காணுவது அரசாங்கம் சர்வதேச உள் நாட்டு ரீதியில் மாபெரும் அளவிலான அரசியல் தோல்வியொன்றைத் தழுவுவதாகும். அரசாங்கத்தினால் தற்போது செய்யக் கூடியதும் செய்ய வேண்டியதுமான மிக நல்ல நடவடிக்கையாக எனக்குப்படுவது தமிழ் மக்களுக்கு நியாயத்தை வழங்கக் கூடிய பிரதேச சுயாட்சி முறையொன்றை வழங்கும் சமஷ்டி யோசனைகள் அல்லது உகந்த அரசியல் தீர்வுத்திட்டத்தைத் தாமதிக்காது வெளியிடுவதாகும். இவ் வேளையில் அரசாங்கத்தின் திட்டத்தை வெளியிடுவது கவனத்துடன் செய்யப்பட வேண்டிய ஒன்று என அரசாங்கத்தின் சில பிரிவினர் சிந்திப்பதாகத் தெரிகிறது. யாழ்ப்பாணத்தின் மீது முற்றுகையொன்றை ஆரம்பிப்பது அதை விடக் கவனமாகக் கையாளப்பட வேண்டிய வழி முறை என்பதையே நான் வலியுறுத்துகிறேன்.

யாழ்ப்பாணம் மீது முற்றுகையிடுவது அரசியல் தீர்வை முன்வைப்பது ஆகிய வழிகள் இரண்டிலும் ஆகக் குறைந்த கவனத்தைப் பெற்றுத் தரும், ஆகக் கூடிய அரசியல் இலாபத்தை அரசாங்கத்திற்குப் பெற்றறுத் தரும் வழிமுறை அரசியல் தீர்வை முன்வைப்பதே அரசியல் நடவடிக்கையில் முன் செல்லும் போது சந்திரிகாவுடன் கோபப்படுபவர்கள் தீவிர சிங்கள இனவாதச் சிறுபான்மையினர் மட்டுமே. ஆனால் யாழ்ப்பாணத்தை முற்றுகையிட்டு அதன் பின்பு ஏற்படும் மாபெரும் சிக்கலினால் சந்திரிகாவிற்குத் தமிழ் மக்களும், சர்வதேச சமூகமும், சிங்கள இனவாதச் சக்திகளும் பொ.ஐ. முன்னணிக்கு நெருக்கமான பிரிவும் ஆகிய அனைவரும் இல்லாது போவது போலவே வட கிழக்கும் இலாலது போகும் வாய்ப்புக்கள் அதிமாகும்.

அரசாங்கத்திற்கு ஏற்படக் கூடிய அரசியல் அபாயம் பற்றி முன்கூட்டியே அபாய எச்சரிப்புச் செய்வது அரசாங்கத்திற்கு நெருக்கமானவர்களின் கடமையாகும். வட பகுதி மீது முற்றுகையொன்றை ஆரம்பிக்க அரசாங்கம் தயாராகிறதெனின் அதனைத் தவிர்க்கப் புலிகள் செயற்படுவது யுத்த களத்தில் மட்டுமல்ல, அரசியல் தளத்தினூடுமாகும். பொதுஜன ஐக்கிய முன்னணி அரசியல் கூட்டமைப்பில் உள்ள பலவீனத்தை முறையாகப் பயன்படுத்தரணிலை விடத் துரிதமாக முன் வருபவர் பிரபாகரனே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**ஓகஸ்ட் 94, தேர்தல்களுக்குப் பிற்பாடு நீங்கள் இங்கு வந்திருந்தீர்கள். இப்போது ஆறுமாதங்களின் பின்பு இங்கு வந்திருக்கிறீர்கள். இந்தக் காலப் பகுதிகளிடையே என்ன வேறுபாட்டைக் காணுகிறீர்கள்?**

சென்ற தடவை வந்திருந்தபோது மிகவும் ஆரோக்கியமானதும் நம்பிக்கை தரக்கூடியதுமான ஒரு சூழல் நிலவியது. யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற கருத்தும் சமாதான விருப்பும் இருந்தது. இதனால் அரசியல் தீர்வுக்குச் சாதகமான ஒரு சூழல் உருவாகியிருந்தது. இதற்கான ஒரு அடிப்படைக் காரணம் யுத்தத்தின் அழிவுகளும் அவை ஏற்படுத்திய தாக்கங்களும்தான். இந்தப் பின்னணியில்தான் பொ.ஐ.முன்னணி வெற்றிபெற முடிந்தது.

சமாதானத்துக்கான இயக்கமும் இதில் பெரும்பங்கு வகித்தது. தேர்தல் காலத்தில் சிங்கள மக்கள் மத்தியில் பிரசாரங்களை அவர்கள் மேற்கொண்டனர். சமாதானத்துக்குச் சாதகமான ஒரு சூழலை ஏற்படுத்துவதில் இது கணிசமான பங்கு வகித்தது.

இம்முறை நிலைமை வேறுபட்டதாக இருக்கிறது. நம்பிக்கையீனம் நிலவுவதைக் காண்கிறேன். யுத்தம் மீண்டும் ஆரம்பித்து விட்டது. தினசரிப்பத்திரிகைகளைப் பார்க்கிறபோது ஏமாற்றமாக உள்ளது. பத்திரிகைகளில் லேக்ஹவுஸ் வெளியீடுகளைத் தவிர ஏனைய சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் யுத்தவாதத்துக்கு முக்கியம் தருகிறார்கள் என்பது ஒரு முரண்நகை. இனவாத சக்திகளும் பழையபடி மேலெழுந்துள்ளன.

அதேநேரம் சமாதானத்துக்ககான இயக்கமும் வலுவிழந்துள்ளது. எனினும் என்னைப் பொறுத்தவரை அரசியல் தீர்வு அவசரமானதும் அவசியமானதும் மட்டுமல்ல சாத்தியமானதுமாகும் என்றே நம்புகிறேன். எமது தேசிய இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமில்லை. அரசியல் தீர்வே ஒரே வழி என்பது என்னுடைய அடிப்படை நிலைப்பாடு. அதில் மாற்றம் ஏதும் இல்லை.

**சமாதானப் பேச்சுக்கள் மற்றும் வழிமுறைகள் வெற்றியீட்டத் தவறியது பற்றிய உங்களுடைய பார்வை என்ன?**

பொ.ஐ.மு அரசுக்கும் புலிகளுக்கும் இடையேயான சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்தமைக்குப் பல காரணங்கள் உள்ளன. இருதரப்பிலுமே பிழைகள் இருந்திருக்கின்றன. எனினும் யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறியது புலிகள்தான். எனவே யுத்தம் ஆரம்பித்தமைக்கான உடனடிப் பொறுப்பு அவர்களையே சாரும்.

பேச்சுவார்த்தைகளில் அரசியல் தீர்வுத் திட்டம் பின்தள்ளப்பட்டது. இருபகுதியினருமே அன்றாடப் பிரச்சினைகள் பற்றிப் பேசினார்கள். விடுதலைப் புலிகளும் தீர்வை முன்வைக்கும்படி கேட்கவில்லை. அரசாங்கமும் தீர்வை முன்வைக்கவில்லை.

புலிகள் பேச்சுவார்த்தைகளிலிருந்து விலகும் முடிவை எடுத்ததில் நியாயம் இருந்திருக்கலாம். எனினும் ஒருதலைப் பட்சமாக யுத்த நிறுத்தத்தை மீறி யுத்தத்தில் ஈடுபட்டது என்பது மகா தவறு.

இது எதைக் காட்டுகிறது என்றால், பேச்சுவார்த்தைக் காலத்தில் அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுக்காமையையே. இவர்களுடைய சிந்தனையிலும் நடைமுறையிலும் ராணுவவாதமே மேலோங்கியிருப்பதாகத் தோன்றுகிறது. தன்னை ஒரு விடுதலை இயக்கம் என்று சொல்லிக் கொள்ளும் ஒரு இயக்கம் எப்போதுமே அரசியலுக்கு முதன்மை தந்திருக்க வேண்டும். இதுவே விடுதலை இயக்கங்களின் வரலாறு தரும் பாடம். அப்படிப் பார்க்கிறபோது அரசியலுக்கு முதலிடம் கொடுக்காது தங்களுடைய அமைப்பு நலன்களினடிப்படையிலிருந்து பிரச்சினைகளை அணுகுகிற போதுதான் கேள்வி எழுகிறது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது தங்களுடைய நிலைப்பாட்டை சிங்கள, முஸ்லீம் மக்களுக்கு எடுத்து விளக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பம் இருந்தது. உதாரணமாகத் தென்னிலங்கையிலிருந்து சமாதான, ஜனநாயக சக்திகள் வடக்கே சென்றபோது தமிழ் மக்கள் அவர்களை மனமுவந்து வரவேற்றார்கள். புலிகள் உண்மையாகவே சமாதானத்தில் ஆழ்ந்த நம்பிக்கை வைத்திருந்திருந்தால் தென்பகுதிக்குத் தங்களுடைய தூதுக்குழு ஒன்றை அனுப்பி வைத்திருக்க வேண்டும். அதன்மூலம் தென்னிலங்கையில் நல்லெண்ணத்தை ஏற்படுத்த முடிந்திருக்கும். புலிகள் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தவில்லை என்பதால் அது அவர்கள் அரசியலுக்கு முதலிடம் கொடுப்பதில்லை என்பதே. மற்றும் அவர்களுடைய இயக்க நலன்களே தமிழ் மக்களின் நலன் என்று முற்றுமுழுதாக நம்புகிறார்கள். பேச்சுவார்த்தைக் காலத்தில் உலக அரங்கிலும் தென்னிலங்கையிலும் தம்மைப் பற்றிய நல்ல படிமங்களை விதைப்பதற்குப் புலிகளுக்கு நல்ல வாய்ப்பிருந்தது. அதனைத் தவறவிட்டமை சர்வதேச அரங்கில் புலிகளை மாசுபடுத்தியுள்ளது. புலிகள் தமிழ்மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் என்று உளப்பூர்வமாக நம்புவர்களிடம் கூடப் புலிகள் தார்மீக நியாயத்தை இழந்து விட்டனர் என்று கருதுகிறேன்.


இது சிங்கள இனவாதிகளின் எதிர்வு கூறல்களை நிரூபிப்பதாக இருந்தது. மேலும் தென்னிலங்கைச் சமாதான இயக்கத்திலும் ஒரு பாரிய பின்னடைவை ஏற்படுத்திவிட்டது.

இன்னொருபுறத்தில் அரசாங்கத்தின் தவறுகளையும் நாம் கவனத்திலெடுக்க வேண்டும். அரசாங்கத்திடம் தெளிவான தீர்வுத் திட்டம் ஒன்று இல்லாமையே பிரதானமான தவறாகும். ஆரம்பத்தில் அரசாங்கத்திடம் நல்லெண்ணம் இருந்தது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் பிரச்சினையைத் தீர்க்க முன்வரும் அரசாங்கம் தேசிய இனப் பிரச்சினைத் தீர்வு பற்றிய ஒரு அடிப்படைத் திட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும். இந்த அரசாங்கத்திடம் அபிவிருத்தி பற்றியோ, தேசிய இனப் பிரச்சினைத் தீர்வு பற்றியோ எவ்வித திட்டமும் இருக்கவில்லை.

பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் நடாத்திய விதமும் பேச்சுவார்த்தைகளுக்கென அனுப்பிய குழுக்களின் காத்திரமற்ற அணுகுமுறைகள் என்பனவும் அரசு சீரியமுறையில் சமாதானப் பேச்சுக்களை நடத்த முயலவில்லை என்பதைக் காட்டுகிறது. இதைப் பற்றிய விமர்சனங்கள் பேச்சுவார்த்தைக் காலகட்டத்தின் போதே பல மட்டங்களிலும் முன்வைக்கப்பட்டதை நான் அறிவேன். எனினும் அரசாங்கத் தலைமை இது பற்றிக் கவனம் எடுக்கவில்லை.

## “வட-கிழக்கில் தனது நியாயாதிக்கத்தை அரசு இழந்துவிட்டது!”

**— கலாநிதி சண்முகரட்ணம்**



பேச்சுவார்த்தைகள் முறிந்த பிற்பாடு அரசாங்கத்தின் போக்கு தென்பகுதியிலுள்ள மற்றைய கட்சிகளின் இணக்கம் பெற்ற பிற்பாடே அரசியல் தீர்வு என்று மாறிற்று. இது வருந்தத்தக்கது.

சந்திரிகா அவர்களுக்கு மக்கள் ஆணை உள்ளது. அந்த ஆணை சிங்கள இனவாத சக்திகளுக்கு எதிரான மக்களின் ஆணையாகும். தோற்கடிக்கப்பட்ட சக்திகளின் சம்மதத்தைப் பெறுவது என்பது மக்கள் அரசாங்கத்துக்கு அளித்த ஆணையை உதாசீனம் செய்வதாகும்.

**இப்போதுள்ள சூழ்நிலையில் அரசியல் தீர்வுத் திட்டத்தை அரசாங்கம் முன்வைக்கும் என்று கருதுகிறீர்களா?**

இந்த அரசாங்கத்துக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் இருந்தது. தமிழ், முஸ்லிம் மக்களில் பெரும்பான்மையானோர் புலிகளின் ஆட்சிக்குட்படாத பிரதேசங்களிலேயே வாழ்கிறார்கள். இவர்களுடைய அடிப்படை மொழி, மனித உரிமைகளை அரசாங்கம் கௌரவித்து நடைமுறைப்படுத்திக் காட்டியிருக்கலாம். உதாரணத்துக்குத் தமிழ் மொழிப் பயன்பாட்டையே எடுத்துக் கொள்ளுங்கள். அலுவலக மொழிகள் ஆணைக்குழு எத்தகைய அறிக்கையைத் தருகிறது என்பதல்ல முக்கியம். அது எவ்வளவு தூரம் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதே கேள்வி. அரசமைப்பும் அது சார்ந்த அனைத்து நிறுவனங்களும் இனவாதத்திலிருந்து சுத்திகரிக்கப்பட வேண்டும். அரசியல் தீர்வுத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் தொடர்பாகப் பேசுகிற போது இரண்டு முக்கியமான அம்சங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஒன்று, தென்னிலங்கையில் வாழும் தமிழ், முஸ்லீம் மக்கள் எல்லா உரிமைகளையும் சமத்துவமாக நடைமுறையில் அனுபவிப்பது; இரண்டாவது மலையகத் தமிழர்களின் பிரச்சினைக்குச் சரியான தீர்வும் நடைமுறைப்படுத்தலும்.

வடக்கில்தான் புலிகளின் ஆட்சி; அங்கு ஒன்றுமே செய்ய முடியவில்லை என்று சொன்னாலும் வடக்குக்கு வெளியே இவை ஏன் நடைமுறைப்படுத்தப் படவில்லை? என்ற கேள்வி எழுவது நியாயமானதே. வடக்குக்கு வெளியே வாழும் தமிழ் முஸ்லீம் மக்கள் சமத்துவமாக உரிமைகளை அனுபவிக்கிறோம் என்று உணர்வார்களானால் அது வடக்கிலும் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். அப்படியான ஒரு சூழலில் மறுபடியும் பேச்சுவார்த்தைகள் ஏற்படக்கூடிய சூழல் உருவாகலாம்.

**சமாதானத் தீர்வு என்ற ஆணையின் மேல் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் இதுவரை காலத்துள் தமிழ், முஸ்லீம் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்வதாக எதையும் நடைமுறைப் படுத்தவில்லலயே?**

அரசாங்கம் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தத் தவறியது எனக்கு ஏமாற்றமே. இப்போது எனில் ராணுவத் தீர்வை நாடும் பிரிவினர் அரசினுள் பலம்பெற்று வருகிறார்கள். பொ.ஐ. முன்னணி அரசில் முற்போக்கு எண்ணம் கொண்டவர்களும் ராணுவத் தீர்வை ஏற்றுக் கொள்ளாதவர்களும் உள்ளனர் என்பது உண்மை எனினும் இவர்களுடைய கருத்துக்களுக்கு எவ்வளவு தூரம் செல்வாக்கு உள்ளது என்பது தெளிவில்லை.

புலிகள் மீண்டும் யுத்தத்தைத் தொடுத்திருப்பதால் வடக்கிலுள்ள தமிழ் மக்களைப் புலிகள் ஒடுக்குமுறைகளிலிருந்து விடுதலை செய்வதற்காகத்தான் யுத்தம் புரிகிறோம் என்று இப்போது சிலர் வாதாடுகிறார்கள். இவர்கள் அடிப்படையான ஒரு உண்மையை மறந்து விடுகிறார்கள். வடக்குக் கிழக்கு மக்களைப் பொறுத்தவரை இலங்கை அரசு தன்னுடைய நியாயப்பாட்டை எப்போதோ இழந்து விட்டது. இதற்கு முக்கியமான காரணம் கடந்த 17 வருட யுத்த அனுபவங்களாகும். இலங்கை அரசின் பிரதிநிதிகளாகவும் சின்னமாகவும் அவர்கள் எதிர்கொள்வது ஒடுக்குமுறையாளர்களான சிங்களப் படையினரைத்தான். இந்த ஒடுக்குமுறையாளர்களைக் கொண்டே வடக்குத் தமிழ் மக்களை விடுதலை செய்ய வேண்டும் என்று சொல்பவர்களின் அரசியல் நகைப்புக்குரியது.

புலிகளின் ராணுவவாதப் போக்கையும் சர்வாதிகார வழிமுறைகளையும் தமிழ் மக்கள் முற்றாக உணரும்படி செய்ய வேண்டுமானால் அரசாங்கத்தின் ராணுவத் தீர்வு உதவாது.

தெற்கில் வாழும் தமிழ், முஸ்லீம் மக்களின் அபிமானத்தை அவர்களைச் சமத்துவமாகவும், கௌரவமாகவும் நடத்துவதன் மூலம் அரசு வென்றெடுக்க வேண்டும். அதனூடாகவே மாற்றுவழிகள் சாத்தியம் என்பதை வடக்குத் தமிழ் மக்களுக்கு உணர வைக்க முடியும். இத்தகைய வழிமுறை ஒன்று வடக்குத் தமிழ் மக்களிடம் புலிகளின் ஆதிக்க வாதம் குறித்து எதிர்ப்பு உணர்வுகளை மேலெழச் செய்யும்.

**இன்றைய சூழலில் தென்னிலங்கையில் சமாதான இயக்கத்தினரின் வழிமுறைகள் எப்படி அமைய வேண்டும்?**

சமாதான இயக்கமொன்றுக்கான தேவை இன்றுதான் முன்னெப்போதையும் விட அவசியமாக உணரப் படுகிறது. இந்த இயக்கம் பரந்துபட்டபல்லின மக்கள் கொண்ட இயக்கமாக மாற வேண்டும். தொடர்ச்சியாக இயங்குவதன் மூலம் வட - கிழக்கு மக்களின் நம்பிக்கையைப் பெற வேண்டும். இச் சமாதான இயக்கத்தின் அடிப்படைக் கோரிக்கைகளாகப் பின்வருபவை இருக்க வேண்டும். ஒன்று யுத்த நிராகரிப்பு - அரசாங்கமும் புலிகளும் யுத்தநிறுத்தம் ஒன்றுக்கு உடன்பட வேண்டுமென வலியுறுத்த வேண்டும். இரண்டாவது, அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும். மூன்றாவது, தமிழ், முஸ்லீம் மக்களை இச் சமாதான இயக்கத்துடன் இணைத்துக் கொள்ள எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

**சுதந்திரமான இடதுசாரி இயக்கம் ஒன்று இலங்கையில் இப்போது இருக்கிறது என்று நினைக்கிறீர்களா?**


இல்லை. எனினும் அத்தகைய இயக்கத்தை மீளமைப்புச் செய்வது நம்முடைய கடமைகளுள் ஒன்று. பொ.ஐ.மு. அரசாங்கத்தில் இடதுசாரிகள் இருப்பது அல்ல எனது பிரச்சினை. இந்த இடதுசாரிகள் சுதந்திரமான விமர்சகர்கள் என்ற ஸ்தானத்தை இழந்து விட்டனரே என்பதுதான் என்னுடைய பிரச்சினை. பல்லின மக்களையும் கொண்ட, பல்லின மக்களையும் பிரதிபலிக்கும் ஒரு சுதந்திரமான இடதுசாரி இயக்கம் ஒன்று எமக்குத் தேவை.

**சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது தங்களுடைய நிலைப்பாட்டை சிங்கள, முஸ்லீம் மக்களுக்கு எடுத்து விளக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பம் இருந்தது. உதாரணமாகத் தென்னிலங்கையிலிருந்து சமாதான, ஜனநாயக சக்திகள் வடக்கே சென்றபோது தமிழ்மக்கள் அவர்களை மனமுவந்து வரவேற்றார்கள். புலிகள் உண்மையாகவே சமாதானத்தில் ஆழ்ந்த நம்பிக்கை வைத்திருந்திருந்தால் தென்பகுதிக்குத் தங்களுடைய தூதுக்குழு ஒன்றை அனுப்பி வைத்திருக்க வேண்டும். அதன்மூலம் தென்னிலங்கையில் நல்லெண்ணத்தை ஏற்படுத்த முடிந்திருக்கும். புலிகள் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தவில்லை என்பதால் அது அவர்கள் அரசியலுக்கு முதலிடம் கொடுப்பதில்லை என்பதே. மற்றும் அவர்களுடைய இயக்க நலன்களே தமிழ் மக்களின் நலன் என்று முற்றுமுழுதாக நம்புகிறார்கள். பேச்சுவார்த்தைக் காலத்தில் உலக அரங்கிலும் தென்னிலங்கையிலும் தம்மைப் பற்றிய நல்ல படிமங்களை விதைப்பதற்குப் புலிகளுக்கு நல்ல வாய்ப்பிருந்தது. அதனைத் தவறவிட்டமை சர்வதேச அரங்கில் புலிகளை மாசுபடுத்தியுள்ளது. புலிகள் தமிழ்மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் என்று உளப்பூர்வமாக நம்புவர்களிடம் கூடப் புலிகள் தார்மீக நியாயத்தை இழந்து விட்டனர் என்று கருதுகிறேன்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# கிழக்கு முஸ்லீம்களின் சமூக இருப்பு: ஒரு கேள்விக்குறி!







**மருதூர் பஷீத்**

**சென்ற இதழ் தொடர்ச்சி**

மறுபுறத்தில் புலிகள் அமைப்பினரும், முஸ்லீம் தரப்பில் சில பிரிவினரும் கூறுவது போன்று, இக்கடிதங்கள் கிழக்கில் தமிழ் - முஸ்லீம் உறவைச் சீர்குலைக்க முயற்சிக்கின்ற சக்திகளின் திட்டமிட்ட சதிச்செயல் என்ற வாதத்தையும் கிழக்கு முஸ்லீம்கள் மிக நிதானமாக பரிசீலிக்க வேண்டும். 1985ம் ஆண்டுக்குப் பின்னர் கிழக்கில் தமிழ் - முஸ்லீம் உறவுகளைச் சீர்குலைப்பதில் பல்வேறு சக்திகள் திட்டமிட்ட ரீதியில் செயற்பட்டு வந்திருப்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். அரசு, தமிழ் அமைப்புகள், முஸ்லீம் தலைமைகள் அரசபடைகள் அப்படைகளுடன் இணைந்து செயற்படுகின்ற சில தனிப்பட்ட முஸ்லீம் நபர்கள் எனப் பல்வேறு பிரிவினர் கிழக்கில் தமிழ் - முஸ்லீம் உறவுகளைச் சீர்குலைப்பதில் திட்டமிட்டு செயற்பட்டிருக்கிறார்கள்.

இந்த உறவைக் குலைப்பதன் மூலமாக, இந்த ஒவ்வொரு பிரிவினரும் நன்மை அடையக் கூடியவர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். இவர்கள் தாம் அரசியலில் செல்வாக்குப் பெறுவதிலும் அதிகாரத்தைப் பெறுவதிலும் பொருளாதாரரீதியில் நன்மைகள் அடைவதிலும் கிழக்கில் தமிழ் - முஸ்லீம் உறவைக் குலைப்பது உதவி வந்திருக்கிறது. இவ்வகையில் இச்சக்திகள் மீண்டும் தமது வாய்ப்புகளைப் பலப்படுத்திக் கொள்வதற்காக தமிழ் - முஸ்லீம் உறவைக் குலைக்க முற்படுவார்கள் என்பது எதிர்பார்க்கக் கூடியதே. உண்மையில் ஏப்ரல் 19ம் திகதிக்குப் பின்னர் கிழக்கின் பல இடங்களில் இந்தச் சக்திகள் தமது செயற்பாடுகளை ஏற்கெனவே தொடங்கி விட்டார்கள் என்பதை கிழக்கு முஸ்லீம்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இவ்வாறான நிலையில் மட்டக்களப்பு முஸ்லீம்களை வெளியேறும்படியான அச்சுறுத்தல் கடிதங்களை அனுப்புவதன் மூலமாக கிழக்கு முஸ்லீம்களிடையே பதட்டத்தையும் ஆவேஷமான நிலையையும் ஏற்படுத்தி, அதன் மூலமாக தமது இலக்குகளை அடைந்து கொள்வதற்கு இவர்கள் முயற்சிக்கக் கூடிய சாத்தியத்தை கிழக்கு முஸ்லீம்கள் உதாசீனப்படுத்திவிடக்கூடாது.

இதைவிடப் போர்நிறுத்த ஒப்பந்த முறிவுக்குப் பின்னர் கிழக்கில் புலிகள் அடைந்திருக்கின்ற வெற்றிகளையும், அரச படையினருக்கு ஏற்பட்டிருக்கின்ற சிக்கலான நிலைமைகளையும் கவனத்தில் கொள்ளும் போது, அரசும், அரசபடையினரும் கிழக்கில் மீண்டும் தமது பிடிகளை இறுக்கிக் கொள்வதற்காக முஸ்லீம் இளைஞர்களைப் பயன்படுத்த முயற்சிப்பார்கள் என்பதும் எதிர்பார்க்கப்படக் கூடியதே.

இவ்வகையில் கிழக்கில் தமிழ் - முஸ்லீம் உறவைக் குலைப்பதினூடாக **முஸ்லீம் சமூகத்தை மனிதக் கேடயங்களாகப்** பயன்படுத்துவதற்கு அரசும் அரச படையினரும் திட்டமிட் [illegible] ற்படக்கூடிய சாத்தியத்தை கிழக்கு முஸ்லீம்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

கிழக்கு முஸ்லீம்கள் தமது சமூக இருப்புக்கு இன்று ஏற்பட்டிருக்கின்ற இந்த அச்சுறுத்தலை தெளிவாகவும் உணர்வுபூர்வமாகவும் புரிந்து கொள்வதோடு, அதற்கு எதிராக ஒன்றிணைந்த உணர்வெழுச்சியை வெளிப்படுத்துவதும் அவசியமாகின்றது. வடக்கு - கிழக்கு வாழ்கின்ற முஸ்லீம்கள், தாம் ஒரே விதமான அரசியல் விதிக்குட்பட்டவர்கள் என்ற யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது; தமது பாரம்பரியப் பிரதேசங்களில் தமக்குரிய பூரண உரிமைகளோடு வாழ்வதற்கு தமக்குள்ள பாத்தியதையை உறுதியாகக் கோரிப் பெற வேண்டிய நேரம் வந்து விட்டது; தமது அரசியல் ஐக்கியம் மிகவும் அவசியமானதும் இன்றியமையாததும் என்பதைப் புரிந்து கொண்டு, அத்தகைய ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய தருணம் வந்து விட்டது; வடக்கு முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்ட போது, வடக்கு முஸ்லீம்கள் மட்டுமன்றி, கிழக்கு முஸ்லீம்களும் அந்த வெளியேற்றத்தை மௌனமாக முகம் கொடுத்ததினால் வடக்கு முஸ்லீம்களுக்கு இன்று ஏற்பட்டிருக்கின்ற அவல நிலையை மனம் கொள்ள வேண்டிய தேவை வந்து விட்டது; ஐந்து வருடங்களாக யாராலும் அக்கறை செலுத்தப்படாத, வேரறுந்த ஓர் அநாதைச் சமூகமாக சீரழிந்து கொண்டிருக்கின்ற வடக்கு முஸ்லீம்களை ஒத்த நிலையை தாமும் எதிர்நோக்கியிருக்கிறோம் என்ற நிதர்சனத்தை கிழக்கு முஸ்லீம்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது.

இத்தகைய நிலையிலிருந்து வடக்கு, கிழக்கு முஸ்லீம்கள் தமது சமூக இருப்பைப் பேணிக் கொள்வது எப்படி? அரசும், அதன் படைகளும் தமக்கு உதவும் என்ற மாயையிலிருந்து வடக்கு கிழக்கு முஸ்லீம்கள் முற்றாக விடுபட வேண்டியது அவசியம். முற்றிலும் பௌத்த - சிங்கள இனவாத சித்தாந்தத்தின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டிருக்கின்ற அரசும், அதன் படைகளும், வடக்கு கிழக்கு முஸ்லீம்களின் விடயத்தில் சமத்துவமாகவும், அர்ப்பணிப்புடனும் நடந்து கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பது வடக்கு, கிழக்கு முஸ்லீம்களின் பலவீனத்தின் வெளிப்பாடாக மட்டுமே அமைய முடியும். சுதந்திரத்தின் பின்னர் தொடங்கி இன்றுவரை அரசு, திட்டமிட்டரீதியில் குடியேற்றங்களையும், பொருளாதாரச் சீர்குலைவுகளையும் ஏற்படுத்தி வடக்கு, கிழக்கு முஸ்லீம்களின் சமூக இருப்பைச் சிதைத்து வருவது ஒருபுறமிருக்க, தமிழ் அமைப்புகளினால் வடக்கு, கிழக்கு முஸ்லீம்கள் தாக்கப்பட்ட போதும், வடக்கு முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்ட போதும் அரசும், அரச படைகளும் முஸ்லீம்களின் உதவிக்கு வரவில்லை என்ற உண்மையை நினைவில் கொள்ள வேண்டும். ஐந்து வருடங்களாக, நூற்றுக் கணக்கான முகாம்களில் சீரழிந்து கொண்டிருக்கின்ற வடக்கு முஸ்லீம்களை, தனது நாட்டின் பிரஜைகள் என்ற அடிப்படையில் கூட சமத்துவமாக நடத்த முன்வராத அரசிடம் தனது சொந்த சிங்கள மக்களை வடக்கு கிழக்கில் குடியேற்றி அவர்களை புலிகள் அமைப்பின் தாக்குதல்களுக்கும் பலி கொடுத்து வருகின்ற அரசபடைகளிடம் கிழக்கில் திட்டமிட்ட ரீதியில் தமிழ் - முஸ்லீம் உறவைச் சீர்குலைத்து வந்திருக்கின்ற அரச படைகளிடம் வடக்கு, கிழக்கு முஸ்லீம்கள் தமது பாதுகாப்பையும், சமூக இருப்பையும் ஒப்படைப்பது என்பது உண்மையில் ராணுவ, மற்றும் அரசியல் ரீதியில் தம்மைத்தாமே பலிக்கடாவாக்கும் நிகழ்வாக அமையும். அரச படைகள் சில முஸ்லீம் இளைஞர்களை தம்முடன் இணைத்துக் கொள்வது என்பது, வடக்கு, கிழக்கில் தமது அதிகாரத்தை நிலைநாட்டுவதற்காகவே தவிர, அங்கு முஸ்லீம்கள் சமத்துவத்துடனும், உரிமையுடனும் வாழ்வதற்காக அல்ல என்ற உண்மையை வடக்கு, கிழக்கு முஸ்லீம்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

வடக்கு, கிழக்கு முஸ்லீம்களின் ஆதரவினால் இன்று அரசியலில் ''சக்திமிக்கவர்களாக'' விளங்குகின்ற ஸ்ரீ.மு.காங்கிரஸ் தலைமை, அந்த முஸ்லீம்களின் உரிமைகளையும், பாதுகாப்பையும் உதறித் தள்ளிவிட்டு தம்முடைய சொந்த நலன்களையும் முன்னேற்றங்களையும் இலக்காகக் கொண்டு செயற்படுபவர்களாக மாறிவிட்டார்கள். இப்போது அரசாங்கத்தின் ''பங்காளிகளாக'' உயர்ந்து விட்ட இவர்கள், தமது சொந்த நலன்களை இழந்து, வடக்கு, கிழக்கு முஸ்லீம்களின் சமூக இருப்பைப் பேணுவதற்காக செயற்பட முன்வருவார்கள் என்று எதிர்பார்ப்பது அரசியல் குருட்டுத்தனத்தின் விளைவாகத்தான் இருக்கும். வடிக்கு கிழக்கு முஸ்லீம்கள் ஸ்ரீ.மு.காங்கிரஸ் தலைவரிடம் சில விடயங்களை நினைவுபடுத்த வேண்டியவர்களாக உள்ளார்கள். அரந்தலாவையில் நூற்றுக்கணக்கான முஸ்லீம்கள் படுகொலை செய்யப்பட்ட போது முஸ்லிம்களுக்கு என ஒரு தனியான இராணுவப் பிரிவை அமைக்கும்படி அவர் அரசிடம் விடுத்த கோரிக்கையையும், பின்னர் முஸ்லீம்கள் ''ஜிகாத்தில்'' ஈடுபடுவதற்குரிய தீர்மானத்தை எடுக்கும்படி உலமா சபையினரிடம் அவர் விடுத்த ஒரு வாரக் கெடுவும் இப்போது எந்தளவுக்கு செயல்வடிவம் பெற்றிருக்கிறது என்று ஸ்ரீ.மு.காங்கிரஸ் தலைவரிடமிருந்து அறிந்து கொள்வது அவசியம். வெறும் கோரிக்கைகள் மூலமும், ஆவேசப் பேச்சுக்கள் மூலமும் தனது சமூகத்தின் இருப்பையும் உரிமையையும் பேண முடியாது என்ற உண்மையை ஸ்ரீ.மு.காங்கிரஸ் தலைமைக்கு உணர்த்துவதில் பயன் ஏதுமில்லை. ஏனெனில் அதுவே அவர்களின் அரசியல் வழிமுறையாகி விட்டது. ஆனால் இந்த உண்மையை வடக்கு, கிழக்கு முஸ்லீம்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்

ஸ்ரீ.மு.காங்கிரஸ் தலைமையின் நோக்கம் எல்லாம், அரசாங்கத்தின் ''பங்காளிகளாக'' எவ்விதம் தம்மைத் தொடர்ச்சியாகப் பேணிக் கொள்வது என்பதில்தான் இருக்கிறது. ஒருவேளை இன்றைய பொ.ஐ. முன்னணி அரசாங்கத்தில் இருந்து ஸ்ரீ.மு. காங்கிரஸ் தலைமை விலக முடிவெடுத்தால், அதன் நோக்கம் முஸ்லீம்களின் உரிமைகளை வென்றெடுப்பது என்பதல்ல; மாறாக புதிதாக அமையக்கூடிய ஐ.தே.க அரசாங்கத்தில் இன்னும் கூடுதலான அந்தஸ்தைப் பெறுவதாகவே இருக்கும். தமது தேசிய உரிமைகளை வென்றெடுக்கின்ற நோக்கத்தில் வடக்கு, கிழக்கு முஸ்லீம்கள் ஸ்ரீ.மு.காங்கிரஸிற்கு உறுதியான ஆதரவை வழங்கி வந்திருக்கின்ற போதிலும், இன்றுவரை அவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு தலைமை எந்தவித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. இந்நிலையில், தமது சமூக இருப்பு நேரடி அச்சுறுத்தலுக்கு இலக்காகியுள்ள இன்றைய இக்கட்டான நிலையில் ஸ்ரீ.மு.காங்கிரஸ் தலைமையில் நம்பிக்கை வைப்பது உண்மையில் வடக்கு, கிழக்கு முஸ்லீம்கள் தம்மை சமூக அழிவுக்கு இட்டுச் செல்வதாகவே அமையும்.

தமது வரலாற்றில் மிகவும் இக்கட்டான, முக்கியத்துவம் வாய்ந்ததான ஒரு கட்டத்தை அடைந்திருக்கின்ற வடக்கு, கிழக்கு முஸ்லீம்கள் தமது சமூக, அரசியல் எதிர்காலம் குறித்து ஆழமாகவும், அவசரமாகவும் சிந்திக்க வேண்டியது அவசியமாகின்றது. பௌத்த - சிங்கள இனவாத சித்தாந்தத்தால் கட்டமைக்கப்பட்டுள்ள அரசு, மற்றும் அதன் படைகள்; தமிழ் இனவாதத்தால் பீடிக்கப்பட்டு , வடக்கு- கிழக்கு முஸ்லீம்களை அழிக்க முயற்சிக்கின்ற புலிகள் அமைப்பினர் மற்றும் ஏனைய தமிழ் அமைப்புக்கள்; தனது சொந்த நலன்களை உயர்த்திக் கொள்வதற்காக சந்தர்ப்பவாத அரசியலை சொந்தமாக்கிக் கொண்டுவிட்ட ஸ்ரீ.மு.காங்கிரஸ் தலைமை மற்றும் ஏனைய முஸ்லீம் தலைமைகள், சமூக விரோத முஸ்லீம் தனிநபர்கள் போன்ற அனைத்தும் வடக்கு, கிழக்கு முஸ்லீம்களின் சமூக இருப்பையும் அவர்களின் உரிமைகளையும் பேணுவதில் இன்றுவரை நேர்மையாகச் செ[illegible]ற்படவில்லை என்பதை தெளிவாகப் புரிந்து கொள்வதோடு, இனியும் அவை அவ்வாறே அமைந்திருக்கும் என்ற உண்மையையும் விளங்கிக் கொள்வது அவசியம். இந்நிலையில் வடக்கு, கிழக்கு முஸ்லீம்கள் தமது தலைவிதியைத் தமது சொந்தக் கரங்களில் எடுப்பது ஒன்றுதான் அவர்களின் முன்னிருக்கின்ற சரியான வழியாக இருக்கின்றது. அரசியல் ஐக்கியம்: இது ஒன்றுதான் வடக்கு, கிழக்கு முஸ்லீம்கள் தமது இருப்பையும், உரிமைகளையும் பேணுவதற்கான சமூகக் கேடயமாக அமையக்கூடியது. ஐந்து வருடங்களாகத் தமது பாரம்பரியப் பிரதேசங்களில் இருந்து வெளியேற்றப்பட்டிருக்கின்ற வடக்கு முஸ்லீம்களும், தமது வெளியேற்றத்திற்கான நாட்கள் குறிக்கப்படக் கூடிய சாத்தியத்தை கொண்டிருக்கின்ற கிழக்கு முஸ்லீம்களும் தம்மை அரசியல் ரீதியில் ஒன்றிணைப்பது அவசியமாகின்றது. தமது உறுதியான வெகுஜன செயற்பாடுகளையும், தமது பாரம்பரியப் பிரதேசங்களில் தமக்கிருக்கின்ற மறுக்க முடியாத உரிமைகளையும் வெளிப்படுத்துவது அவசியமாகின்றது.

ஒவ்வொரு சமூகமும் தன்னிடமிருந்து சமூக நேர்மையும், உயிர்த்துடிப்பும் நிறைந்த சிறந்த நபர்களை உருவாக்கவே செய்கின்றது. இத்தகையோரின் உறுதியான வழிகாட்டலில், அந்த சமூகம் வரலாற்றில் தனது பெருமைமிகு முத்திரைகளைப் பதித்துச் செல்கின்றது. வடக்கு, கிழக்கு முஸ்லீம்களும் இத்தகைய சிறப்பான நபர்களை, உலகுக்கு வெளிப்படுத்த வேண்டிய காலம் வந்து விட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(சென்ற இதழ் தொடர்ச்சி)

எஸ்விஆர் (எஸ்.வி.ராஜதுரை) ஆராய்ந்து நிரூபிக்க முற்படும் கருதுகோளைப் பின் வருமாறு சுருக்கிக் கூறலாம் என நம்பு கிறேன்: ''இந்திய தேசம்'' (The Indian Nation) ஆங்கில மொழி மூலம் கல்வி கற்ற பார்ப்பனிய மற்றைய உயர்சாதிகளைச் சேர்ந்த அறிவாளிகளால் கற்பிதம் செய்யப் பட்டு பார்ப்பனிய - பனியா கூட்டின் ஆதி க்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்தக் கருத்தமைவு - கலாசாரரீதியான மேலாட்சித் திட்டம் பிரிட்டிஷ் காலனித் துவம் தந்த அரசியல் - புவியியல் சட்டத்தி ற்குள் அமுலாக்கப்பட்டது. இந்திய தேசத் தைக் கற்பிதம் செய்வதில் பிராமணியம் முக்கிய பங்கினை வகித்தது. உப கண்டம் பூராவும் பல கூறுகளாக - இன பிரதேச ரீதியில் - பிளவுண்டிருந்த இந்து மதம் சார் ந்த சகல சமூகங்கள் மீதும் மரபுரீதியான மேலாட்சியைக் கொண்டிருந்த ஒரே ஒரு சாதி பார்ப்பனர்தான். இந்த மரபுரீதியான செல்வாக்கு பார்ப்பனிய கருத்தமைவிற்கு இந்திய தேசியவாதத்தின் உருவாக்கத்தில் ஒரு விசேட அந்தஸ்தைக் கொடுத்தது. பார்ப்பனியம் அகில இந்திய ரீதியிலான ஒரு ஒருங்கிணைப்பிற்கு உதவியது. ஆனால் இது பரந்துபட்டிருந்த இந்து சமூக ங்களை மட்டுமே உள்ளடக்கியது. இந்தத் தேசியவாதக் கருத்தமைவின் மைய சக்தி யான ''இந்து - இந்தி'' இணைவும் அதற்கு உந்து சக்தியாக விளங்கிய (அதே நேரம் தனித்துவமான இயக்கப்பாட்டினையும் கொண்டிருந்த) இந்து அடிப்படை வாதமும் இந்து - முஸ்லிம் பிரிவினைக்கு வித்தி ட்டன. இந்தக் கருதுகோளை ஆராய்ந்து விளக்க முற்படும் போது இராஜதுரை இன் றைய ஆளும்கட்சியான காங்கிரசின் ''மதச் சார்பின்மை'' போன்ற சுயபாவனைகளு க்குச் சவால்விடும் அதேவேளை காந்தி, நேரு, திலகர் போன்ற இந்திய தேசிய தலை வர்களின் வர்க்க - இனத்துவ சார்புகளையும் வெளிப்படுத்துகிறார். இந்திய தலித்துக் களின் ஆபிரகாம் லிங்கன் எனப்படும் அம்பேத்கர் பற்றிய ஒரு மதிப்பீட்டினை முன்வைப்பதன் மூலம் எஸ்.வி.ஆர். இதுவரை காந்தியத்திற்கு வழங்கப்பட்டு வந்த புனித அந்தஸ்தையும் ஆழ்ந்த விமர் சனத்திற்குள்ளாக்குகிறார். நூலாசிரியரின் பிரச்சினை இந்தியாவிற்கு காலனித்துவம் வகுத்த புவியியல் சட்டத்தை ஏற்பதா நிராக ரிப்பதா என்பதல்ல. பிரதான பிரச்சினை அந்தச் சட்டகத்தின் வழிவந்த இந்திய அமைப்பின் அரசியல், பொருளாதார, கருத் தமைவு உள்ளடக்கங்கள் என்ன என்பதே.

கடந்த நாற்பத்தாறு ஆண்டுகளாக இந்திய அமைப்பை ஆண்டு வரும் சக்திகள் எத்த கைய ஒரு இந்தியாவை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன என்பது ஒரு அடிப் படைக் கேள்வியாகும். எனது அபிப்பி ராயத்தில் இஇஇவின் அணுகுமுறை இந்திய உபகண்டத்து யதார்த்தங்களை மனங் கொண்டு பார்க்கும் போது ஆரோக்கிய மானதாகும். 1992இல் பாபர் மசூதியை இந்துத்துவவாதிகள் அழித்தனர். இந்தக் காட்டுமிராண்டித்தனத்தை இந்தியப் பொலி ஸார் பார்த்துக் கொண்டிருந்தது மட்டுமல்ல அதற்கு உதவியாகவும் இருந்தனர். இந்த வன்செயலின் விளைவாக பாகிஸ்தானி லும், பங்களாதேசத்திலும் இந்துக் குடும்ப ங்களும் இந்துக் கோயில்களும் தாக்கப் பட்டன. இவையெல்லாம் நமக்குப் போதிக் கும் அடிப்படைப் பாடமென்னவெனில் இந்திய - பாகிஸ்தான் பிரிவினை, பாகிஸ் தான் - பங்களாதேஷ் பிரிவினை போன் றவை உப கண்டத்தின் இந்து - முஸ்லிம் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவில்லை. இந்திய - பாகிஸ்தான் பிரிவினை இந்தியா வின் இந்துத்துவ தேசியவாத சக்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவில்லை. அதற்கு மாறாக ஆட்சி செய்யும் இந்திய தேசியவா தத்தில் இந்துத்துவ தன்மைகள் மேலும் வலுப்பெறவே உதவியுள்ளன எனலாம். இஇஇவை வாசித்துக் கொண்டிருந்த போது இந்தச் சிந்தனைகள் என்மனதில் தோன்றின.

உபகண்டத்தின் ஆளும் தேசியவாதங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பிரிவினை வாதங்களாக அல்லது புதிய பிரிவினை வாதங்களுக்கு வித்திடுபவையாக மாறிப் போகும் பரிணாமப் போக்கினை கண்டு வந்துள்ளோம். அதேநேரம் அதே உபகண்டத்தில் ஒரு மொழி - ஒரு மதம் எனும் அடிப் படையில் ஒரு தேச - அரசு உருவாக்கம் பெறக்கூடிய பரிபூரணமான நிலைமைகள் இல்லை என்பதையும் காண்கிறோம். பாகி ஸ்தானில் இந்துக்களும் பல மொழிகளைப் பேசுவோரும் உள்ளார்கள். அதேபோல் மொழி - கலாசார அடிப்படையில் பாகி ஸ்தானிடமிருந்து பிரிந்த பங்களாதேசத் திலும் இந்துக்களும், ஆதிவாசிகளும் உள்ள னர். இந்தியாவிலோ பல நூற்றுக்கணக்கான மொழிகளைப் பேசுவோரும் பலமதத்தவர் களும் வாழ்கின்றனர்.

ஆனால் நவீன இந்திய தேசியவாதத்தின் இந்திய தேசிய ஒருங்கிணைப்பிற்குப் பயன் பட்ட கருத்தமைவின் இந்துத்தன்மையும் அத்துடன் இணைந்த சாதியமும் அது தழு விக் கொண்ட இந்தி மொழிவாதமும் அந்த நாட்டின் பல இனங்களை, சமூகப் பிரிவு களை (உதாரணமாக தலித்துக்கள்) பாதக மான வழிகளில் பாதித்தன. நது. இந்த இணைப்புக்கு மேலும் புனிதத்து வத்தைக் கொடுக்க சமஸ்கிருத மயமாக்கல் கொள்கை உதவியது போலும்.

''இந்து - இந்தி'' திட்டம் ஒரு புறம் பல இனத்து மக்களை ஒரு அனைத்திந்திய ஒரு ங்கிணைப்புக்குள் கொண்டு வந்தது. மறு புறம் அது மத, சாதி, மொழி அடிப்படையில பல சமூகங்களை வெளிவாரிப்படுத்தியது. ஆனால், அந்தத் திட்டத்தின் முக்கிய நோக் கம் ஒரு பரந்துபட்ட அகில இந்திய ஒருங்கி ணைப்பே. இந்தியாவின் பல்லினத் தன்மை கள் இந்த நோக்கத்துக்கு பல எதிர்ப்புகளை உருவாக்கியது. முஸ்லீம்கள் சீக்கியர்கள் மத அடிப்படையில் தமது தனித்துவத்துக்காப் போராட முற்பட்டனர். அஸாம், நாகலாந்து போன்ற பிரதேசத்தவர்கள் தமது பாரம்பரிய ங்களின் அடிப்படையில் இந்து - இந்தி - இந்தியாவை எதிர்க்க முற்பட்டனர். தமிழ ர்கள் இந்தித் திணிப்பை எதிர்த்தனர். அதே நேரம் வட இந்தியாவிலும் தமிழ்நாடு தவிர்



இந்தியத் தேசியத்தைக் கேள்விக்குள்ளாக்கும்

எஸ்.வி. ராஜதுரையின்

# இந்து இந்தி இந்தியா

எஸ்.வி.ஆர் இன் பார்வையில் ''இந்து - இந்தி'' எனும் இணைப்பு வெறும் மத- மொழி இணைப்பு மட்டுமல்ல. இவை இர ண்டும் ஒன்றை மற்றையது பலப்படுத்தும் வகையில் இரண்டும் இந்தியாவின் தனித்துவ ஆளுமையின் பரிணாமத்தை நிர்ணயிக்கும் ஆற்றலைப் பெற்றுள்ளன. இந்துஸ்தானியே இந்தியாவின் அரச மொழி யாக இருக்கவேண்டும் எனக் காந்தி விரும்பினார்.

இந்துஸ்தானி இந்தியும் உருதுவும் கலந்த மொழியாகி இருப்பதால் வட இந்தியாவில் வாழும் இந்து - முஸ்லிம் மக்களின் ஒருமை ப்பாட்டின் சின்னமாக, ஊடகமாக விளங்க முடியுமெனக் காந்தி கருதினார். ஆனால் இந்திய காங்கிரஸிற்குள் இருந்த இந்து மதத் தேசியவாதிகள் உருது போன்ற வேற்று மொழிக் கலப்பற்ற இந்தியே ஆட்சி மொழி யாக வேண்டும் என விரும்பினர். அதுவும் ஆட்சி மொழியாகும் இந்தி சமஸ்கிருத மயப்படுத்தப்பட வேண்டுமெனவும் அவர் கள் விரும்பினர். இவர்களின் கை ஓங்கி யது. காந்தியின் கோரிக்கை படிப்படியாக ஒதுக்கப்பட்டது. இந்தியின் சமஸ்கிருத மயமாக்கல் என்பது அதன் பிராமணிய மயமாக்கல்தான். வேதங்களின் மொழி யான சமஸ்கிருதமே இந்து மதத்தின் தேவ மொழி. அந்த மொழியிலேயே பார்ப்பனர் ''மக்களின் சார்பில்'' கடவுளுடன் பேசினர். சமஸ்கிருதம் வழக்கில் இருந்து செத்த மொழியாகி விட்ட போதும் ''இந்து - இந்தி'' திட்டத்திற்கூடாக அது முக்கியத்துவம் பெற்

ந்த தென்னிந்திய மாநிலங்களிலும் இந்தி மயமாக்கலுக்கு எதிர்ப்பு எழவில்லை. வடக் கில் இந்து - இந்தி இணைவு இந்துக்களின் ஆதரவைப் பரவலாகப் பெற்றது. எஸ்.வி.ஆர். எழுதுகிறார்:

''இந்தியா பல் தேசிய இன நாடு, இங்கு ஆதிக்க தேசிய இனம் ஒடுக்கும் தேசிய இனம் என்பது இல்லைத்தான். அதேபோல ஆளும் வர்க்கங்களும் ஆதிக்க சக்திகளும் குறிப்பிட்டதொரு தேசிய இனத்தை மட்டும் சார்ந்தவை அல்ல என்பதும் உண்மைதான். வட இந்திய - பார்ப்பன - இந்தி - இந்து அடையாளத்தை ஆளும் வர்க்கங்களும் ஆதிக்க சக்திகளும் உருவாக்கிக் கொண்டு ள்ளன. இந்தி பேசும் பகுதிகளிலுள்ள பரந்து பட்ட மக்களிடையே கூட வட்டார மொழித் தேசிய உணர்வு வளர்வதற்குப் பதிலாக அனைத்திந்திய இந்து - இந்திய தேசிய உணர்வே வளர்ந்திருப்பதை காணலாம்.''

(பக்கம் 232)

இந்து - இந்தி - இந்தியா எனும் கருத்த மைவு மேலாட்சித் திட்டம் கணிசமான வெற் றியைப் பெற்றுள்ளதை இது காட்டுகிறது. சுதந்திர இந்திய ஒன்றியத்தின் மையப்படு த்தலுக்கு இந்தக் கருத்தமைவு மேலாட்சி இன்றியமையாத பங்கினை வகித்து வரு கிறது. அரசின் அதிகார மையப்படுத்தலும் நாட்டின் ஒருங்கிணைப்பும் இந்திய பெரு முதலாளி வர்க்கத்தின் நலன்களுக்குச் சாதக மாக இருக்கின்றன. இந்தியைத் தாய்மொழி யாகக் கொள்ளாத பெருமுதலாளிகளும் இந்தி ஆட்சி மொழியாவதைத் தம் வர்க்க நலன் கருதி ஆதரித்தனர். இந்திய அமை ப்பின் மையப்படுத்தலுக்கும் உள்நாட்டு சந்தையின் ஒருங்கிணைப்பிற்கும் அது உத வும் என்பதைக் கருத்தில் கொண்டே காந்தி யின் சாதியான பனியா சாதியைச் சார்ந்த குஜராத்திப் பெருமுதலாளிகள் இந்தி ஆட்சி மொழியாவதை ஆதரித்தனர். (இது ஒரு உதாரணம்) ஆகவே ''இந்து சமய வண்ணம் பூசப்பட்ட இந்திய த் தேசியமும் இந்தி மொழியும்'' இந்தியப் பெருமுதலாளி வர்க் கத்தின் அனைத்திந்திய சந்தை ஒருங்கிணை ப்பின் கருவியானதில் ஆச்சரியப்பட ஒன்று மில்லை. அதேநேரம் இந்த இந்து முதலாளி கள் பாகிஸ்தான் பிரிவினை தவிர்க்க முடியா தது என வாதிட்டதிலும் ஆச்சரியமில்லை. அந்தப் பிரிவினை அவர்களின் இந்து - இந்திய - ஒருங்கிணைப்புத் திட்டத்தின் விளைவாக இருந்த போதும் அது அத் திட்ட த்தின் பலப்பாட்டிற்கு உதவியது என அவர் கள் கணித்தனர். இத்தகைய கருத்துக்களைக் கொண்ட இந்து பெருமுதலாளிகளின் பிரதி நிதியே பிர்லா.

III

வட இந்திய பெருமுதலாளிகளுக்கும் காங் கிரசுக்குமிடையே நெருக்கமான உறவை ஏற்படுத்துவதில் முக்கிய பங்காற்றினார் காந்தி. அதே நேரம் இந்திய தேசியப் போராட்டத்தை வெகுஜனமயமாக்குவதி லும் அவர் வெற்றி கண்டார். சுதந்திரப் போராட்ட காலத்தில் இந்தியப் பெருமுத லாளிகள் - நிலவுடைமையாளர்கள் ஆகிய இரு வர்க்கங்களின் நலன்களைக் காக்கவும் பலப்படுத்தவும் உதவிய காந்தி தேசிய வாதம் அதே நேரம் நடுத்தர கீழ்மட்ட வர்க்கங்களையும் சாதிகளையும் அணி திர ட்ட உதவியது. சுதந்திரத்திற்கு முன் முரண் பட்ட நலன்களைக் கொண்ட வர்க்கங்களை, சாதிகளை பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக ஒன்றிணைக்கும் கருத்தமைவின் பிரதான பிரதிநிதியாக, கவர்ச்சியும் மதிப்பும் கொண்ட அடையாளமாக விளங்கிய காந்தியை சுதந் திரம் உறுதியாக்கப்பட்ட நிலை வந்தபோது இந்திய பெரு முதலாளிகள் புறக்கணிக்கத் தொடங்கிவிட்டனர். சுதந்திர இந்தியாவில் காந்தியின் செல்வாக்கு தொடர்வது தமது வர்க்க நலன்களுக்குக் குந்தகம் விளைவி க்கும் என்பதை அவர்கள் காணத்தவற வில்லை. உதாரணமாக காந்தியின் அரசி யல் கருத்துகள் அரச அதிகாரத்தின் மையப் படுத்தலுக்குச் சாதகமானவையல்ல. அவரது பொருளாதாரக் கருத்துக்கள் முத லாளித்துவ நவீனமயமாக்கலுடன் முரண் பட்டன. அவரது இந்து - முஸ்லிம் ஒற்றுமை நிலைப்பாடு, பிரிவினைக்கு எதிரான போக்கு இந்துப் பெருமுதலாளிகளின் நலன் களுக்கும், இந்து அடிப்படைவாதிகளுக்கும் ஏற்றதாக இருக்கவில்லை. காந்தியின் கைத் தறி இராட்டினம் இந்திய பெருந்தொழில் உற்பத்தி முதலாளிகளின் நலன்களின் அவர் களின் எதிர்காலக்கனவுகளில் நிராகரணத் தின் அடையாளம் போன்றிருந்தது. ஆகவே 1946க்குப்பின் காந்தியை ஓரப்படுத்துவதில் பெருமுதலாளிகள் ஈடுபட்டது ஆச்சரியம் தரும் ஒன்றல்ல.

இந்து - இந்தி - இந்தியா எனும் வரலாற்றுத் திட்டத்தில் காந்தியின் ஆதீகவாதம் என்ன பங்கை வகித்தது என்பது ஆழ ஆராயப்பட வேண்டிய ஒன்றெனக் கருதுகிறேன். இடது சாரிகள் விரும்பத்தகாததாயினும் வியத்தகு முரண்பாடுகள் மிகுந்த பரிணாமப் போக்கு களைக் கொண்ட பார்ப்பனியமெனும் கருத் தமைவின் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தின் ஆதீகப் பேச்சாளராக காந்தியைக் கரு தலாமா? பிராமணர் மட்டுமன்றி மற்றைய உயர்சாதியினரதும் இசைவுடன் இயங்கி வந்த பார்ப்பனியத்தை (வெளியே இருந்து வந்த) காலனித்துவ ஆட்சிக்கெதிரான வெகுஜனப் போராட்டத்திற்கு உதவும் வகையில் வளப்படுத்தியதில், நெறிப்படு த்தியதில் காந்தியின் பங்கு என்ன? இந்தக் கேள்விகள் மேலும் ஆய்வுக்குரியவை. காந்தியின் ஆதீக வாதத்துடன் இணைந்த அரசியல் பொருளாதாரக் கருத்துக்களை காங்கிரஸ் தலைமை நடைமுறையில் நிராக ரித்தது. அதேநேரம் காந்தி சுதந்திர இந்தியா வின் இந்திய தேசத்தின் தந்தையாக புனித மயப்படுத்தப்பட்டுள்ளார். இந்திய பெரு முதலாளிகளாலும் காங்கிரஸ் தலைமை யாலும் பயன்படுத்தப்பட்டபின் ஒதுக்கப் பட்ட காந்தி இந்துமத அடிப்படைவாதி ஒருவனால் கொலை செய்யப்பட்டபின் ஒரு புனித கோபுரத்தில், வைக்கப்பட்டுள்ளார். இந்திய மக்களை இந்தியர்களாக ஒன்றிணை க்க இன்றும் காந்தி பயன்படுகிறார். இன்று அரசோச்சும் இந்து - இந்தி - இந்தியாவில் காந்தீயம் தென்படவில்லை. ஆனால் அதே இந்தியாவின் அரசியல் ஒருங்கிணைப்பிற்கு காந்தி எனும் இந்து ஆதீகவாதியும் இந்திய தேசிய போராளியும் அவசியம். அப்படி யாயின் இன்றைய ''இந்து - இந்தி - இந்தியா'' கருத்துச் சமரில் காந்தியத்தின் பங்கு என்ன? அம்பேத்கார் ஒரு தடவை காந்தி பற்றிக் கூறியதை இங்கு மனங் கொள்ளல் தகும்.

''ஒரு மகாத்மாவாக அவர் அரசியலை ஆதீகமயப்படுத்த முயற்சிக்கலாம். இதில் அவர் வெற்றி கண்டுள்ளாரோ என்னவோ, நிச்சயமாக அரசியல் அவரை வர்த்தக மயப் படுத்தி விட்டது. (Commercialised)....... சாதியையும் வர்ணத்தையும் எப்போதுமே மகாத்மா ஆதரிப்பதற்கான காரணம் என்ன வெனில், அவற்றை எதிர்த்தால் அரசியலில் தனக்கிருக்கும் இடத்தை இழந்து விடலாம் என அவர் பயப்படுவதே'' (Ambedkar writings and speeaches Vol I, 1979)

காந்தியின் வைதீகப்போக்கையும் ஆதீக வாதக் காரணங்களையும் குதர்க்கத்தையும் பயன்படுத்தி அவர் சாதி அமைப்பை வர்ண த்துக்கூடாக மறைமுகமாகவும் நேரடியா கவும் நியாயப்படுத்தியதையும் சமகாலத்தி லேயே ஆழ விமர்சித்தவர் அம்பேத்கார். இஇஇ வில் காந்தி பற்றிய விமர்சனத்திற்கு அம்பேத்காரின் சிந்தனைகளைப் பயன் படுத்தி உள்ளார் நூலாசிரியர்.

இந்து - இந்தி - இந்தியாவின் விமர்சனத்து க்கூடாக முன்வைக்கும் மாற்று வழி விவா தங்களுக்கு உதவலாம்.

''எனவே அதிகாரப் பரவலும், சோசலி சமும் மக்களின் பல்வேறு தேசிய, மொழி சமய பண்பாட்டு பிரதேச அடையாளங்களு க்கான பாதுகாப்பும் தன்னுரிமையும் சேர்ந்து நிலவுகிற ஒரு புது வகையான இந்திய சமு கத்தையும் கற்பிதம் செய்து பார்ப்பது இன்றி யமையாததாகிறது. இத்தகையதொரு இந் திய சமுதாயமே ஏகாதிபத்தியத்தையும் உலக பிற்போக்கு சக்திகளையும் எதிர்த்து நிற்கவல்லது: இன்றைய 'ஒன்றுபட்ட' 'ஒருமைப்பாடு' உடைய இந்து - இந்தி - இந் தியா அத்தகையதன்று. இது ஏகாதிபத்திய த்தையும் பார்ப்பன - பனியா நலன்களையும் பாதுகாக்கவென எழுப்பப்பட்ட ஒரு கோட்டை'' (பக்கம் 239)

ஒரு மாற்று இந்தியாவைக் கற்பிதம் செய்தல் சுலபமானதல்ல. இந்தப் புதிய இந்தியாவை ஒன்றிணைக்கவல்ல அம்சங்கள் எவை? இந்து - இந்தி - இந்தியா'வை விமர்சித்து அதன் உள்ளியக்கப்பாடுகளை விளக்கு வதில் குறிப்பிடத்தகுந்த வெற்றியைப் பெற் றுள்ள நூலாசிரியர் ''மாற்று இந்தியா' வின் சாத்தியப்பாடுகள் பற்றிக் குறிப்பிட வில்லை. ஒருங்கிணைப்பு சக்திகளும் பிரிவினைச்சக்திகளும் பல மட்டங்களில் இயங்கிக் கொண்டிருக்கும் இந்து - இந்தி - இந்தியாவில் ஒரு புதிய ஒன்றிணைந்த இந்தியா பற்றிய கற்பிதத்திற்கு உதவக்கூடிய அம்சங்கள் எவை? எஸ்.வி.ஆரின் கட்டுரை இந்தக் கேள்வியை எழுப்புகிறது. ஒரு பல் தேசிய இனமக்கள் ஜனநாயக இந்தி யாவைக் கற்பிதம் செய்தல். அத்தகைய இந்தியாவில் சோஷலிசத்திற்கான பரிமாண ப்போக்குகளின் சாத்தியப்பாடுகள் எத்தகை யவை? போன்ற விவாதங்கள் தோன்றி வளருதல் இந்திய மக்களுக்கு மாத்திரமன்றி உபகண்டத்தின் மற்றைய மக்களுக்கும் பயன்தர முடியும். இன்றைய இந்தியா மேலும் பிளவுபடலாம் அல்லது அது தவிர் க்கப்படலாம். இன்றைய உலகின் பெருந் தொகையான நாடுகள் பல்லின நாடுகளே. ஒற்றை இனத்தேச அரசு என்பது ஒரு சர்வலோக விதி அல்ல, என்ற உண்மையை மறுக்கமுடியாது. தென் ஆசியாவின் பல் தேசிய இன அமைப்புகளின் சாத்தியப் பாடுகள் பற்றிய விவாதங்களே முதன்மை பெறவேண்டும்.

சமுத்திரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அரசியல் யாப்பு சீர்திருத்தங்களும் மலையக மக்களும் — 7

# தேர்தல் தொகுதி நிர்ணயகுழு மலையக மக்களின் பிரதிநிதித்துவத்தை திட்டமிட்டுக் குறைத்தது!

**பீ.ஏ.காதர்**

1947 பொதுத்தேர்தலின் போது இலங்கை சனத்தொகையில் 15.42%மாக இருந்த மலையகத் தமிழருக்கு மொத்தம் 101 ஆசனங்களில் (95 பேர் தொகுதிவாரியாக தெரிவு செய்யப்பட்டனர், 6 பேர் நியமன உறுப்பினர்கள்) 16 ஆசனங்கள் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் மொத்தம் 8 ஆசனங்களே கிடைத்தன. ஆயினும் கண்டி, மாத்தளை, கலஹா, வத்தேகம, கம்பளை, வெலிமட, இரத்தினபுரி, பலாங்கொட, கிரியெல்ல, தெஹியோவிட்ட, நிவித்திகல, ருவான்வெல, மத்துகம, களுத்துறை, மத்துரட்ட ஆகிய 15 ஆசனங்களில் இவர்களது வாக்குகள் நிர்ணயகரமானவையாக இருந்தன. உதாரணமாக பதுளை இரட்டை அங்கத்தவர் தொகுதியில் இலங்கை - இந்திய காங்கிரஸ் சார்பில் அதன் முன்னணி தலைவர்களில் ஒருவரான ஜனாப்ஈ.அசீஸ்போட்டியிடுவதாக இருந்தது. எனினும் எஸ்.எம். சுப்பையாவுக்காக அவ் ஆசனத்தை அவர் பெருந்தன்மையோடு விட்டுக் கொடுத்ததனால் அத்தேர்தலில் அவர் போட்டியிடவில்லை. அத்தொகுதியில் இலங்கை - இந்திய காங்கிரசின் சார்பில் போட்டியிட்ட எஸ்.எம்.சுப்பையாவுக்கு போட்டியே இருக்கவில்லை. கடைசி நேரத்தில் இடதுசாரியான ஜே.சி.ரி.கொத்தலாவ தோற்றுவிடுவாரோ என்ற அச்சம் கூட ஏற்பட்டுவிட்டது. எனவே '' சுப்பையா வெற்றி பெறுவது நிச்சயம், ஜே.சி.ரி.கொத்தலாவலயின் வெற்றியை உறுதிப்படுத்துங்கள்'' எனப்பிரச்சாரம் செய்யப்பட்டது. அந்தளவுக்கு மலையகப் பகுதிகளில் எல்லாம் அவர்களது வாக்குப்பலம் செல்வாக்கு செலுத்தியது. இருப்பினும் கூட இவர்களது பாராளுமன்ற பிரதிநிதித்துவம் முழுமையாக அமையவில்லை. அதற்கு அப்புத்தளை தொகுதி ஒற்றுமையின்மையால் பறிபோனமையும், இடதுசாரிகளை ஆதரித்ததும் ஒரு காரணமாக இருந்தாலும் அதைவிட பிரதான காரணம் ஒன்றிருந்தது. அதுதான் திட்டமிட்ட முறையில் தேர்தல் தொகுதி நிர்ணய குழு இவர்களது வாக்குப்பலத்தை சிதைக்கும் வகையில் தேர்தல் தொகுதிகளை வகுத்திருந்தது.

1946ல் முதற்தடவையாக அமைக்கப்பட்ட எல்.என்.டி. த சில்வா தேர்தல் தொகுதி நிர்ணய குழு Delimitation Commission) 1000 சதுர மைலுக்கு ஒரு தேர்தல் தொகுதி என்ற அடிப்படையில் 25 தொகுதிகளையும் 75,000 பேருக்கு ஒரு தொகுதி (1976 இல் 90,000 பேருக்கு ஒரு தொகுதி என மாற்றப்பட்டது) என்ற அடிப்படையில் 64 ஆசனங்கள் என்றும் நியமன உறுப்பினர் 6 பேர் எனவும் பாராளுமன்ற ஆசனங்களை வரையறுத்தது. இதன்படி மத்திய கொழும்பு மூன்று அங்கத்தவர் தொகுதி, கடுகண்ணாவ, அம்பலாங்கொட + பலப்பிட்டிய, பதுளை, பலாங்கொட இரட்டை அங்கத்தவர் தொகுதி உட்பட 95 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். 6 நியமன உறுப்பினர்கள், பாராளுமன்றத்தில் போதியளவு பிரதிநிதித்துவப்படுத்தப்படாத அல்லது முழுமையாக பிரதிநிதித்துவப்படுத்தப்படாத நலன்களை கவனிப்பதற்காக கவர்னரால் நியமிக்கப்பட்டனர்.

இத்தேர்தல் தொகுதி நிர்ணய குழு ஒன்றில் மலையக மக்களின் சனத்தொகைப் பரம்பலுக்கும் எண்ணிக்கைக்கும் ஏற்ப தேர்தல் தொகுதிகளை வரையறுக்கவில்லை அல்லது திட்டமிட்டே இவர்களது பிரதிநிதித்துவத்தை கட்டுப்படுத்தும் வகையில் மலையக தேர்தல் தொகுதிகளை - கிராமங்கள் உள்வாங்கப்பட்டு - செயற்கையான முறையில் அமைத்தது. கடந்த காலங்களில் இவர்களது வாக்குப்பலத்தை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் முயற்சிகளையும் கருத்திற் கொண்டால் இதனை ஒரு திட்டமிட்ட நடவடிக்கை என்றே கொள்ள முடியும். 1946 சில்வா தேர்தல் நிர்ணய குழுவின் சிபாரிசுப்படி மாவட்ட ரீதியில் வகுக்கப்பட்ட மலையக தேர்தல் தொகுதிகளை ஆராய்ந்தால் இவ் ஐயம் மேலும் வலுப்பெறுகிறது.

விடயத்திற்கு வருமுன் ஒரு குறிப்பு: நுவரெலியா மாவட்டத்தின் மொத்தம் நான்கு ஆசனங்களில் மூன்று ( நுவரெலியா, தலவாக்கெலை, கொட்டகல) (75%) தமிழ் ஆசனங்களாக இருந்தன. பதுளை மாவட்டத்தின் 6 தேர்தல் தொகுதிகளில் 4 (அளுத்நுவர, பதுளை, பண்டாரவளை, அப்புத்தளை) (67%) மலையக தமிழ் ஆசனங்களாகவே இருந்தன.

இனி விடயத்திற்கு வருவோம்: கண்டி மாவட்டத்தில் இரு ஆசனங்களில் இருந்து மாத்திரமே (மஸ்கெலியா, நாவலப்பிட்டி) தமிழ் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். கலஹாவுடன் தெல்தெனியவையும், பன்விலையையும் இணைத்திருந்தால் அல்லது பன்விலை, தெல்தெனிய குண்டசாலை பகுதியிலுள்ள தமிழ் பிரதேசங்கள் இணைக்கப்பட்டிருந்தால் அங்கு ஒன்று அல்லது இரண்டு தமிழ் தொகுதிகள் உருவாகியிருக்கும். மாத்தளை மாவட்டத்தில் ரத்தோட்டை பகுதியை மையமாகக் கொண்டு ஒரு தமிழ் தேர்தல் தொகுதியை உருவாக்கி இருக்க முடியும். ஆனால் இங்கு ஒரு தமிழராவது தெரிவாக முடியாதவாறு தேர்தல் தொகுதிகள் வரையறுக்கப்பட்டன. அதே விதத்தில் களுத்துறை மாவட்டத்திலும் ஹொரன, மத்துகம போன்ற பகுதிகளை இணைத்து ஒரு தமிழ் தொகுதியை உருவாக்கியிருக்க முடியும். புஸ்ஸல்லாவ, கம்பளை, பூண்டுலோயா பகுதிகளை இணைத்து மற்றுமொரு தமிழ் தொகுதியை உருவாக்கி இருக்கலாம்.

1959ல் தல்கொடபிட்டிய தேர்தல் தொகுதி நிர்ணய குழு களுத்துறை மாவட்டத்தில் முஸ்லீம்களால் நிர்ணயிக்கக் கூடிய பேருவளை தொகுதியை உருவாக்கியது. அதுவரை கண்டி மாவட்டத்தில் இருந்த மஸ்கெலிய தொகுதியை 1976 நோயல் டிட்டவல (Noel Tittawala) தேர்தல் தொகுதி நிர்ணய குழு நுவரெலிய மாவட்டத்திற்கு மாற்றியதுடன் ஹங்குரன்கெத்த பகுதியில் கண்டி மாவட்டத்தின் கீழ் இருந்த பல கிராமங்களையும் நுவரெலிய தேர்தல் மாவட்டத்திற்குள் கொண்டு வந்தது. அடுத்தடுத்த நிர்வாக மாவட்டங்களில் உள்ள பகுதிகளை ஒன்றிணைத்து தேர்தல் தொகுதிகளை அமைப்பதற்கு தேர்தல் சட்டங்கள் சாதகமாகவே இருக்கின்றன. மற்றுமொரு உதாரணம்: 1981 ஜி.பி.எச்.சில்வா தேர்தல் தொகுதி நிர்ணய குழு மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மூன்று நிர்வாக மாவட்டங்களை ஒன்றாக இணைத்து வன்னி என்ற தேர்தல் மாவட்டத்தை உருவாக்கியது. ஒன்று மாத்திரம் தெளிவு, இந்த தேர்தல் தொகுதி நிர்ணய குழுக்கள் மலையக மக்களுக்கு சாதகமான முறையில் இச்சாதகமான சட்டங்களைப் பயன்படுத்தவில்லை. அதனாற்தான், மலையக மக்கள் இலங்கையின் இரண்டாவது பெரும்பான்மை சமூகமாக, சனத்தொகையில் 15%வீதமாக, அநேகமாக அனைவரும் வாக்குரிமை பெற்றவர்களாக, இருந்த 1947ல் கூட மத்திய மலைநாட்டைத் தவிர இரத்தினபுரி, கேகாலை, மாத்தளை, களுத்துறை போன்ற மாவட்டங்களில் இருந்து மலையக தமிழ் பிரதிநிதி ஒருவர் கூட தெரிவாகவில்லை. இந்த திட்டமிட்ட பாரபட்சத்திற்கு மாத்தளை சிறந்த உதாரணமாகும்.

### 1946 - சில்வா தேர்தல் நிர்ணய குழு மலையக தேர்தல் தொகுதிகள்

| மாகாணம் | மாவட்டம் | தேர்தல் தொகுதி |
|---|---|---|
| மத்திய மாகாணம் | நுவரெலியா | 1. மத்துரட்ட |
| | | 2. நுவரெலியா |
| | | 3. தலவாக்கெலை |
| | | 4. கொட்டகல |
| மத்திய மாகாணம் | கண்டி | 1. மனிப்பே |
| | | 2. வத்தேகம |
| | | 3. கடுகண்ணாவ (2 அங்கத்தவர்) |
| | | 4. கண்டி |
| | | 5. கலஹா |
| | | 6. கம்பளை |
| | | 7. நாவலப்பிட்டிய |
| | | 8. மஸ்கெலியா |
| மத்தியமாகாணம் | மாத்தளை | 1. தம்புள்ள |
| | | 2. மாத்தளை |
| ஊவா மாகாணம் | பதுளை | 1. அளுத்நுவர |
| | | 2. பதுளை (2 அங்கத்தவர்) |
| | | 3. பண்டாரவளை |
| | | 4. வெலிமடை |
| | | 5. ஹப்புதளை |
| | | 6. புத்தளை |
| சபரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | 1. கிரியெல்ல |
| | | 2. இரத்தினபுரி |
| | | 3. நிவித்திகல |
| | | 4. பலாங்கொட |
| சபரகமுவ | கேகாலை | 1. மாவனெல்ல |
| | | 2. கேகாலை |
| | | 3. டெடிகம |
| | | 4. ருவன்வெல |
| | | 5. தெகியோவிட்ட |
| மேல் மாகாணம் | களுத்துறை | 1. ஹொரன |
| | | 2. பாணந்துறை |
| | | 3. களுத்துறை |
| | | 4. மத்துகம |
| | | 5. அகலவத்தை |

வரும்

## யாரொடு நோக.....

நீங்கள்
நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுவீர்கள்
என்ற அறிவிப்பை விடவும்
மழித்த தலையுடன்
லெதர் ஜக்கற் அணிந்த
ஒருவன்
என் கண்ணில் எத்துப்படுவதை விடவும்
ஒரு அதிகாலை ரெலிபோன் மணி
என்னை அதிகமாய்ப் 'பயமுறுத்துகிறது'

இயந்திரத்தின் பின்னிணைப்பிலிருந்து
நான் கழற்றிவிடப்பட்டு
சில மணித்தியாலங்கள்தான் போயிருக்கும்.
எனது உறக்கத்தின் ஒவ்வொரு நிமிடங்களுக்கும்
பெறுமதி அதிகம்.
அறையின் இறுகுச் சூட்டில்
எனது உறக்கம்
ஆழமாய் அறையப்பட்டிருக்கும்.

நித்திரைப் பாயில் வைத்தே அமத்தும்
இந்த "கொழும்பு ரெலிபோன்" க்கு
விபஸ்தையே கிடையாது.
தனது காலில் தட்டுப்படும் எல்லாவற்றையும்
உதைத்து நொருக்கி
இருளில்
என்னை வந்து உலுக்கி எழுப்புகிறது.

மொட்டவிழும்போலிருக்கும்
என் சின்னச் சின்ன ஆசைகளைக்கூட
நுனிவிரலால் கிள்ளி எறிந்தபடி
கைவீசி வருகிறது,
ஒரு குழந்தைபோல்.
என்னால் கோபிக்கக்கூட முடிவதில்லை.
கடைவாயால் ஒழுகும் சிரிப்பும்
தேவைகளும்
எனது உழைப்பை அதிகம் கேட்டு
சுற்றிநின்று தொந்தரவு செய்யும்.

இனியும் அதை நான் சந்திப்பதில்லை
என்றிருந்தாலும்
அது என்னை விடுவதாக இல்லை.
எப்போதுமே
"சென்ரிமென்ராக" பேசப் பழகியிருக்கிறது.
இடையிடையே
தொண்டைக் குழியில் சிக்கிய போர்முள்
விக்கத் தொடங்கும்போதெல்லாம்
அதன் அவஸ்தையை
என்னால் தாங்கமுடிவதில்லை.
சிலவேளைகளில்
ஆறஅமர என்முன்னால் அமர்ந்திருந்து
நெஞ்சுமயிர் வருடியபடி
இழுத்தடித்துப் பேசிக்கொண்டிருக்கும்.
எனது அவசரத்தைக்கூட
அதனால் புரிந்துகொள்ள முடிவதில்லை.
கோவிலுக்கு ஒரு தேர் செய்துவிடுவதுபற்றியோ
மணிமண்டபம் கட்டிவிடுவதுபற்றியோ
பேசிக்கொண்டிருக்கும்.

சிலவேளைகளில் அது
நிதானமாய் வருவதுபோல
குரல் கொடுத்தபடி வரும்.
எனக்கும் எனது அத்தான்மாருக்கும் இடையில்
கால்மீது கால்போட்டு
அனுபவஸ்தன்போல் அமர்ந்துகொள்ளும்.
அத்தான்மாரின் புதியவிலை கேட்டோ
அல்லது பாக்கிவிலை கேட்டோ
பேச்சைத் தொடங்கும்.
போதாததிற்கு தன்னுடன் யதார்த்தத்தை
அழைத்துவருகிறது,
தலையாட்டுவதற்காக.
எனது நியாயங்களை
இருவருமாய்த் தின்றுதீர்ப்பது
அத்தான்மாருக்கு மகிழ்ச்சியளிக்கிறது –
எனது சகோதரிகளுக்குங்கூடத்தான்!

காலைப்பொழுது என்னை எடுத்துப்
பிணைத்துக்கொள்வதில் அவசரப்படுத்தும்
நானோ இவர்களுக்கு வழிசொல்லியாகவேண்டும்.
இந்த இழுபறியில்
எனது இடைவெளி நேரங்களும் விழுந்து நொருங்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# இலங்கை பாராளுமன்ற அரசியலில் பெண்கள்–7




சுதந்திர இலங்கையின் இரண்டாவது பொதுத்தேர்தல் 1952 ஆம் ஆண்டு நடந்தது. சில பின்னணிச் சம்பவங்கள் இத்தேர்தலுக்கான காரணமாக அமைந்தது. குறிப்பாக இருபது வருடங்களுக்கும் மேலாக இலங்கை அரசியலில் முக்கியஸ்தராக இருந்தவரும், இலங்கையின் முதற் பிரதமமந்திரியுமான டி.எஸ்.சேனநாயக்க 1952 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22ம் திகதி காலி முகத்திடலில் குதிரைச் சவாரி செய்து கொண்டிருந்த போது கீழே விழுந்து இறந்துபோனார். அப்போது கைத்தொழில் அமைச்சராக இருந்த அவரது மகன் டட்லி சேனநாயக்க மார்ச் 26 அன்று பிரதமராக நியமிக்கப்பட்டார். அவர் நியமிக்கப்பட்டு ஒரு மாதத்திற்குள் அதாவது ஏப்ரல் 8ம் திகதி முதலாவது பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. அடுத்த தேர்தலும் நிர்ணயிக்கப்பட்டது. ஏப்ரல் 28ம் திகதி வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட போது 12 பெண்கள் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

இரண்டாவது பாராளுமன்ற தேர்தல் மே மாதம் 24, 25, 26 மற்றும் 30ம் திகதி ஆகிய நான்கு நாட்கள் நடத்தப்பட்டது. இத்தேர்தலின் போது எஸ்.டிபிள்யூ.ஆர்.டி.பண்டாரயநாயக்கவின் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் போட்டியிட்டிருந்தது. "**ஐக்கிய தேசியக் கட்சி சிங்கள் மகாசபையுடன் ஏற்கெனவே உடன்பட்டிருந்த விடயங்களை கருத்திற் கொள்ள தவறிவிட்டது**" என்ற குற்றச்சாட்டை முன்வைத்து 1951 யூலை 12ம் திகதி பண்டாரநாயக்கா ஐ.தே.கவை விட்டு விலகினார் என்ற போதும் விலகலுக்கான உண்மையான காரணமாக அரசியல் விமர்சகர்கள் மேற்படி காரணத்தை ஒரு காரணமாகக் கொள்ளவில்லை. மாறாக அதை ஒரு சாட்டாகவே கருதுகின்றனர். ஐ.தே.கவின் தலைமைப்பதவி டி.எஸ்.சேனநாயக்கவுக்குப் பின்னர் தனக்கே கிடைக்கும் என பண்டாரநாயக்க எதிர்பார்த்திருந்தார் என்றும், ஆனால் டி.எஸ்.சேனநாயக்கவின் மகன் டட்லிக்கு அப்பதவி கிடைக்கும் சாத்தியம் உருவானதன் பின்னர்தான் ஐ.தே.கவை விட்டு விலகினார் என்றுமே கருதப்படுகின்றது. இத்தேர்தலில் 12 பெண்கள் போட்டியிட்டிருந்த போதும் (முதலாவது பொதுத் தேர்தலில் மூவர் மட்டுமே போட்டியிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது) இருவர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டனர்.

இத்தேர்தலின் போது சில சிறப்பம்சங்களைச் சுட்டிக்காட்டலாம். •

அவிஸ்ஸாவெல்ல தொகுதி தேர்தலில் இரு பெண்களுக்கு இடையிலேயே போட்டி நிலவியது. அவர்களில் ஒருவர் விப்லவகாரி சமசமாஜக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட **குசும்சிறி குணவர்த்தன.** மற்றையவர் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட **திருமதி கிளோடா ஜயசூரிய.** இறுதியில் 929 மேலதிக வாக்குகளால் குசும்சிறி குணவர்த்தன வென்றார். இவர் 1948இல் நடத்தப்பட்ட இடைத்தேர்தலில் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டு முதலாவது பாராளுமன்றத்தில் அங்கம் வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. திருமதி கிளோடா ஜயசூரிய முன்னாள் அவிஸ்ஸாவெல தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த பேர்னாட் ஜயசூரியவின் மனைவி ஆவார்.

**முதற் தடவையாக ஆசிய நாடொன்றில் பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்ட விதேச பெண்ணாக வரலாற்றில் பதியப்பட்டார் டொரின்.**

களனி தொகுதியில் போட்டியிட்ட நால்வரில் இருவர் பெண்கள். இத்தொகுதியில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கும் திருமதி விமலா விஜயவர்த்தனாவுக்குமே பலத்த போட்டி நிலவியது. **விமலா விஜயவர்தனா** ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் மாமியார். இத்தொகுதியில் **விவியன் குணவர்த்தன** லங்கா சமசமாஜக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட போதும் குறைந்த வாக்குகளையே பெற்றார். இறுதியில் ஜே.ஆர். வெற்றி பெற்றார்.

தெஹியோவிட்ட தொகுதியில் போட்டியிட்ட தொழிற்கட்சி வேட்பாளர் **திருமதி எ.பி. ஜயதிலக்க** லங்கா சமசமாஜக்கட்சியின் வேட்பாளரான தனது சகோதரன் எட்மன்ட் சமரக்கொடியுடன் போட்டியிட்டார். தொழிற்கட்சியைச் சேர்ந்த ஆர்.ஈ.ஜயதிலக்கவை மணந்த எபி ஜயதிலக்க இத்தேர்தலில் தனது சகோதரனோடு போட்டியிட்டு தோல்வியுற்றார். எட்மன்ட் சமரக்கொடி வென்றார்.

ஹொரணை தொகுதியில் குடியரசுக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட **திருமதி எஸ்மி பெரேரா** மத்துகம பாராளுமன்ற உறுப்பினர் வில்மட் ஏ. பெரேராவின் மனைவி. இவரும் தோல்வியடைந்தார்.

தம்பதெனியா தொகுதியில் போட்டியிட்ட **திருமதி டோனா கெரோலின் ரூபசிங்க குணவர்தன;** லங்கா சமசமாஜக்கட்சியின் தலைவர்களில் ஒருவரான பிலிப் குணவர்தனாவின் சகோதரி.

கண்டி தொகுதியில் போட்டியிட்ட **தமராகுமாரி இலங்கரத்ன** 7644 வாக்குகள் பெற்ற போதும் 3705 வாக்குகளால் தோல்வியடைந்தார்.

கலஹா தொகுதியில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிட்ட **சீதாகுமாரி வல்கம்பாய** 596 வாக்குகளை மட்டும் பெற்று தோல்வியடைந்தார்.

மாவனல்ல தொகுதியில் போட்டியிட்ட சுயேட்சை வேட்பாளர் **என்.எச் சீலவத்தி** 739 வாக்குகளை மட்டுமே பெற்று தோல்வியடைந்தார்.

முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகித்த திருமதி புளோரன்ஸ் சேனநாயக்க கிரியெல்ல தொகுதியில் தோல்வியடைந்தார்.

இத்தேர்தலில் போட்டியிட்ட பெண் வேட்பாளர்களை கட்சி ரீதியாக கீழ்வருமாறு வகைப்படுத்தலாம்.

***ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி - 2, லங்கா சமசமாஜக்கட்சி - 2, இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி - 1, விப்லவகாரி சமசமாஜக்கட்சி -2, குடியரசுக்கட்சி - 1, தொழிற்கட்சி -1, ஐக்கிய தேசியக் கட்சி - 1, சுயேட்சை வேட்பாளர்கள் - 2.***

எவ்வாறாயினும் இத்தேர்தலில் இரு பெண்கள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவரான குசும்சிறி குணவர்தன (பிலிப் குணவர்தனவின் மனைவி) முன்னைய பாராளுமன்றத்திலும் அங்கத்துவம் வகித்தவர்.

## என்.சரவணன்

தெரிவு செய்யப்பட்ட அடுத்த பெண் பிரதிநிதி டொரின் விக்கிரமசிங்க. அகுரஸ்ஸ தொகுதியில் போட்டியிட்ட இவர் அவருடன் போட்டியிட்ட சீ.விஜேசிங்கவை விட 1001 கூடுதல் வாக்குகளைப் பெற்று வென்றார்.

இந்த தேர்தலில் பெண்கள் பலர் போட்டியிடுவதற்கு காரணமாக அமைந்த காரணியாக அவர்களது குடும்ப அரசியல் பின்னணியானது கூடிய தாக்கத்தை செலுத்தியிருந்ததைக் காணலாம். (அது பற்றி இறுதி அத்தியாயத்தில் விரிவாக ஆராயப்படும்.)

**வரும்**

### 1952ஆம் ஆண்டு தேர்தலில் பெண்கள்

| | | |
|---|---|---|
| **அகுரெஸ்ஸ** | | |
| 1. திருமதி டொரின் விக்கிரமசிங்க | (LSSP) - | 16626 |
| 2. சரத் விஜேசிங்க | (UNP) - | 15625 |
| **அவிஸ்ஸாவெல்ல** | | |
| 1. திருமதி குசும்சிறி குணவர்தன | (VLSSP) - | 19414 |
| 2. திருமதி கிளோடா ஜயசூரிய | (UNP) - | 18485 |
| **களனி** | | |
| 1. திருமதி விவியன் குணவர்தன | (LSSP) - | 4857 |
| 2. திருமதி விமலா விஜயவர்தன | (SLFP) - | 15868 |
| 3. ஜே.ஆர்.ஜெயவர்தன | (UNP) - | 22103 |
| 4. டி.ஆர்.ஜெயவர்தன | (I) - | 673 |
| **ஹொரணை** | | |
| 1. திருமதி எஸ்மி பெரேரா | (R.P) - | 5145 |
| 2. எம்.டி.எச்.ஜெயவர்தன | (UNP) - | 27746 |
| 3. வில்பிரட் சேனநாயக்க | (SLFSP) - | 7367 |
| 4. ஆரியதாச ஜயவர்தன | (LSSP) - | 8248 |
| **கண்டி** | | |
| 1. திருமதி தமராகுமாரி இலங்கரத்ன | (SLFP) - | 7644 |
| 2. ஈ.எல்.சேனநாயக்க | (UNP) - | 11349 |
| 3. திலகரத்னம் சோமசுந்தரம் | (I) - | 277 |
| **கலஹா** | | |
| 1. சீதா குமாரி வல்கம்பாய | (I) - | 596 |
| 2. ஸ்டேன்லி எட்வட் சிறிமான்னே | (SLFP) - | 4725 |
| 3. பீ.தென்னகோன் | (I) - | 6356 |
| 4. டீ.பீ.பானாபொக்க | (UNP) - | 10962 |
| **தம்பதெனிய** | | |
| 1. டோனா கெரோலின் ரூபசிங்க | (LSSP) - | 2874 |
| 2. ஆர்.எம்.பீ.வை.சிறிவிமலரத்ன | (LSSP) - | 4440 |
| 3. ஆர்.ஜீ.சேனநாயக்க | (UNP) - | 20003 |
| **மாவனெல்லை** | | |
| 1. திருமதி.என்.எச்.சீலவத்தி | (I) - | 739 |
| 2. எச்.எல்.ரத்வத்த | (UNP) - | 10847 |
| 3. சீ.ஆர்.பெலிகம்மான | (MEP) - | 14225 |
| **தெஹியோவிட்ட** | | |
| 1. திருமதி எப்.பி.ஜயதிலக்க | (LP) - | 982 |
| 2. எட்மன்ட் சமரக்கொடி | (LSSP) - | 8848 |
| 3. சோமவீர குணசேகர | (UNP) - | 8766 |
| **கிரிஎல்ல** | | |
| 1. புளோரன்ஸ் சேனநாயக்க | (LSSP) - | 3192 |
| 2. ஜெயவீர குருப்பு | (SLFP) - | 7369 |
| 3. ஏ.ஈ.டி.கிரிஎல்ல | (UNP) - | 9978 |

LSSP - Lanka Sama Samaja Party
UNP - United National Party
SLFP - Sri Lanka Freedom Party
RP - Republican Party
VLSSP - Viplavakari Lanka Sama Samaja Party
SLFSP - Sri Lanka Freedom Socialist Party
I - Independent
LP - Labour party
MEP - Mahajana Eksath Peramuna

### டொரின் விக்கிரமசிங்க

1907 ஆம் ஆண்டு பெப்பரவரி 15ம் திகதி இங்கிலாந்தில் செஷயர் பகுதியில் பிறந்த டொரின் விக்கிரமசிங்க ஆசியாவிலேயே பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட முதலாவது, அந்நியநாட்டுப் பெண் என்பது முக்கியமான ஒன்று. இவர் இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக இருந்த டொக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்கவின் மனைவியாவார்.

டொரின் இங்கிலாந்தில் பல முற்போக்காளர்களை உருவாக்கிய கல்லூரி என சொல்லப்படும் ஹர்பட்ஷயரிலுள்ள செனட் கிறிஸ்டோபர் கல்லூரியில் கல்வி பயின்றார். அப்போது அக்கல்லூரியில் வீ.கே.கிருஸ்ணமேனன் (பிற்காலத்தில் இந்தியாவின் வெளியுறவு அமைச்சராக இருந்தவர்) லண்டனில் கல்வி கற்றுக்கொண்டே வரலாறு கற்பிக்கும் பகுதிநேர விரிவுரையாளராக இருந்தார். அவரது விரிவுரையினூடாக இந்திய சுதந்திரப் போராட்டம் பற்றிய சிந்தனைகளை மாணவர்கள் மத்தியில் பரவின. இவரிடம் கற்ற டொரின் கிருஷ்ணமேனனின் ஆலோசனையின்படி 1926இல் பல்கலைக்கழகத்தில் பொருளாதார அரசியல் துறைகளைக் கற்க தொடங்கினார்.


1952ம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்ற டொரின் விக்கிரமசிங்கவும், குசுமா குணவர்தனவும்

பல்கலைக்கழகத்தில் முக்கிய பிரமுகராக இருந்தவரும் மார்க்சீய கருத்துக்களைக் கொண்டிருந்த பேராசிரியர் ஹெரல்ட் லஸ்கியின் கருத்துக்களால் டொரின் ஈர்க்கப்பட்டார். டொரினோடு கல்வி கற்ற சமகாலத்தவர்களில் கலாநிதி என்.எம்.பெரேரா. ஜெகநாத் கொஸ்லா (பிற்காலத்தில் இந்திய தூதுவராக கடமையாற்றியவர்) ஆகியோரும் உள்ளடங்குவர். இந்திய சுதந்திரப் போராட்ட ஆதரவாளராகவும் இந்திய இலங்கையர்களால் முன்னெடுக்கப்பட்ட ஏகாதிபத்திய விரோத நடவடிக்கைகளுக்கு ஆதரவாளராகவும் டொரின் செயற்பட்டார்.

இந்த பழக்கங்களின் வாயிலாக எஸ்.ஏ.விக்கிரமசிங்கவுடன் தொடர்பு கொள்ள கிடைத்திருந்தது. டொரின் தனது படிப்பிற்குப்பின் இந்தியாவுக்குப்போய் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொள்ளும் நோக்குடன் இந்தியாவுக்கு சென்று தொழில் புரியும் முயற்சிகளை செய்து வந்தார். என்ற போதும் அம்முயற்சி தோல்வியடைந்தது. டொரினுக்கு இலங்கையில் வேலையொன்றை தேடித்தருவதாக எஸ்.ஏ.விக்கிரமசிங்க ஒப்புக்கொண்டதன் பின் டொரின் இலங்கை வரத் தீர்மானித்தார். 1930இல் இங்கிலாந்தில் இருந்து கப்பலில் புறப்பட்டார் டொரின். அந்தக் கப்பலில் பயணம் செய்த தோட்ட உரிமையாளர்களை காரசாரமாக கண்டித்து விமர்சித்த டொரின் பலரது கவனத்துக்குள் உள்ளானார். 1930 நவம்பர் மாதம் டொரின் கொழும்பை அடைந்தார். அவர் மாத்தறை சுஜாதா வித்தியாலயத்தில் பாடசாலை அதிபராக நியமிக்கப்பட்டார்.

அந்தப் பாடசாலையில் தனது அரசியல் வேலைகளையும் செய்யத்தொடங்கினார். அப்பாடசாலையில் கடமையாற்றிய ஏனைய ஆசிரியைகளும் தேசிய அரசியல், சுதந்திரப் போராட்டம் என்பனவற்றில் ஈடுபாடு கொள்வதற்கு டொரின் காரணமானார். இந்த ஆசிரியர்கள் பிற்காலங்களில் 'சூரியமல்' இயக்கத்திலும் தீவிரமாக ஈடுபாடு கொண்டனர். பாடசாலை மாணவர்களுக்கும் கூட தேசிய விடுதலை உணர்வுகள் ஊட்டப்பட்டது.

1933 ஏப்ரல் 26ம் திகதி டொரின் எஸ்.ஏ.விக்கிரமசிங்கவை மணந்தார்.

எஸ்.ஏ.விக்கிரமசிங்க 1931இல் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தார். அந்நிய அரசாங்கத்துக்கு எதிராகவும் தேசிய முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டம் செய்து குரல் கொடுத்து வந்த எஸ்.ஏ.விக்கிரமசிங்கவை மணந்ததன் பின்னர் கொழும்பில் மிகப்பெரிய பௌத்த மகளிர் பாடசாலையான விசாகா வித்தியாலத்தில் அதிபராக நியமிக்கப்பட்டார். இந்த பாடசாலையில் முற்போக்கான சீர்திருத்தங்களில் அக்கறையோடு ஈடுபட்டார். 1932இல் காந்தி சிறையிலிருந்த போது எஸ்.ஏ.விக்கிரமசிங்கவும் டொரினும் சென்று சந்தித்து விட்டு வந்தனர்.

இலங்கையின் முதலாவது அரசியல் கட்சியும் இடதுசாரி கட்சியுமான லங்கா சமசமாஜக் கட்சி தோற்றம் பெறுவதற்கு துணைபுரிந்த முக்கிய காரணிகளில் ஒன்றாக **'சூரியமல்' இயக்கத்தைச்** சொல்லலாம். சூரியமல் இயக்கத்தை தோற்றுவித்தவர்களில் டொரினும் ஒருவர். அவ்வியக்கத்தில் தீவிரமாக இயங்கினார்.

***"நவம்பர் 11ம் திகதியன்று 'சூரியமல்' (சூரியகாந்திப்பூ) தாங்கிக் கொண்டு..... உங்களின் ஆத்ம கௌரவத்தையும் இறைமையையும் வெளிக்காட்டுங்கள்..... ஏகாதிபத்திய யுத்தத்திற்கு ஒத்துழைப்பதற்கு நீங்கள் தயாரில்லை என்பதை வெளிக்காட்டுங்கள்...... ஒவ்வொரு சூரியமல்லும் ஏகாதிபத்திய பாசிசவாதத்துக்கும் யுத்தத்திற்கும் எதிரான தாக்குதலாகும்....."*** என சூரியமல் இயக்கம் பற்றி பிரச்சாரம் செய்யப்பட்டது.

எஸ்.ஏ. விக்கிரமசிங்க லங்கா சமசமாஜக்கட்சியிலிருந்து முரண்பட்டு விலகி பின்னர் கொம்யூனிஸ்ட் கட்சியை ஸ்தாபித்தார். 1947 ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்ட கம்யூனிஸ்ட் கட்சிக்கு மொத்த ஆசனங்களில் 3 ஆசனங்கள் மட்டுமே கிடைத்திருந்தது. 1952ம் ஆண்டு தேர்தலிலும் கொம்யூனிஸ்ட் கட்சி 3 ஆசனங்களை மட்டுமே பெற்றிருந்தது. இத்தேர்தலில் தான் அகுரெஸ்ஸ தொகுதியில் டொரின் விக்கிரமசிங்க போட்டியிட்டார். எஸ்.ஏ.விக்கிரமசிங்கவின் சகோதரியின் கணவரான சரத் விஜேசிங்கவும் அதேதொகுதியில் ஐ.தே.கவை டொரினோடு போட்டியிட்டார்.

பலத்த போட்டியின் மத்தியில் இடம் பெற்ற இந்தத் தேர்தலில் ***'வெள்ளைக்காரப்பெண்', 'அந்நிய நாட்டவள்'*** போன்ற கோஷங்களை எழுப்பி டொரினுக்கு எதிராக எதிர் வேட்பாளர்கள் செயற்பட்டனர். எவ்வாறாயினும் டொரின் சமூகத்தில் பலரால் ஏற்றுக்கொள்ளப்பட்டவராக இருந்தமையால் வெற்றி பெற்றார். ***முதற் தடவையாக ஆசிய நாடொன்றில் பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்ட விதேச பெண்ணாக வரலாற்றில் பதியப்பட்டார் டொரின்.***

பாராளுமன்றத்தில் பல முற்போக்கான கருத்துக்களை முன்வைத்து பல உரைகளை ஆற்றியிருக்கிறார் டொரின்.

''பெண்களுக்கு; ஆண்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தைப்போன்று சமமான சம்பளம் வழங்கப்பட வேண்டும்'' என அன்றைய அரசவையில் அதிகளவு குரல் கொடுத்து வந்தவர் டொரின்.

1952 இலிருந்து 1956 வரை டொரின் அரசவையில் அங்கம் வகித்தார். 1956ம் ஆண்டு தேர்தலில் அவர் போட்டியிடவில்லை என்ற போதும் தனது பிரதேசத்தில் தொடர்ந்தும் சீர்திருத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இலங்கையின் பாராளுமன்ற அரசியலில் பங்கு கொண்ட பெண்களில் டொரினின் பங்களிப்பு முக்கியமானது என்ற கருத்து இன்றும் பலரிடம் உண்டு.

(இக்கட்டுரையில் வந்த டொரின் விக்கிரமசிங்க பற்றிய தகவல்களில் பெரும்பாலானவை குமாரி ஜெயவர்தன எழுதிய Doreen Wickramasinghe A Western Radical in Sri Lanka எனும் நூலிலிருந்து பெறப்பட்டவை.)

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பம்பாய் - இந்திரா இரு திரைப்படங்கள் ஒரு கண்ணோட்டம்

**'பம்பாய்'** திரைப்படம் மிகுந்த எதிர்பார்ப்பிற்கும் அதேயளவு சர்ச்சைக்கும் உள்ளான படம். 'இந்திரா' அந்தளவுக்கு இல்லாவிட்டாலும் சுமாராக எதிர்பார்க்கப்பட்ட படம். ஒன்று மணிரத்தினத்தால் இயக்கப்பட்டது. மற்றது அவரது துணைவி சுஹாசினியால் இயக்கப்பட்டது. இரண்டுமே சமூகத்தில் புரையோடியிருக்கும் மத, சாதி பிரச்சினைகளை தம்மளவில் கருவாகக் கொண்டவை. அதனாலேயே அதற்குரிய முக்கியத்துவத்தையும் பெற்றுக்கொண்டவை.



இத்தகைய முக்கியத்துவம் கொண்ட இவ்விரு திரைப்படங்களும் ஏனைய திரைப்படங்களை விட விமர்சகர்களது விசேட கவனிப்புக்கு உள்ளாவது எதிர் பார்க்க கூடியதே. எனினும் பம்பாய் படம் அளவுக்கு இந்திரா பத்திரிகைகளில் இன்னும் முக்கியத்துவம் பெறவில்லை. இதற்கு இன்னுமோர் காரணமும் உண்டு

புறநிலையில 'பமபாய்' அகில இந்தியாவையே ஆட்டிக் கொண்டிருக்கும் இந்து முஸ்லீம் பிரச்சினையை மையமாகக் கொண்டது 'இந்திரா' சாதிப் பிரச்சினையை மையமாக கொண்டிருக்கிறது. மதப் பிரச்சினையுடன் ஒப்பிடும் போது சாதிப் பிரச்சினை பின்னுக்கு தள்ளப்பட்டிருப்பதுமாகும் இவ்விரண்டு திரைப்படங்களையும் முறையே தனித் தனியாகவும், பின்பு ஒப்பீடு செய்தும் பார்ப்போம்.

தமிழக சஞ்சிகைகளிலும் புலம் பெயர்ந்த ஐரோப்பிய சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும் 'பம்பாய்' படத்தைப் பற்றி காரசாரமான விவாதங்கள் இடம் பெற்று வருகின்றன. இவற்றில் தமிழகப் பத்திரிகைகளை எடுத்துக் கொண்டால் அவற்றில் 'குமுதம்' போன்ற ஜனரஞ்சகப் பத்திரிகைகள் ஒரு விதமான 'விமர்சனப் போக்கையும், இடைநிலைப் பத்திரிகைகளான 'சுபமங்களா' போன்றவை ஒருவிதமான விமர்சனப் போக்கையும் முன்வைத்திருந்தன. இந்த இரண்டு போக்குகளையும் புலம் பெயர்ந்த ஐரோப்பிய சஞ்சிகைகளிலும் காணக் கூடியதாகவுள்ளது. 'காலத்தால் அழிக்கமுடியாத காவியம்' என்று வர்ணிப்பதில்இருந்து '' ஒன்று இரண்டு குறைகளைச் சுட்டிக் காட்டி ''மணிரத்தினம் எனும் மாபெரும் கலைஞன் நினைத்திருந்தால் இன்னும் நன்றாகச் செய்திருக்கலாம்'' என்று தடவிக் கொடுப்பது வரை இவ் விமர்சனங்கள் அமைகின்றன. இதற்குப் புறம்பாக செ. யோகநாதன் போன்ற படைப்பாளிகள் ஓரளவு விமர்சனக் கண்ணோட்டத்துடன் எழுதியதற்கும் காரசாரமான கண்டனக் கணைகள் பறந்து வந்தன. இவற்றின் சாரம்சத்தை எடுத்துக் கொண்டால் சுருக்கமாக இப்படிக் கூறலாம். ஒருபகுதியினர் மணிரத்தினம் 'கலைப் படைப்பாளியே' என்றும் மறுசாரார் மணிரத்தினம் 'வியாபாரியே' என்றும் கட்சி கட்டிக் கொண்டு நிற்பதாகும். மணிரத்தினம் கலைப்படைப்பாளியா? வியாபாரியா? என்ற சர்ச்சையை ஒருபுறம் வைத்து விட்டு 'பம்பாயின்' சமூக முக்கியத்துவம், அதன் அரசியல், ரசிகனில் அது ஏற்படுத்தும் விளைவு என்ற அடிப்டையில் இதனை அணுகுவதே சரியானதாக இருக்கும். மணிரத்தினம் கலைஞனா? வியாபாரியா? என்பதற்கு இரண்டும்தான் என சுருக்கமாக பதில் சொல்லி விடலாம். இதற்கிடையில் தெளிவான கோட்டைக் கீறாமல் நாம் பம்பாயின் உண்மை முகத்தை ரசிகர்களுக்கு இனம்காட்ட முடியாது.

மணிரத்தினத்தின் வழமையான படங்களைப் போலவே இந்தப் படத்திலும் மானுடநேயம் என்பது படம் நெடுகிலும் இழையோடுகிறது. கூடவே 'இந்தியன்' என்கிற தேசிய உணர்வும் பிரச்சாரப்படுத்தப்படுகிறது. மத நல்லிணக்கத்துக்கூடாக இதனைக் கட்டிக் காக்க நினைக்கும் எத்தனிப்பும் வெளியிடப்படுகிறது. 'ரோஜா' படத்தைப் போலவே பம்பாயிலும் இவற்றை வெளிப்படுத்த கொஞ்சம் காதல், கொஞ்சம் வன்முறை, கொஞ்சம் சோகம் தேவைப்பட்டிருக்கிறது. ''ரோஜா'' வைப் போல திருநெல்வேலிக் கிராமத்திலிருந்து தொடங்குகிறது கதை. இந்து வாலிபன் முஸ்லீம் பெண்ணைக் காதலிக்கிறான். பெற்றோரின் எதிர்ப்புக்கிடையே ஓடி வந்த நாயகியுடன் பம்பாயில் குடித்தனம் தொடங்குகிறான். சுமுகமாக போகும் அவர்களது வாழ்க்கையை பம்பாயில் இடம் பெறும் இந்து முஸ்லீம் கலவரம் சின்னாபின்னமாக்கி கடைசியில் ஒன்று சேர வைக்கிறது. சமூகம் திருந்துகிறது. ரசிகர்களும் மனத் திருப்தியுடன் வெளியேறுகிறார்கள். இது தான் படத்தின் சுருக்கம். வழமையான சினிமா என்ற வடிவத்தில் இருந்து எந்த மாறுபாடும் இல்லை. அப்படியாயின் இந்தப்படம் மேற்கத்தைய பாணிப் படங்களுக்கு நிகராக பேசப்படுவது ஏன் என்ற கேள்வி எழலாம். இதில் ஓரளவு உண்மையும் உண்டு. அதுதான் மற்ற இயக்குனர்களுக்கும் மணிரத்தினத்திற்கும் உள்ள வித்தியாசமே. சினிமாவை கட்டமைப்பதில் நவீன தொழில் நுட்பங்களுடன் புதிய இசை, ஒளிப்பதிவில் கவனம், ஒவ்வொரு பிறேமையும் கட்டுவதில் செலுத்தும் சிரத்தை, இவற்றுடன் மானுடநேயம் போன்ற சிந்தனைகளும் சேர்ந்து படத்தை விறுவிறுப்பாக்குகின்றன. கலாரீதியாகவும் ஒரு பாதிப்பை உண்டு பண்ணுகின்றன. இன்றைய இயந்திரத்தனமான படுவேகமான உலகில் படமும் விறுவிறுப்பாக அமைந்து ரசிகர்களை எங்கோ கொண்டு சென்று விடுகிறது. இந்நிலையில் இவற்றையெல்லாம் கடந்து இப்படங்களின் பின்னால் உள்ள 'சங்கதிகளை'ப் பற்றிச் சிந்திக்கும் ஆற்றலை ரசிகன் இழந்து விடுகிறான்.

*நடுநிலைமை மானுடநேயம் என்பவற்றை பொதுவாகப் பார்க்கும் போது அழகான விடயங்கள்தான். ஆனால் தூலமான ஆய்வில் இவையெல்லாம் கபடத்தனம் நிறைந்தவை. ஒரு சிறுபான்மை மதச் சமூகம் வீதிகளில் உயிருடன் கொமுத்தப்படும்போது இந்த நடுநிலைமை என்பது எவ்வளவு அபத்தமானது என்பது விளங்கும். படம் முழுவதும் இடம்பெறும் மனித நேயம் சார்ந்த கலாபூர்வமான சித்திரிப்புகளுக்கு ஒரு இடமும், முஸ்லீம்களுக்கு எதிராக சித்திரிக்கப்பட்ட காட்சிகளுக்கு ஆழமான இடமும் தன்மனதில் ஒதுக்கி விடுகிறான் ரசிகன். முன்னையது பின்னையதுடன் முரண்படாமல் கேள்வி கேட்டு விடாமல் படம் ஒழுங்கமைக்கப் பட்டிருக்கிறது. மேற்கூறியது போல் இதற்கு படத்தில் நிறைய உதாரணம் தரலாம்.*

மேற்கூறிய விடயத்தை மற்றயவர்கள் மறுத்தாலும் மணிரத்தினம் மறுக்கவில்லை. அவர் கூகிறார் '' என்னைப் பொறுத்தவரை கதைக்குப் பின்னாலுள்ள விஷயங்கள் தான் முக்கியம். கதையை உருவாக்குவது வெகு சுலபம், யார் வேண்டுமானாலும் அதைச் செய்யலாம் நான் சொல்ல நினைப்பது கதைக்குப் பின்னாலுள்ள விடயங்களைத்தான். படத்துக்கு கதையின் வடிவம் முக்கியம் இல்லை''

உண்மைதான் இதில் தான் மணிரத்தினத்தின் திறமையும் அடங்கியுள்ளது. இந்து முஸ்லீம் என்ற பாகுபாடு வேண்டாம். மத நல்லிணக்கம் கொள்வோம், நாம் அனைவரும் 'இந்தியன்' என்ற உணர்வைப் பெறுவோம். வன்முறை வேண்டாம்; மனித நேயத்தை வளர்ப்போம். இதுதான் படத்துக்கு முன்னால் உள்ள கதையின் செய்தி. காதல் - வன்முறை என்ற இரு எதிர் எதிரான மனித சுபாவத்தை எடுத்துக் கையாண்டிருக்கிறார். வன்முறையின் தீவிரத்தை அல்லது கொடூரத்தை வெளிப்படுத்த அதற்கு முரணான காதலெனும் நுண்ணிய உணர்வை ஆழப் படுத்துகிறார். அதில் வெற்றியும் பெறுகிறார். இங்குதான் வன்முறை, 'நடுநிலைமை', மானுடநேயம் போன்றவை கேள்விக்குள்ளாகின்றன.

பெரும்பான்மை இந்து மதவெறியர்களால் சிறுபான்மை முஸ்லீம்கள் ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு சூழலில் அவர்களது மத வழிபாட்டுத் தலங்கள் குறிப்பாக ''பாபர் மசூதி' போன்ற வரலாற்று தலங்கள் இடித்து தரைமட்டமாக்கப்படும் போது தாங்க முடியாமல் வெகுண்டெழுந்து 'கலவரங்களில்' ஈடுபடுவதும்; அவர்களை சீண்டிப் பார்ப்பதையே குறிக்கோளாகக் கொண்டு பயங்கரவாத வெறியாட்டம் போடும் இந்து வெறியர்களின் வன்முறையும் ஒன்றாகி விட முடியுமா? படத்தில் இந்து மதவெறியர்களும் கலவரத்தில் ஈடுபடுகின்ற போதும் அவை ஒப்புக்காகக் காட்டப்படுவது புரிந்து கொள்ளக் கூடியதாயுள்ளது. கும்பல்கள் மோதும் காட்சிகளில் காவித்துண்டுகளுடன் சிலர். அவ்வளவுதான். ஆனால் மனதில் பதியத்தக்க குறிப்பான வன்முறைக் காட்சிகளிலும், நெருக்கமான குளோசப் காட்சிகளிலும் முஸ்லீம்கள் தொப்பியுடன் வந்து தாக்குதல் நடாத்தும் காட்சிகளே காட்டப்படுகிறது. தியேட்டரை விட்டு வெளியேறும் ரசிகர்களின் மனத்திரையில் கலவரம், நெருப்பு, முஸ்லீம்கள் தொப்பியுடன் துரத்தித் துரத்தி வெட்டுவது ஆழமாகப் பதிந்து விடுகிறது. ''சென்சாரின் நடவடிக்கையால் முஸ்லீம்கள் வருத்தப்படும்படியாக ஆகிவிட்டது'' என தணிக்கை குழுவின் மேல் மணிரத்தினம் கோபமாயிருப்பதாக பத்திரிகைகள் செய்தி வெளியிடுகின்றன. ஆனால் தணிக்கை செய்யப்பட்ட காட்சிகளை நோக்கும் போது அவை படத்தில் இடம் பெற்றிருந்தால் முஸ்லீம்கள் இன்னும் மோசமாக வருத்தப்பட நேர்ந்திருக்கும். மணிரத்தினம் இன்னும் அம்பலமாகி இருப்பார்.

வன்முறை வேண்டாம், நடுநிலைமை மானுடநேயம் என்பவற்றை பொதுவாகப் பார்க்கும் போது அழகான விடயங்கள்தான். ஆனால் தூலமான ஆய்வில் இவையெல்லாம் கபடத்தனம் நிறைந்தவை. ஒரு சிறுபான்மை மதச் சமூகம் வீதிகளில் உயிருடன் கொழுத்தப்படும்போது இந்த நடுநிலைமை என்பது எவ்வளவு அபத்தமானது என்பது விளங்கும். படம் முழுவதும் இடம்பெறும் மனித நேயம் சார்ந்த கலாபூர்வமான சித்திரிப்புகளுக்கு ஒரு இடமும், முஸ்லீம்களுக்கு எதிராக சித்திரிக்கப்பட்ட காட்சிகளுக்கு ஆழமான இடமும் தன்மனதில் ஒதுக்கி விடுகிறான் ரசிகன். முன்னையது பின்னையதுடன் முரண்படாமல் கேள்வி கேட்டு விடாமல் படம் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கிறது. மேற்கூறியது போல் இதற்கு படத்தில் நிறைய உதாரணம் தரலாம். ஆனால் அதை வாசகர்களுக்கே விட்டு விடுகிறேன்.

நவீன மானுட சிந்தனை மணிரத்தினம் என்ற கலைஞனுக்குள் இருப்பதை நாம் மறுக்க முடியாது. வலது குறைந்த குழந்தைக்காக அஞ்சலி மூலம் வாதாடிய மணிரத்தினம் இந்தப் படத்தில் 'அலி'யை மிகவும் மனித நேயமிக்கவராக வெளிப்படுத்தியிருக்கிறார். வழமையாக தமிழ்ப் படங்களில் கொச்சைப்படுத்தப்படும் 'அலி' பாத்திரம்; இங்கு வேறு அர்த்தம் கொள்கிறது. அஞ்சலி, மௌனராகம் போன்ற படங்களில் மனிதாபிமான உணர்வுகளை அவர் வெளிப்படுத்தியது போல் வேறு விடயங்களே கிடைக்கவில்லையா? யதார்த்தத்தில் எரிந்து கொண்டு இருக்கும் பிரச்சினையை இவர்கள் ஏன் தேர்ந்தெடுக்கிறார்கள்?

ஒன்று, இதன்பால் இவர்களுக்கு உள்ள அக்கறை, அதைப் பற்றிய கருத்து சொல்ல வேண்டும் என்ற ஆவல். மற்றையது; வியாபார இலக்கை அடைதல், அதேநேரத்தில் சமூகப் பிரஞ்ஞை கொண்ட கலைஞர்கள் என்ற 'இமேஜ்'ஐ சமூகத்தில் ஏற்படுத்தல். மற்றும்படி இன்று சென்சாரைக் குறைகூறும் மணிரத்தினத்துக்கு; ஒரு பிரமாண்டமான மீடியாவுக்கூடாக 'நடுநிலைமையை' பேணமுடியமா? என்பது தெரியாததல்ல. அதுவும் மதப் பிரச்சினையில். தெரிந்தும் கை வைத்திருக்கிறார். இங்குதான் படைப்பாளின் நேர்மை பற்றிய கேள்வி எழுகிறது ''உங்களுக்குள் வெட்டிக் கொள்வதை விட்டு விட்டு உங்களுக்குள் மத வெறியை தூண்டுகிறார்களே... அவர்களைப் போய் முதலில் வெட்டுங்கள் என்று படம் பார்க்க வந்த நமக்கெல்லாம் அரிவாள் எடுக்க அறிவுரை கூறிய மணிரத்தினம் தமது படப்பெட்டியை தூக்கிக் கொண்டு போய்.. அதே தூண்டுதல் மனிதரிடம் (பால் தாக்ரே) எங்கெங்கே வெட்ட வேண்டுமோ வெட்டி விட்டு கொடுங்கள்... என்று வந்திருக்கிறாரே! அவரது நேர்மை மீது சந்தேகப்படக் கூடாதா? என ஒரு விமர்சகர் கேள்வியெழுப்பியிருப்பதும் இந்த அடிப்படையில் தான்.

**பரந்துபட்ட வெகுஜனங்களைச் சென்றடைவது என்ற அடிப்டையில் இத்திரைப்படங்களின் அபாயகரமான பாத்திரம்பற்றிப் பின்வருமாறு கூறலாம். ''காட்சிக் கலாசாரத்தின் முதன்மையான நோக்கம் வரலாற்றறிவை நீக்கிவிடுவது தான். போதுக்காட்சியால் பேசப்படுவது மட்டுமே உலகத்தில் இருக்கிறது அல்லது நடக்கிறது எனவும் அதனுள் பேசப்படாதது இல்லவே இல்லை எனவும் நம்ப வைக்கிறது. இதில் பார்வையாளனானவன் அவனது சார்பில் வேறு யாரோ தேர்ந்தெடுத்த பிம்மங்களை ஏற்றுக் கொள்ளும்படி செய்யப்படுகிறான். அதுவே மெல்ல மெல்ல அவனது பார்வையாக மாறிவிடுகிறது''**

அடுத்து சுஹாசினி மணிரத்தினத்தால் இயக்கப்பட்ட இந்திரா படத்தை எடுத்துக் கொள்வோம். இதில் சாதிப் பிரச்சினை என்பது தான் மையம். ஒரு ஊரிலே உயர் சாதியினரால் கொடுமைப்படுத்தப்படும் தாழ்த்தப்பட்ட சாதியினர் கொதித்தெழுந்து கேள்வி கேட்கும் நிலைக்கு வருகின்றனர். இதனால் கொதிப்படைந்த உயர் சாதியினர் அவர்களை ஊரை விட்டே துரத்துகின்றனர். அவர்கள் அயல் கிராமத்தில் சென்று 'வளமாக' வாழ முற்படுகையில் மீண்டும் சாதிப் பிரச்சினை (இடைக்கிடை ஊர்ப்பிரச்சினை என்றே காட்டப்படுகிறது) மேலெழும்புகிறது. பழைய தலைமுறையை விட புதிய தலைமுறை அதனை எவ்வாறு வெற்றி கொண்டு தீர்த்து வைக்கிறது என்பதே கதையின் சாராம்சம்.

இனி விடயத்துக்கு வருவோம். இன்றைய தமிழ் சினிமாவில் வியாபாரரீதியான வெற்றிப் படங்களைத் தரும் ஆண் இயக்குனர்களுக்கு எந்த விதத்திலும் தானும் சளைத்தவரல்ல என்பதை இயக்குனர் சுஹாசினி



நிருபித்திருக்கிறார். மற்றும்படி 'பெண்' தொலைக்காட்சி தொடர் சுஹாசினியை இங்கு காணமுடியாது. ஒரு சிறு வேறுபாடு கதாநாயகனுக்குப் பதிலாக நாயகி முக்கியப்படுத்தப்பட்டிருப்பது. தகப்பனாருக்கு ஈமச்சடங்கு, கொள்ளி வைப்பது போன்ற காட்சிகள் விலக்கு. கதாநாயகிக்கு முக்கியத்துவம் கொடுத்து நிறைய தமிழ்ப்படங்கள் வந்துள்ளன.கால இடைவெளியை தவிர உள்ளடக்கத்தில் அவற்றுக்கும் இந்தப்படத்துக்கும் இடையில் பெரிய வேறுபாடு இருப்பதாகப் படவில்லை. சாதிப் பிரச்சினை சம்பந்தமாக ரசிகர்கள் சிந்தித்து விடக் கூடாதே எ[illegible]தில் கவனமாக கதை கையாளப்பட்டிருக்கிறது. அதற்கு வழமையான சினிமாத் தனங்கள் நிறைய உதவியுள்ளது. உதாரணத்திற்கு பாத்திரங்களின் தேர்வைச் சொல்லலாம். தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் பஞ்சாயத்துத் தலைவர், மகள் போன்றோர் உயர்சாதிக்குரிய லட்சணங்கள் கொண்டவர்களாகவும், அவர்கள் வசிக்கும் வீடுகூட வழமையான பண்ணையார்களின் வீடுமாதிரியே காட்டப்படுகிறது. ரசிகன் புறநிலையில் காணும் சமூக யதார்த்தத்துக்கும் திரைப் படத்துள் கட்டப்படும் யதார்த்தத்துக்கும் இடையில் கவனம் எடுத்து அந்நியத்தன்மை பேணப்படுகிறது.

தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த பெண்ணை உயர்சாதி இளைஞர்கள் பலாத்காரம் பண்ணிவிட பஞ்சாயத்து கூட்டப்படுகிறது. அதில் தப்புக்குத் தண்டனையாக ஆளுக்கு ஐந்து ரூபா அபராதம் கட்டிவிட்டு போவதாக உயர்சாதித் தலைவர் கூறுகிறார் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்களும் பதிலுக்கு பணந் தருவதாகவும் உயர்சாதிப் பெண்களைத் தம்மிடம் விடும்படி கேட்கின்றனர். இரண்டு சமூகமும் பரஸ்பரம் ஒன்றையொன்று அவமானப்படுத்திக் கொள்வதற்கு பெண்ணை பயன்படுத்துவது அழுத்தமாகக் காட்டப்படுகிறது. இருப்பி →

# அரசு-இஸ்ரேல் உறவு: முஸ்லீம் காங்கிரஸின் நிலை என்ன?

மூன்றாம் ஈழ யுத்தம் மிகத் தீவிரமாகத் தொடர்கிறது. இம்முறை என்ன விலை கொடுத்தாயினும் புலிகளை தோற்கடிப்போம்'' என்ற அடிப்படையில் அரசு கடும் மனோவுறுதியுடன் போரில் ஈடுபட்டுள்ளது. யுத்தத்தினை வென்றெடுப்பதற்காக சர்வதேச ஆதரவுகளையும் எதிர்பார்த்து உள்ளது. இவ்வாறான சூழலில் சியோனிசக் கொள்கையினைக் கொண்டிருக்கும் இஸ்ரேலுடன் ராஜதந்திர உறவுகளை மீண்டும் ஆரம்பிப்பதில் அரச உயர்மட்டம் ஆவலாக உள்ளது தெரிந்ததே. இவ்விவகாரத்தில் முஸ்லீம் காங்கிரஸ் அணுகுமுறை சிக்கல்களையே தோற்றுவித்துள்ளது.

இஸ்ரேலிய விவகாரம் இலங்கை முஸ்லிம்களின் தேசிய உணர்வுகளுடன் தொடர்புடையது ஆகும். முஸ்லிம்கள் மதவிடயத்தில் தீர்க்கமான முறையில் ஒன்றுபட்டவர்கள். பாலஸ்தீன முஸ்லிம்களை பலவந்தமாக வெளியேற்றி, பாலஸ்தீனப் பிரதேசத்தை பலாத்காரமாகக் கைப்பற்றிய வரலாற்றுத் துரோகம் இஸ்ரேலுக்குரியது. இத்தகைய துரோகத்தனத்துக்கு இன்றைய உலக பொலிஸ்காரனான அமெரிக்க அரசின் பூரண ஆதரவு தாராளமாகக் கிடைத்திருந்தது. இவ்வகையில் உலக முஸ்லிம்களின் சந்தேகத்துக்கு அப்பாலான எதிரியாக அமெரிக்காவும், இஸ்ரேலும் பரிணாமம் பெற்றுள்ளன என்பது நெருப்பிலிட்ட நிஜமாகும்.

இஸ்ரேலுடன் ராஜதந்திர உறவுகளை இலங்கை அரசு யுத்த நோக்கங்களுக்காக ஆரம்பிக்க முயற்சிக்கும் போது முஸ்லீம் காங்கிரஸ் இடதுசாரிப் பாணியில் எதிர்த்தது. உண்மையிலேயே இவ்வாறான எதிர்ப்பு முஸ்லிம்களின் அபிலாசைகளுடன் சம்பந்தப்பட்டது என்ற வகையில் ஆதரவைப் பெற்றதில் வியப்பில்லை.

இஸ்ரேலுடன் உறவுகளை ஆரம்பிப்பதில் அரசு காட்டும் ஆரம்ப ஆர்வத்துக்கு முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்பு தெரிவித்தமையும், அவ்வெதிர்ப்பு ''அரசினை விட்டு வெளியேறுவோம்'' என்று கூறுமளவுக்கு முன்னேறியமையும் சிறப்பானதொரு நகர்வாகும். ஆயின் முஸ்லீம் காங்கிரஸ் இலங்கையில் அமெரிக்காவின் குரல் ஒலிபரப்பு நிலையத்தை எதிர்க்கும் மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்தமையும், எதிர்ப்பாக வாக்களித்தமையும் முஸ்லிம் காங்கிரசின் முரண்பட்ட அரசியல் போக்கையே வெளிப்படுத்துகிறது.

அமெரிக்கக் குரல் நிலையம் இலங்கையின் இறைமைக்கு, தன்னாதிக்கத்துக்குச் சவாலாகத் திகழ்கிறது என்பதற்கு எல்லாம் அப்பால் அது இலங்கை முஸ்லீம்களின் நடவடிக்கைகளுக்கு நீண்டகால ரீதியில் எதிரானது என்பது நிதானமாய் ஆராயுமிடத்து நிரூபணமாகும். முஸ்லிம்களின் நலன்களில் இருந்து தூர நோக்குடன் சிந்திப்பவர்கள் 'அமெரிக்காவின் குரல்' முயற்சிகளை துணிவாய் எதிர்ப்பது கட்டாயத் தேவையாகும்.

முஸ்லீம் காங்கிரஸ் 'அமெரிக்காவின் குரல்' நிலையத்தை இலங்கையில் தொடர்ந்து நிர்வகிப்பதற்கு ஆதரவாக



செயற்பட்டமையூடாக ஒரு புறம் இலங்கையின் மெய்யான எதிர்காலத்துக்கு துரோகம் செய்துள்ளதுடன் மறுபக்கமாக முஸ்லீம்களின் நலன்களுக்கு எதிராகவும் மறைமுகமாக செயற்பட்டுள்ளது. 'அமெரிக்காவின் குரலு'க்காக ஐ.தே.க அல்லது சுதந்திரக் கட்சி (முஸ்லீம் பிரிவு) உறுப்பினர்கள் ஆதரவு கொடுத்தமை ஆச்சரியத்துக்கு உரியதல்ல. ஏனென்றால் ஐ.தே.க, சுதந்திரக் கட்சி முஸ்லிம் உறுப்பினர்கள் முஸ்லீம்கள் நலன்கள் தொடர்பாக எப்போதுமே பேசியதில்லை. ஆயின் முஸ்லீம் காங்கிரஸின் செயற்பாடுகளை இவ்வாறு நாம் அணுக முடியாது.

'அமெரிக்காவின் குரல்' நிலையத்துக்கு சார்பாக முஸ்லீம் காங்கிரஸ் செயற்பட்டமை ஒருபுறமிருக்க, தற்போதைய முஸ்லீம் காங்கிரசின் நிலைப்பாடு இன்னொரு புறமாக அமைகிறது. ''அரசுடன் நாம் இறுதிவரை ஒத்துழைப்போம். எமக்குள் பிரச்சினைகளை ஏற்படுத்த வெளிச் சக்திகள் முயல்கின்றன'' என்று பேரினவாத அரசுக்கு அஷ்ரஃப் வழமைபோல் விசுவாசம் தெரிவித்துள்ளார்.

''இஸ்ரேலுடன் உறவுகளைத் தொடர்ந்தால் அரசுக்கான ஆதரவினை வாபஸ் பெறுவேன்'' என்று இடதுசாரித்தனமாக வீரப்பிரதாபம் செய்தவர் இஸ்ரேல் உறவுகள் தொடர்பாக தமது நிலையினை அரசு பரிசீலனை செய்யும் முன்பே ''அரசுக்கான ஆதரவு இறுதிவரை தொடரும்'' என்று அறிவித்திருப்பது முஸ்லீம் காங்கிரஸின் சந்தர்ப்பவாத, அரைவேக்காட்டு அரசியலை இன்னும் ஒருமுறை தோலுரித்துக் காட்டுகிறது. இஸ்ரேல் ராஜதந்திர உறவு விவகாரமாக முஸ்லீம் காங்கிரஸ் அரசுடன் இதுவரை பேச்சு நடாத்தவில்லை. அவ்வாறாயின் திடீரென்று விசுவாசமாக பேசுவது அதிர்ச்சியானதாகவே உள்ளது.

''அரசுடன் இறுதிவரை செயல்படுவோம்'' என்று அத்தாட்சி கூறுவது பொருந்துமாயின் ''முஸ்லீம்கள் தொடர்பாக அரசு எதையும் செய்யலாம் நாம் ஆதரவு வழங்குவோம் என்கிற முஸ்லீம் காங்கிரஸின் நிலைப்பாட்டையே அது வெளிப்படுத்துகிறது. தூரநோக்கற்ற முறையில் அரசியல் நடாத்தும் முஸ்லீம் காங்கிரசுக்கு நிகர் முஸ்லீம் காங்கிரசேயாகும். வெறுமனே உணர்ச்சிகளை, சுலோகங்களை அடிப்படையாகக் கொண்டு முஸ்லீம்களை ஏமாற்றி விடலாம் என்று முஸ்லீம் காங்கிரஸ் தொடர்ந்து நம்புமாயின் அது பாரிய அரசியல் விளைவுகளையே மிஞ்ச வைக்கும்.

**ஆர்.எம்.இம்தியாஸ்**

# பம்பாய் - இந்திரா....

னும் உயர்சாதியைச் சேர்ந்த இளைஞர்கள் துணிச்சலாக தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை பலாத்காரம் பண்ண முடிகிறது என்றால் அதற்கு காரணம் அவள் பெண் என்பது மட்டுமல்ல; அவள் தாழ்ந்த சாதியாக இருப்பதும் தான். இந்த விடயம் படத்தில் தவிர்க்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் இவை சாதியம் குறித்து ஆழமான எதிர்ப்புணர்வை ஏற்படுத்தக் கூடியவை.

இறுதிக் காட்சிகளில் மேல்சாதிக்காரர்களின் ஊர் வெள்ளப்பெருக்கால் அழிந்து போவதாகவும் அவர்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்களின் கிராமத்துக்கே அகதிகளாக வருவதாகவும் சித்திரிக்கப்படுகிறது. இங்கும் ஒரு முக்கியமான விடயத்தை கவனிக்கலாம்; புவியியல் ரீதியாக தாழ்த்தப்பட்டவர்கள் பாதுகாப்பான பிரதேசத்தில் வாழ்வதாகவும் உயர்சாதியினர் வெள்ளத்தால் மூழ்கி விடக்கூடிய பிரதேசத்தில் வாழ்வதாகவும் காதில் பூவைக்கப்படுகிறது. இது இயக்குனருக்கே உறுத்தியிருக்குமோ என்னவோ அதனாலேயே உயர்சாதித் தலைவர் தனது நலனுக்காக வாய்க்கால் வெட்டியதாக மற்றக் காதிலும் பூவைக்கப்படுகிறது. திரைக்கதையில் கட்டமைக்கப்படுகிற யதார்த்தத்துக்கு கூட இது கொஞ்சமும் பொருந்தவில்லை. அப்படியானால் இந்தப் படத்தில் நல்ல அம்சங்களே இல்லையா? கலைத்துவமே இல்லையா? என்று நீங்கள் கேட்கலாம். 'நல்ல' அம்சங்கள் சில விதிவிலக்காய் அமைந்திருப்பதை ஏற்கனவே சுட்டிக் காட்டினேன். மற்றும்படி கலாரீதியான அம்சம் காதல் காட்சிகளில் தாராளமாக வெளிப்படுகிறது. அனைவருக்கும் விடயத்தை புரிய வைக்கவேண்டும் என்பதற்காக கலைத்துவம் என்ற இனிப்புடன் மருந்தைக் கலப்பதில் என்க்கு முரண்பாடில்லை. விசத்தை கலப்பதுதான் ஆபத்து. பம்பாய் படத்தைப் போலவே ிதிலும் காதலும் வன்முறையும் காட்டப்படுகிறது. அடிமை எண்ணம் நீங்கி, இது நம்மபூமி (இந்தியா) என்ற உணர்வுடன் வாழ வேண்டும் என்பதைத்தான் கணவரைப் போலவே வலியுறுத்தவருகிறார் சுஹாசினி. மேலோட்டமாகப் பார்த்தால் இவை நல்ல நோக்கமாகவேபடும். துல்லியமாக எடுத்து ஆராய்ந்தால் இறுதியில் இவை யாருக்கு சேவகம் செய்வதில் முடியும் என்பது தெளிவாகும்.

இந்திரா காந்தி என்ற தலைவி தன்னைப் பாதித்ததனால் தான் இப்படத்திற்கு 'இந்திரா' என்று பெயரிட்டதாக கூறும் சுகாசினி; எமெர்ஜென்சி கொண்டு வந்து காட்டாட்சி செய்த இந்திரா காந்தியை பொதுமக்களே தேர்தலில் நிராகரித்போதும் அதற்காக மனம் வருந்தி ஒருவருடம் தரையில் படுத்ததாகக் கூறும் சுஹாசினி இந்தப் படத்தில் கதாநாயகியை இந்திரா காந்திக்குக் குறியீடாக்கியுள்ளதையும் கவனிக்கலாம். சினிமாத்துறையில் நெருக்கமான முஸ்லீம் நண்பர்களைக் கொண்ட மணிரத்தினம், சுஹாசினி போன்றவர்கள் தங்களளவில் மத, சாதி வேறுபாடுகளைக் கடந்து 'இந்தியன்' என ஒற்றுமைப்பட அறைகூவல் விடுத்தாலும் புறநிலை யதார்த்தத்தை புரிந்து கொள்ள முடியாத அவர்களின் கனவு ஒரு அவலச் சுவையே. இதனைச் சொல்ல அவர்களுக்கு உரிமை இருக்கிறது என்ற போதிலும் அதன் அபாயகரமான பக்கத்தை நாம் கண்டு கொள்ளாமல் விட முடியாது. அத்துடன் சிதறுண்டு நொருங்கும் இந்திய தேசியத்தை கட்டிக் காக்க நினைக்கும் அவலக் குரலாகவும் இதனை நோக்கலாம். இதில் இருவகைப் போக்குகள் உண்டு. ஒன்று மத நல்லிணக்கத்தைப் பேணிக்கொண்டு, சாதி, மத வேறுபாடுகளைக் கடந்து 'இந்தியன்' என ஒற்றுமைப்படுவது. அடுத்தது

..டமாக இந்துத்துவத்தை உயர்த்திப் ..கும் பாஸிஸ சக்திகள். இதில் முதலாவதின் வெளிப்பாடாக கலைத்தளத்தில் பாலச்சந்தர், மணிரத்தினம் போன்றவர்களையும் சமூக அறிவுத் தளத்தில் சோ, ஜெயகாந்தன் வகையறாக்களையும் குறிப்பிடலாம். இரண்டாவதற்கு உதாரணமாக ஆர்.எஸ்.எஸ், சிவசேனா போன்றவற்றைக் ..பிடலாம். ஆயினும் முதலாவது ..கின் அவலம் என்னவென்றால் அது அதன் இறுதி ஆய்வில் இரண்டாவது போக்கிற்கு துணை போவதில் முடிவதுதான். இதன் விளைவை பம்பாய், ரோஜா, இந்திரா போன்ற படங்களில் துல்லியமாக காணமுடியும்.

பரந்துபட்ட வெகுஜனங்களைச் சென்றடைவது என்ற அடிப்டையில் இத்திரைப்படங்களின் அபாயகரமான பாத்திரம்பற்றிப் பின்வருமாறு கூறலாம். ''காட்சிக் கலாசாரத்தின் முதன்மையான நோக்கம் வரலாற்றறிவை நீக்கிவிடுவதுதான். பொதுக்காட்சியால் பேசப்படுவது மட்டுமே உலகத்தில் இருக்கிறது அல்லது நடக்கிறது எனவும் அதனுள் பேசப்படாதது இல்லவே இல்லை எனவும் நம்ப வைக்கிறது. இதில் பார்வையாளனானவன் அவனது சார்பில் வேறு யாரோ தேர்ந்தெடுத்த பிம்மங்களை ஏற்றுக் கொள்ளும்படி செய்யப்படுகிறான். அதுவே மெல்ல மெல்ல அவனது பார்வையாக மாறிவிடுகிறது''.

முக்கிய குறிப்பு: மணிரத்தினம் அடுத்து இலங்கைப் பிரச்சினையை மையமாக வைத்து படம் எடுக்கப் போவதாக குமுதம் செய்தி வெளியிட்டுள்ளது. அது எப்படி இருக்கும் என்பது நாம் ஊகித்துக் கொள்ளக்கூடியதுதானே.

**அரிகர புத்திரன்**


# சுதந்திர இலக்கிய விழா 1995

**நான்காவது சுதந்திர இலக்கிய விழாவையொட்டி ஆக்க இலக்கியப் படைப்பாளிகளுக்கான விருது வழங்கல். விருது வழங்கல் இரு பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது.**

**1) 01-01-1994 இல் இருந்து 31-12-1994 வரையான காலப்பகுதியில் கவிதை, சிறுகதை, நாவல், மொழிபெயர்ப்பு இலக்கியம் ஆகியதுறைகளில் வெளியாகிய சிறந்த நூல்களுக்கான விருது வழங்கல்.**

- 0 படைப்பாளிகள் இலங்கையராய் இருத்தல் வேண்டும்.
- 0 வெளிநாட்டில்வதியும் படைப்பாளிகளின் நூல்களும், வெளிநாடுகளில்வெளியிடப்பட்ட நூல்களும் இதனுடன் சேர்த்துக்கொள்ளப்படும்.
- 0 அமைப்புக்குழுவே நூல்களை சேகரித்து மதிப்பீடு செய்யும். இருப்பினும் தவறுகளை தவிர்க்கும் முகமாக எழுத்தாளர்கள் தமது நூல்களைப்பற்றிய விபரங்களை தந்துதவுமாறு வேண்டுகிறோம்.

**2) புதிய எழுத்தாளர்களுக்கான விருது வழங்கல்**

சிறுகதை, கவிதைத் துறைகளில் புதிய எழுத்தாளர்களுக்கான போட்டி ஒன்றை நடாத்தி சிறந்த படைப்புகளுக்கு விருது வழங்கல்.

**போட்டி முடிவுத் திகதி 31-08-1995.**


இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கும், விண்ணப்பப்படிவங்களுக்கும் சுயமுகவரி இடப்பட்ட, முத்திரை ஒட்டப்பட்ட, நீண்ட கடித உறையொன்றை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**அமைப்புக்குழு,**
**புதிய எழுத்தாளர் போட்டி,**
**சுதந்திர இலக்கிய விழா-1995**
**இல 61, பழைய கொட்டாவ வீதி,**
**மிரிஹான,**
**நுகேகொட.**
**தொலைபேசி-811927**

www.tamilarangam.net



# வெள்ளைக் காகமும் வீரவாள்களும்...



## எஸ். எல். எம். ஹனீபா.

அவன் அன்று வழமைக்கு மாறாக கொஞ்சம் முன் கூட்டியே எழுந்து விட்டான். ''சுப்ஹை'' தொழுதுவிட்டு வெளியில் வந்து, வாசலில் குடை பிடித்து நின்ற 'தெம்பிலி'யைப் பார்த்ததும் அவனுக்கு நெஞ்சில் 'பகீ'ரென்றது.

அதைக் காணவில்லை. தென்னையின் வட்டுக்குள்ளும் மட்டைகள் ஒவ்வொன்றிலும் பார்வையை மேய விட்டான். பலன் பூஜ்ஜியம்தான். இத்தனைக்கும் தெம்பிலியையும் அவனையும் ஒருநாளேனும் அது பிரிந்து வாழ்ந்ததேயில்லை.

இன்று நேற்றா? சரியாகப் பத்து வருடங்கள்... கிட்டித்து இறுகிப் போன உறவு. பந்தம்... எல்லாவற்றையும் ஒரே இரவில் கொத்தி எறிந்துவிட்டு எங்கே போனது இந்தக் காகம்?

அவன் மனம் பதறிப் பதறி... அந்தரத்தில் சிறகடித்து மாய்ந்து... மாய்ந்து...

''உம்மா காகத்தெ காணிலியே...'' உரத்துக் கூவினான். அடுப்பில் 'தெயிலெ' வைத்துக் கொண்டிருந்த உம்மாவுக்கும் அவனுடைய பதறல் அதிர்ச்சியாகத்தானிருந்தது.

உம்மாவும் அடுப்படியிலிருந்து ஓட்டமும் நடையுமாக வெளியில் வந்து தெம்பிலியைப் பார்த்தாள்.

காகமில்லை! அருமையாய்... பெருமையாய்... வளர்த்த காகம். வெள்ளைக் காகம்... மல்லிகைப் பூப்போல் வெள்ளை. கால்கள் இரண்டும் சிவப்பு... புறாக் கால்கள்... கண்களில் பெண்களின் சாயல்... மார்பு விரிந்து பரந்து ஆலாவின் ஆளுமை..!

மகன் பாசத்தோடு வளாத்த காகம்... எங்கே போனது?

''உம்மா நானொருக்கா பள்ளிவாசல் இத்திமரத்தெ பார்த்திட்டு வாரென்.''

பள்ளிவளவில் இத்தி மரத்தை இரண்டு சுற்றுச் சுற்றி...

''காக்கா ... காக்கா...'' அவன் தொண்டை கரகரத்தது. கண்களில் நீர் முட்டியது.

என்ன செய்யெ காகமில்லை...! மனம் கரைந்தது. பள்ளிவாசலுக்கருகில் 'சென்றி'யில் அவனுடன் படித்த நாசர் துவக்குடன் நின்று கொண்டிருந்தான்.

''எங்கெட வெள்ளைக் காகத்தெக் காணிலியா?''

''இல்லியெ. நேற்று மஃரிக்குள்ள இத்தியில் வந்து பழம் சாப்பிட்டதைப் பார்த்தெனான். பாட்டொன்றும் பாடி விட்டுத்தான் வெள்ளைக் காகம் பறந்து போனது. அது மட்டுமல்ல எங்களின் கோப்ரலைப் பார்த்து சிங்களத்தில் நக்கலடித்து விட்டும் போனது. பெரியவர் துவக்கைக் காட்டியும் அது பயப்படவில்லை'' என்றான் நாசர்.

வெள்ளைக் காகத்தின் ஓர்மத்தை அவன் நண்பன் வியந்து போற்றினான்.

நெஞ்சு முட்டிய பிரிவின் வேதனையிலும் இவனுக்கு மனசு கொஞ்சம் குளிர்ந்து போயிற்று.

இப்படித்தான் - காகத்தைக் குஞ்சாகப் பிடித்து கூட்டில் அடைத்த முதல் நாளும்...

இவன் கண்கள் கலங்கினான். உணர்ச்சிக் கொந்தளிப்பில் மெய்சிலிர்த்தான். காகத்தின் மழலை மொழியில் மயங்கி முயங்கினான்.

நாள்கள் கரையக் கரைய காகத்தின் அழகும் தேஜசும்... பட்டுமேனியில் ஒளிபட்டுத் தெறித்து ... கண்களில் 'ஜால்' அடித்தது.

இன்னொரு நாள் - உம்மாவின் வெள்ளிமணிக் கோர்வையில் மூன்று மணிகளைக் கோர்த்துக் காகத்தின் கழுத்தில் மாலையாக அணிவித்தான்.

காகத்திற்கு இனிஇல்லையென்ற குஷி. தலைகுப்புற 'குஷ்த்தி' அடித்து. சிறகுகளை அகலக் காட்டி ஆனந்தித்தது.

திடீரென ஒருநாள் வெள்ளைக் காகம் பாடவும் தொடங்கியது. ஏழு ஷ்வரங்களையும் தன் குரலில் குழைத்துப் பாடியது.

இன்னுமொரு நாள் காகம் பேசத் தொடங்கியது.

''உலகில் எங்கள் இனம்தான் உன்னதமானது. நாங்கள் 'பத்ரீன்கள்'. எங்களுக்கு நிகர் நாங்களே'' என்றது.

மக்களெல்லாம் மேனி சிலிர்த்தனர். இளைஞர்களின் புஜங்களெல்லாம் வீரவாள்களாக விண்ணில் கெக்கெலித்தன.

ஊர்கள் தோறும் தோரணங்கள்... மேடைகள்.. குரவை ஒலிகள்...

வெள்ளைக் காகத்தை மக்களெல்லாம் பல்லக்கில் ஏற்றிச் சுமந்தார்கள்... வீடுகள் தோறும் வெள்ளைக் காகத்தின் வண்ணப் படத்தை 'றாம்' போட்டு மாட்டிவைத்தார்கள். வெள்ளிக்கிழமை இரவுகளில் மணக்குச்சி கொளுத்தி மணம் பிடித்தார்கள்.

வேறு சிலர் - தாங்கள் நினைத்த காரியங்கள் கைகூட வேண்டுமெனக் காகத்திற்கு காணிக்கை கட்டினார்கள். இன்னும் சிலர் காகத்தின் காலடி மண்ணில் 'சிட்டிகை' அளவு வாயில் போட்டு ருசித்து மென்றார்கள். வெள்ளைக் காகத்தின் பெருமை கொடிகட்டிப் பறக்கத் தொடங்கியது.

பத்திரிகையாளர்கள் படையெடுத்தார்கள். காகத்தையும் இவனையும் அருகருகே வைத்துப் படம் பிடித்தார்கள். வண்ண வண்ணக் கலவைகளில் காகமும் இவனும் பத்திரிகைகளில் மிதந்தார்கள்.

இத்தனைக்கும் இடையில், காகம் ஒருநாள் பத்திரிகையாளர்கள் மகாநாட்டிற்கும் ஏற்பாடு செய்தது. இவனுக்கு எதுவுமே விளங்கவில்லை. மேடையில் நடுநாயகமாக காகம் அமர்ந்திருக்க - பத்திரிகையாளர்கள் துருவித் துருவிக் கேள்விகளைத் தொடுத்தனர்.

மூத்த பத்திரிகையாளர் லூசியன் அவர்கள் கேள்விக் கணைகளை வெள்ளைக் காகத்தின் முன் வீசி எறிந்தார். காகமும் கொஞ்சமும் சளைக்காமல் தன்னுடைய அழகையும் ஆளுமையையும் காட்டிக் காட்டி பதில் கூறியது. கூடயிருந்த பத்திரிகையாளர் தராக்கி காகத்தின் சாகசங்களை இவனுக்குச் சாடை காட்டினார்.

போன நோன்புப் பெருநாள் தொழுகையின் பின்னர், திடீரெனக் காகம் TVயில் தோன்றி இசைக் கச்சேரி நடாத்தியது. சக்தி குழுவினர் களைத்துப் போயினர். இப்படியிருக்க பிபிஸி ஆனந்தி அக்காவும் வெள்ளைக் காகத்தை விட்டு வைக்கவில்லை. 'கணீ'ரென்ற குரலில் நேர்காணல் நடாத்தினார்.

அகிலமெங்கும் வெள்ளைக் காகத்தின் குரல் அலை பாய்ந்திற்று..

காகத்தைக் காணவும் கதைக்கவும் பயந்த மக்கள் - பின்னாளில் காகத்தின் அருமை பெருமை களில் மூழ்கியவர்களாக - வீடுவீடாக விருந்திற்கழைத்தார்கள். இவன் மீது எரிச்சல் கொண்ட சிலர் காகத்தை இவன் மட்டுமே வைத்திருப்பதாகப் பொறாமைப்பட்டார்கள்.

வெள்ளைக் காகம் முட்டையாகவிருக்கும் போது தாங்களே முதலில் கண்டதாக வேறு சிலர் பெருமையடித்தார்கள்.

இல்லை! இல்லை!! வெள்ளைக் காகத்தின் தாய் எங்களின் வயலில்தான் காவல்காத்தது, எனவே வெள்ளைக் காகம் எங்கள் சொத்து என இன்னும் சிலர் நோட்டீஸ் அடித்தார்கள்.

காகத்திற்குச் சிலர் கல்லெறிந்தார்கள். கடத்த முயற்சித்தார்கள். கண்ணி வைத்துப் பார்த்தார்கள். குப்பியோட்டை அரைத்து பணிசுக்குள் திணித்து வீசிப் பார்த்தார்கள். வாழைப் பழத்திற்குள் எலிப் பாசனத்தை புதைத்து வைத்தார்கள். இவை எதிலும் காகம் அகப்படவேயில்லை... ஆனாலும் எல்லாவற்றையும் இரகசியமாக இவனிடம் சொல்லியே வந்தது காகம்!

கடந்த காலங்களில் காகத்தின் சாகசங்கள் ஒவ்வொன்றையும் எண்ணிப் பார்க்க பார்க்க இவனுக்குக் கண்கள் கலங்கின.

பொழுதும் உச்சிக்கு வந்து விட்டது. ஊரிலுள்ள பெரிய்ய மரங்கள் அனைத்தையும் பார்த்தாகி விட்டது.

அவனுக்கு மரங்களெல்லாம் கதிரைகளாக கண்ணாமூச்சி காட்டியது.

எங்கும் வெள்ளைக் காகம் அகப்படவேயில்லை.

கண்ணில் படுபவர்களிடமெல்லாம் இவன் காகத்தைப் பற்றியே விசாரித்து வந்தான். தனது நெஞ்சிக் கூட்டிற்குள் அடைக்கலம் அளித்து வளர்த்து வந்த காகம்... திடீரென இன்று மாய்மாய் மறைந்து விட்டதை எண்ணி மனமுடைந்தவனாக...

கடைசியாக அவன் தகப்பனார் ஆதம்(அலை) அவர்களையும் தாயார் ஹவ்வாவையும் வழிகேட்டில் வீழ்த்திய சைத்தானின் கையில்தான் அருமை பெருமைமிக்க நமது வெள்ளைக் காகமும் அகப்பட்டிருக்க வேண்டும் எனத் திடமாக நம்பினான்.

'முகர்' தொழுகைக்கான 'அழைப்பு' காதில் விழுந்த வேளையில் தான் வீட்டினதும் உம்மாவினதும் ஞாபகம் அவனுக்கு உறைத்தது.

பசியும் தாகமும் வேறு ஒன்றையொன்று துரத்திக் கொத்தத் தொடங்கியது.

சைக்கிளில் வந்த வேகத்திலேயே 'கேற்'றை இடித்துக் கொண்டு - ஊர்காவல் படைவீரன் போல... அவன் வாசலில் இறங்கிய போது - உம்மா வீட்டினுள்ளிருந்து ஆவல் கொண்டு வெளியில் வந்தாள்.

''தம்பி! இஞ்செ பாத்தாயா. இரவு குதிரைப் பட்டாளம் தான் வந்து போயிரிக்கி. குதிரை வீரர்களின் சப்பாத்து அடிகள் கூட...' உம்மா ஒப்புவித்தாள். இவனும் ஏதோ ஊகித்தவனாக - கண்களிரண்டும் தடயங்களை 'மூஸ், மூஸ்' என்று மேயத் தொடங்கியது.

ஒரு திடமான முடிவுக்கு வந்தவன் போல வீட்டினுள் நுழைந்தவன் அப்படியே வாப்பாவின் சாய்மானக் கதிரையில் சாய்ந்து விட்டான்.

வெள்ளைக் காகம் காணாமல் போன செய்தி ஊரெல்லாம் கரையத் தொடங்கியது. உம்மாவும் மகனும் குதிரைப் படைவீரர்கள் தங்கள் வீட்டிற்கு நேற்றிரவு வந்து; வெள்ளைக் காக த்தை அழைத்துப் போன செய்தியை அமசடக்கமாக வைத்துக் கொண் டார்கள்....

வெள்ளைக் காகத்திற்கு தேசிய அடையாள அட்டைக்காக விண்ணப்பத்தை அனுப்பி பல மாதங்களாகியும் இன்னும் கைக்கு வந்து சேரவில்லையே என்று ஏனோ அந்த வேளையிலும் அவனால் ஆதங்கப் படாமல் இருக்க முடியவில்லை.

ஒரே நாளில் காகத்தின் பிரிவில் இவன் கறுத்தும் மெலிந்தும் போனான். கறுப்புக் காகங்களெல்லாம் அன்று மாலைக்குள் சந்தைப் பக்கம் போனவனைப் பார்த்துக் கேலி செய்யத் தொடங்கின.

நெஞ்சு முட்டிய வெப்பிசாரத்துடன் அன்று அவன் வீட்டிற்குள்ளேயே முடங்கிப் போனான்.

மஃரிப் தொழுகைக்குப் பிறகு - வெள்ளைக் காகம் இபுலீஸின் பிடியில் அகப்பட்டு விடக் கூடாது என்று உம்மா 'மன்ஸில்' ஓதினா. கூடவே வெள்ளைக் காகம் திரும்பி வர வேண்டும் என்றும் நோன்பு மூன்று பிடிப்பதாகவும் - தொழுத பாயிலிருந்தே 'நிய்யத்'தையும் வைத்துக் கொண்டாள்.

வெள்ளைக் காகத்தைக் கடத்திக் கொண்டு போன இரு நாட்களும் அவனுக்கு இருபது வருடங்கள் போல்.. கழிந்தன.... அன்றைய மாலை ரூபவாஹினிச் செய்தியில்-

'புகழ் பெற்ற வெள்ளைக் காகம் தற்போது அரசியின் மாளிகையில் தஞ்சம் கோரியுள்ளது. அடுத்த தேசத் தின் மீது படையெடுக்க வேண்டிய சுப வேளை யையும் காலத்தையும் கணித்துக் கொடுத்துள்ள வெள்ளைக் காகம் மூளப் போகும் பெரும்போரில் அரசிக்கே வெற்றி கிட்டும் என்றும் ஆரூடம் வேறும் கூறியுள்ளது.

வெள்ளைக் காகத்தின் மெய்ப்பாதுகாவலர்களாக இருபது கறுப்புக் குதிரைப் படை வீரர்களை அமர்த்திக் கொள்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. எகிப்து தேசத்து மன்னர் காகத்திற்கு தங்கத்திலான கூடொன்றையும், அரபு நாட்டு இளவரசி வெள்ளைக் காகத்திற்கு முத்து மாலை ஒன்றையும் அன்பளிப்பாக விமான மூலம் அனுப்பி வைத்துள்ளனர்.

காகத்திற்குப் பரிசுப் பொருள்களும் வாழ்த்துச் செய்திகளும் வந்து குவிந்த வண்ணமிருக்கின்றன.

செய்தியின் முடிவில் வெள்ளைக் காகத்திற்காக ஏங்கும் எண்ணம் அவனிடமிருந்து சிறகடிக்க - வெள்ளைக் காகத்தின் சாகசங்களிலிருந்து தான் எவ்வாறு தப்புவது என்ற புதிய பயம் குடி கொள்ளத் தொடங்கியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மக்கள் அடித்தளமில்லாத கட்சிகளுக்கு இடைக்கால நிர்வாக சபை ஏன்?

வட-கிழக்கு மாகாணங்களிற்காக அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இடைக்கால நிர்வாக சபைக்குச் சில முஸ்லீம் கட்சிகளும், தமிழ் கட்சிகளும் உடன்பாட்டைத் தெரிவித்திருந்ததுடன் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை வழங்குவது பின்போடப்பட்டுள்ளதாக ''றஷ்மியவிற்கு'த் தெரியவந்துள்ளது.

அரசாங்கத்தின் பிரதான குறிக்கோளானது வட-கிழக்கு இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தி அதன் அதிகாரத்தைத் தற்போது பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் வட-கிழக்கு அரசியல் கட்சிகளிடம் வழங்குவதாகும். இது தொடர்பாக ''றஷ்மிய'' செய்த விசாரணைகளின் போது பதிலளித்த வட-கிழக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரான ஜாவிட் மரிக்கார் கடந்த பொதுத் தேர்தல்களில் வட-கிழக்கு மாகாணங்களில் மக்கள் வாக்குகளைப் பாவித்துள்ள முறையைப் பார்க்கும்போது அங்குள்ள மக்கள் ''வட கிழக்கு இடைக்கால சபையொன்றிற்கு'' முழுமையாகவே எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர் எனத் தெரிவித்தார்.

கடந்த பொதுத் தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் த.ஐ.வி.கூ. 4 தொகுதிகளிலும், ஸ்ரீ.ல.மு.கா. 4 தொகுதிகளிலும், ஐ.தே.க. 6 தொகுதிகளிலும், பொ.ஐ.மு. ஒரு தொகுதியிலும் வெற்றி பெற்றன.

வட-கிழக்கு மாகாணத்தின் இடைக்கால நிர்வாக அதிகாரத்தைக் கோரியுள்ள ஈ.பி.டீ.பி, புளொட் இயக்கங்களுக்குக் கிழக்கில் எதுவித பாராளுமன்ற அடித்தளமுமே இல்லை. அதே போல், 6,00,000 வாக்குகளை விடக் கூடிய அளவு உள்ள யாழ்ப்பாண மாவட்டத்தின் வாக்கு அளவில் கடந்த தேர்தலில் வாக்களித்தவர்கள் 11,900க்கும் குறைவே. இவற்றில் 10,000 மட்டிலான வாக்குகளைப் பெற்ற ஈ.பி.டி.பி. இயக்கம் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகள் 9ஐப் பெற்றுக் கொண்டது. வன்னி மாவட்டத்தின் வாக்குகள் 2,00,000 அளவில் இருப்பதுடன், அதில் புளொட் இயக்கம் பெற்றுக் கொண்டது 9,000 வாக்குளை மட்டுமே. அதன்படி அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகள் மூன்றைத் தமதாக்கிக் கொண்டனர். இவ் இயக்கங்கள் இரண்டும் யாழ்ப்பாண மாவட்டத்தின் முழு வாக்காளர்களில் 2% அளவைக் கூடப் பெற முடியாத இயக்கங்களாகும்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் ஜனாதிபதிக்கு இல்லாததால் அதனைப் பயன்படுத்தி ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் கஷ்டத்திற்கு உள்ளாக்க இடைக்கால நிர்வாக சபையொன்றினூடாக இக் கட்சிகள் பலம் பெற முயல்கிறமை.

அதேபோல் இடைக்கால நிர்வாக அதிகாரத்தைக் கோரும் ஸ்ரீ.ல.மு.கா. உம், ஈ.பி.டீ.பி இயக்கமும், புளொட் இயக்கமும் அவ் அதிகாரத்தைப் பெற்ற பின்பு அதிகாரத்தை அமைப்பது திருகோணமலையில் அல்லது கொழும்பில் ஆகும். ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம் இந்திய சமாதானப் படையினதும் உதவியைப் பெற்றும், யாழ்ப்பாணத்தில் சிவில் அதிகாரத்தை அமைப்பதற்கு முடியாது போனமை இவ்வாறான இடைக்கால சபையொன்றை நிர்வகிப்பது எவ்வளவு சாத்தியமற்றது எனக் காட்டும்.

அதேபோலலே எதுவித மக்கள் அடித்தளமும் இல்லாத, எதுவித பொது மக்கள் தொடர்பும் இல்லாத சில தமிழ் இயக்கங்களின் கோரிக்கைகளுக்கு, அரசாங்கம் கீழ்ப்படிவதால் இனப் பிரச்சினைக்குத் தீர்வொன்றை வழங்குவது இன்னும் இன்னும் தாமதமாகும்.

*றஷ்மிய 19950702*

## ஹமீத் மீது ஊழல் குற்றச்சாட்டு

இலங்கைக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு நிதி உதவிகளை முறையற்ற விதத்தில் உபயோகித்த குற்றச்சாட்டின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களில் ஒருவரும் முன்னாள் வெளிநாட்டலுவல்கள், உயர் கல்வி, நீதி அமைச்சரான ஏ.சீ.எஸ்.ஹமீத் இலஞ்ச ஊழல் விசாரணை செய்யும் நித்திய ஆணைக்குழுவின் முன் அழைக்கப்பட உள்ளார்.

1977 இல் ஐ.தே.க. அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்த தினம் முதல் 1989இல் ஆர்.பிரேமதாச ஜனாதிபதி பதவிக்கு நியமிக்கப்படும் வரை வெளிநாட்டு அமைச்சராக ஹமீத் செயற்பட்டதுடன், இக்காலப் பகுதியினுள் ஹாரிஸ்பத்துவ அபிவிருத்தி நிதியம் எனப்படும் தனிப்பட்ட நிதியத்திற்கு வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுள்ளதாகக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இக் காலப் பகுதியினுள் தென் கொரியாவிடமிருந்து மட்டும் 20 இலட்சத்திற்குக் (ரூபா 9 கோடிக்குக்) கிட்டிய அமெரிக்க டொலர் நிதியை வெளிநாட்டு உதவியாகப் பெற்றுள்ளதாகக் கூறப்படுவதுடன் இந் நிதியின் பாரிய பகுதியை முறையற்ற விதத்தில் உபயோகித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

1977இல் அமைச்சு மோட்டார் வாகனமொன்றையும், ட்றக் வாகனமொன்றையும் விலைக்கு வாங்குவதற்காக ஒரு இலட்சம் டொலரையும், 1978இல் மீன் பிடிவலைகள், வானொலிப் பெட்டிகளையும், கசற் றெக்கோடர்களிற்காக 30,000 டொலர்களையும், 1979இல் மோட்டார் வாகனங்களிற்காக ஒரு இலட்சம் டொலரும், 1980இல் மீன்பிடி வலைகள் வானொலிப் பெட்டிகளிற்காக 200,000 டொலரும், 1981இல் ஜனாதிபதி நிதியத்திற்காக 50,000 டொலரும், 1982இல் தொழிநுட்பப் பயிற்சிக்காக 3 இலட்சம் டொலர்களையும், 1983 இல் கிராமத்தை விழிப்படையச் செய்ய இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் டொலர்களையும், 1984இல் ஹாரிஸ்பத்து - கொரியக் கிராமத்திற்காக பத்தாயிரம் டொலர்களையும், 1985இல் மின் உற்பத்தி இயந்திரத்திற்காக 2,00,000 டொலர்களையும், 1986இல் வானொலி உபகரணத்திற்காக இரண்டு இலட்சம் டொலர்களையும், 1987இல் மீண்டும் வானொலி உபகரணங்களிற்காக இரண்டு இலட்சம் டொலர்களையும் 1988 இலும் மின் உபகரணங்களிற்காக 3 இலட்சம் டொலர்களையும், 1989இல் நீர் இறைக்கும் இயந்திரத்திற்காக (Water Pump) 50,000 டொலர்களையும் என 19,90,000 இற்கான நிதி உதவி தென் கொரியாவிடமிருந்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்குக் கிடைத்துள்ளது.

ரஞ்சன் விஜேரத்ன வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பதவிக்கு நியமிக்கப்பட்ட பின் கொரிய உதவியை எவ்வாறு வழங்க வேண்டும் என விசாரிக்க இலங்கையிலுள்ள கொரியத் தூதர் புதிய (வெளிநாட்டு) அமைச்சரைச் சந்தித்துள்ளதுடன் இதுவரை வழங்கிய உதவிகள் உபயோகிக்கப்பட்டது தொடர்பான அறிக்கையொன்றையும் தூதர் கேட்டுள்ளார். அது தொடர்பாக விசாரித்துப் பார்த்ததில் வழங்கப்பட்ட உதவிகள் தொடர்பாக எதுவித அறிக்கையும் அமைச்சில் இல்லையெனத் தெரிய வந்துள்ளது. வெளிநாட்டு அமைச்சிற்குக் கிடைக்கும் அனைத்து உதவிகளும் வெளிநாட்டு வளப் பணிப்பாளரினூடாக வழங்கப்பட வேண்டுமென விஜேரத்ன புதிய உத்தரவொன்றைப் பிறப்பித்தது இச் சம்பவத்தின் பின்பாகும்.

இது தொடர்பாக ஐ.தே.க. அரசாங்கத்தின் இன்னொரு அமைச்சரொருவரிடமிருந்தும் இரகசிய பொலிசார் வாக்கு மூலம் பெற்றுள்ளதுடன் அமைச்சின் முன்னாள் செயலாளரிடமிருந்தும் நீண்ட வகையில் விசாரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிய வருகிறது. அங்கீகரிக்கப்படாத இரகசிய பொலீஸ் தகவல் வட்டாரங்களின்படி இவ் வெளிநாட்டு நிதிகளின் பகுதியொன்று இலண்டனிலுள்ள வங்கிக் கணக்கொன்றில் வைப்பிலிடப்பட்டிருப்பதாகவும், சில வெளிநாட்டுச் செலாவணி உதவிகள் பெற்றுக் கொண்டு இந்நாட்டில் ரூபாய்களில் கொடுப்பனவுகளைச் செய்துள்ளதாகவும் அறியக் கிடைக்கிறது.

*ராவய 19950709*

## யுத்தம் ...

சமாதானத்தை முன்னெடுப்பதற்கான அரசின் தீர்வுத்திட்டம் இனத்துவ சமத்துவத்தை நிலைநாட்டுவதாகவும் இலங்கையின் பல்லின, பல் கலாசாரத் தன்மையைப் பேணுவதாகவும் அமைய வேண்டும். சாத்தியமான உச்சளவிலான அதிகாரப் பரவலாக்கம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். தமிழ், முஸ்லீம் மக்களுக்குச் சாரம் மிக்கதும் திறன் வாய்ந்ததுமான ஒரு மாநில சுயாட்சி அமைப்பு ஏற்படுவது உகந்ததாக அமையலாம். ஒரு பொதுவான தளத்தில் இத்தகைய அதிகாரம் பரவலாக்கம் இலங்கையின் அரசியலமைப்பையும் ஜனநாயகமயப்படுத்தும்.'

அரசியல் தீர்வுத்திட்டம் சட்டவடிவம் பெற்றதும் உரியமுறையில் அதனை நடைமுறைப்படுத்த அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும். தமிழ் மொழியைச் சமத்துவமான முறையில் பயன்படுத்துவதோடு மலையக மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு தரப்பட வேண்டும். தீர்வுத்திட்டத்தை தெற்கிலும் கிழக்கிலும் திறமையாக நடைமுறைப்படுத்திக் காட்டுவதன் மூலம் அதிகாரப் பரவலாக்கல் சாத்தியமானது என்பதை மட்டுமல்ல அது அவசியமானது என்பதையும் மக்களுக்கு யதார்த்தபூர்வமாக உணரப் பண்ண முடியும். பெரும்பாலான மக்களால் இந்த அரசாங்கத்துக்கு வழங்கப்பட்ட ஆணையை நிறைவேற்றுவதுதான் யுத்தத்தில் சிக்குப்பட்டுச் சீரழிவதை விட உன்னதமான வழி என்பதை அரசாங்கம் உணர வேண்டும். புலிகளை அரசியல்ரீதியாகத் தோற்கடிப்பதற்கு இதனை விட வேறு வழிகளில்லை.

சமாதானத்துக்கும் அதிகாரப் பரவலாக்கத்துக்குமான தனது கடப்பாட்டை அரசாங்கம் கௌரவிக்கிற அதேநேரம் புலிகளை சமாதான வழிக்குத் திருப்பும்படி யாழ்ப்பாணமக்களுக்கு அரசாங்கம் வேண்டுகோள் விடுக்க வேண்டும். சமாதானத் தீர்வுக்குப் புலிகளை நிர்ப்பந்திப்பதில் யாழ்ப்பாண மக்கள் வெற்றி பெற்று விடுவார்களானால் அரசாங்கம் புலிகளுடனான பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும். கடந்த காலப் பேச்சு வார்த்தைகளின் தோல்வியின் ஒரு பிரதான காரணம் இருதரப்பிலுமே பரஸ்பர நம்பிக்கை காணப்படவில்லை என்பதே. எல்லாச் சமூகங்களிடையேயும் இந்த நம்பிக்கை உருவாக்கப்பட வேண்டும்.

சமாதான அரசியல் தீர்வுத்திட்டத்தை வடக்கில் நடைமுறைப்படுத்துவதற்கு, புலிகளை நிர்ப்பந்திப்பதை வடக்கு மக்களிடமே விட்டு விட வேண்டும் என நாம் சொல்லுகிற போது ''வடக்கைப் புலிகளிடம் தாரைவார்த்துக் கொடுக்கச் சொல்கிறீர்களா?'' என்று எம்மைப் பார்த்துப் பலர் பெரிய குரலில் கேள்வி எழுப்பக் கூடும்.

அப்படித்தான் இருந்தாலும் என்ன குறைகிறது?

இப்போது வடக்கை ஆள்வது வேறு யார்?'' என்று நாம் திருப்பிக் கேட்க விரும்புகிறோம். வடபுலத்தின் ஆட்சி அதிகாரம் முழுவதுமே அவர்களிடம் தான் உள்ளது. இதனை மாற்றுவது என்பது ஒரு மாபெரும் யுத்தத்தால் மட்டுமே சாத்தியமாகக் கூடிய ஒன்று. இத்தகைய மாபெரும் யுத்தம் ஒன்று எல்லாச் சமூகங்களுக்கிடையேயான சமாதானத்தையும் நல்லுறவையும் பேண உதவாது. மேலும் அது சாத்தியமுமில்லை.

நமது சமூகங்களுக்கிடையேயான சமாதான சகவாழ்வை, யுத்தம் முற்று முழுதாகவே ஒழித்து விடும். எனினும் நாம் குறிப்பிட விரும்புவதுபோல் வடபுலத்து மக்களிடமே புலிகளை நிர்ப்பந்திப்பதை விட்டு விடுவது சமாதானத்திற்கான வழிகளைத் திறந்து வைத்திருப்பதாகும். இதன் மூலம் புலிகளை விட மாற்று வழி ஏதாவது தமக்குத் தேவையா இல்லையா என்று தீர்மானிக்கிற சந்தர்ப்பத்தையும் வடபுலத்து மக்களுக்கு வழங்குவதாகும். அத்தகைய ஒரு தெரிவுக்கும் வடபகுதி மக்களுக்குக் கால அவகாசம் வேண்டும். இலங்கைப் படையினர் அவர்களின் முதுகின் மீது பாரச்சுமையாக இருக்கிற வரையும் வடபகுதி மக்களுக்கு இது சாத்தியமில்லை.

யுத்தம் மேலோங்குகிற போது அரசியல் முடிவடைகிறது. சமாதானம் தேவையென்றால் அரசியலே முதன்மை பெறவேண்டும். யுத்தம் அல்ல. அரசியல் என்பது எவ்வாறு ஆள்வது என்பது தொடர்பான கருத்து வேறுபாடுகளையும் பிணக்குகளையும் திறந்த மனதுடன் பகிரங்கமாகப் பேசித் தீர்ப்பதாகும்.

சமாதானத்தை அடைய இதைவிட வேறுவழியில்லை.

## ஏறாவூர்...

பொறுப்பதிகாரி உட்பட அனைவரும் வாழைச்சேனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். வாழைச்சேனை முஸ்லீம்களும் இவர்களுக்கெதிராகப் போர்க்கொடி தூக்கியபடியால் பொறுப்பதிகாரி தற்போது மட்டக்களப்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இந்நடவடிக்கைகளின் பின் தளவாய் கிராமத்தில் நிலை கொண்டுள்ள பொலிசாரால் ஏறாவூர் இளைஞர்கள் பலவழிகளிலும் தாக்கப்பட்டு வருகின்றனர். மீன்பிடிப்பதற்காக கடற்கரைக்குச் செல்லும் வழியில் இளைஞர்கள் மறிக்கப்பட்டு தாக்குதல்களுக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். ஏறாவூர் இளைஞர்கள் வெளியில் செல்லப்பயப்படுகின்ற நிலை உருவாகியுள்ளது. ஏறாவூரில் இவ்வளவு நடந்த பின்பும் கூட நடந்த விடயங்கள் பற்றி மட்டக்களப்பில் உள்ள எந்தவொரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினரும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காததோடு கண்டித்து ஒரு அறிக்கை கூட வெளியிடவில்லை என்பது விசனம் தருகிறது. முஸ்லீம் காங்கிரஸும், சுதந்திரக்கட்சி முஸ்லீம் பா.உறுப்பினர்களும் சிறு முணுமுணுப்போடு விடயத்தை இடப்பில் போட்டுவிட்டனர்.

உண்மையில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அடிப்படையில் முஸ்லீம் மக்கள் தொடர்பாக எவ்வித பிரக்ஞயுமற்று இருக்கின்றார்கள் என்பதற்கு இதைவிட உதாரணங்கள் தேவையில்லை.

பகீராவின் கணவன் சித்தப்பிரமை பிடித்தவராக மத்திய கிழக்கில் தற்போது உள்ளார் என்று தெரிவிக்கப்பட்ட தகவலை உறுதிப்படுத்த முடியவில்லை.

## மட்டு ....

மக்களைக் குடியமர்த்தி தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் நடவடிக்கையே ஆகும்.

இந்தச் சூழலில் ரெலோ இயக்கத்தினர் தான் அரச படையினருக்கு அனைத்து உதவிகளையும் செய்து வருகின்றனர். இவர்கள் நிரந்தரமாகப் படையினரின் முகாம்களிலேயே தங்கியிருக்கின்றனர். சிலசந்தர்ப்பத்தில் புலிகளைப் போல தங்களை இனங்காட்டியும் பல அடாவடித்தனங்களை இவர்கள் செய்து வருகின்றனர். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரும் தமது பாதுகாப்புக்கென ஆயுதங்களை பெற்றுக் கொண்டு விட்டார்கள். அடுத்தது என்ன என்பது இன்னும் சில வாரங்களுக்குள் தெரிந்து விடும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR
சரிநிகர்

## குருதி படியும் வெள்ளைத் தாமரை!

இந்தத் தலையங்கத்தை எழுதிக் கொண்டிருக்கிற போது யாழ்ப்பாணத்தின் மீது உக்கிரமான படையெடுப்பு நிகழ்ந்து கொண்டிருக்கிறது. புலிகளுடன் யுத்தம்; தமிழ் மக்களுக்குச் சமாதானம் என்றபடி சமாதான முகமூடிகளுடன் யுத்தம் புரியும்

அரசின் அறிக்கைகளின் படி அப்பாவிப் பொதுமக்கள் எவருமே கொல்லப்படவில்லை (நம்பினால் நம்புங்கள்!)

''அரசியல் தீர்வை முன்வைப்பது'' என்றும் சமாதானம்; சமாதானம் இன்றேல் யுத்தமல்ல, மீண்டும் சமாதானமே'' என்றும் பல திக்குகளிலிருந்தும் எழுந்த கோரிக்கைகளும் யுத்தத்தின் கோர இரைச்சலுள் காணாமல் போய் விட்டன.

எல்லா யுத்தத்திலும் முதலாவது களப்பலி உண்மை என்பார்கள். இந்த யுத்தத்திலும் மேலதிகமான ஒரு களப்பலி சந்திரிகா அரசின் சமாதானம் குறித்த தார்மிகக் கடப்பாடு ஆகும். யுத்தத்தின் மூலம் சமாதானத்தைக் கொண்டுவரும் சமாதானப் போர் என்ற அவலச் சுவையும் முரண்நகையும் பொருந்திய நூதனக் கோட்பாட்டை முன்வைத்துள்ளது, இந்த அரசாங்கம்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்ததும் அவை முறிவடைந்தமைக்கான காரணங்கள், மற்றும் இருதரப்பினதும் பொறுப்பு/ பொறுப்பின்மை பற்றி இரு தரப்புமே சீரிய சுய விமர்சனம் ஒன்றைச் செய்திருக்க வேண்டும். பேச்சுவார்த்தைகள் முறிவடைந்ததும் யுத்த நிறுத்தத்தை உடனடியாக மீறி யுத்தத்தை ஆரம்பித்தமை விடுதலைப் புலிகளின் மாபெரும் தவறு மட்டுமல்ல இந்த அரசாங்கத்துக்கு யுத்தத்தை மிகத் தீவிரமாகத் தொடர ஒரு தற்காலிக நியாயப்பாட்டையும் சர்வதேச அரங்கில் வழங்கி விட்டதுமாகும்.

அரசாங்கம் இன்று தொடர்கிற ஆக்கிரமிப்பு யுத்தத்தை எதிர்த்து தென்னிலங்கையில் எந்த ஒரு எதிர்ப்புக் குரல்தானும் இதுவரை எழவில்லை என்பது இன்றைய யதார்த்தம் மட்டுமல்ல சமாதானத்தினதும் நீதியினதும் துரதிர்ஷ்டமுமாகும். கொழும்பில் மையங்கொண்டுள்ள தமிழ்க் குழுக்களும், தமிழ் அரசியல் கட்சிகளும் நேரடியாகவும் மறைமுகமாகவும் இந்த யுத்தத்தை வழி மொழிந்துள்ளார்கள் என்பது வெட்கம் தரக்கூடிய உண்மையாகும். தமிழ்ப் பத்திரிகைகளில் பொது மக்கள் கொல்லப்படுவதைப் பற்றி நீலிக்கண்ணீர் வடித்துக் கொண்டு 'விடுதலை' செய்யப்பட்ட பிரதேசங்களில் சாம்ராச்சியங்களை அமைக்கலாம் என்று கனவு கண்டு கொண்டிருப்பவர்கள் இவர்கள்.

எந்த அரச ராணுவம் காலங் காலமாக வடக்கு - கிழக்கு மக்களை ஒடுக்கி வந்துள்ளதோ அந்த ராணுவத்தின் மூலமே மக்களை ''விடுதலை'' செய்ய வேண்டும் என்று நினைக்கும் அரசும், அரச சார்புத் தமிழ்க் குழுக்களும் எலும்புக்கூடுகளின் மேலும், குருதி ஆற்றிலும்தான் தங்களுடைய அரசாங்கத்தை அமைப்பார்கள். அப்பொழுது மக்கள் காணாமல் போய் விட்டிருப்பார்கள்.

அரசியல் தீர்வை முன்வைக்காதவரை யுத்தம் இல்லை என்றவர் வெள்ளைத் தாமரை இயக்க அமைப்பாளரும் கடந்த அரசின் மனித உரிமைகளை அம்பலப்படுத்திய ' வீரரான '' மங்கள சமரவீர!. அரசியல் தீர்வு எங்கே?

அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கம் பற்றி ஆய்வுக் கட்டுரைகளும் விளக்க உரைகளும் எழுதி வெளியிட்டவர் பேராசிரியர் பீரிஸ்!. எங்கே பரவலாக்கம்?

நாட்டின் ஒருபகுதி மக்கள் மீது தொடுக்கப்படும் யுத்தம் அநியாயமானதும் எந்நிலையிலும் அனுமதிக்கப்பட முடியாததும் என்றவர் ஜனாதிபதி!. சமாதானம் எங்கே?

சந்திரிகா அரசு நடத்தும் யுத்தத்துக்கும் பிரேமதாச அரசு, ஜே.ஆர்.அரசு, விஜேதுங்க அரசு நடத்திய யுத்தத்துக்கும் ஏதாவது வேறுபாடு உள்ளதா?

யுத்தத்திற்கு மனிதாபிமான முகம் வழங்கப்பட முடியும் என்று கருதுகிற அரசாங்கம் ஒரு அரசியல் தீர்வை முன் வைக்கும் என்று எந்த முட்டாளும் எதிர்பார்க்க முடியாது. போக்கு வரத்து சேவைகளை ''மக்கள் மயப்படுத்தியது பிரேமதாச அரசு. யுத்தத்தை மக்கள் மயப்படுத்துகிறது சந்திரிகா அரசு. இதற்கான பயங்கரமான, அதிர்ச்சியூட்டும் உதாரணம் தான் வெள்ளைத் தாமரை இயக்கம். தேசியப் பாதுகாப்புக்கு நிதி சேர்க்கவும் கிராம மட்டங்களில் யுத்தத்தை நியாயப்படுத்தி ஆயுதப் படையினர் மீது அனுதாபத்தையும் ஆதரவையும் கிளர்த்த உருவாக்கப்பட்டுள்ள இந்த இயக்கம் சமாதானத்துக்கான போராட்டம் என்ற போலி முகத்தை அணிந்துள்ளது. ''வடக்குக் கிழக்கு ராணுவ முகாம்களுக்குச் சென்று படையினரின் பிரச்சினைகளைக் கண்டறியவும் எல்லைப் புறக் கிராமங்களின் பிரச்சினைகளைக் கண்டறியவும் நடவடிக்கைகள் எடுப்பதை'' தமது வேலைத்திட்டங்களுள் ஒன்று என்று தெரிவிக்கும் இந்த இயக்கம் ''சமாதானப் பண்'' பாடுகிறது என்று ஆளுங்கட்சிப் பத்திரிகை எழுதுகிறது. எங்கள் தேசத்துச் சமாதானத்தின் லட்சணம் இது! தமிழில் ஒரு முகமும், சிங்களத்தில் இன்னொரு முகமுமாக வெள்ளைத்தாமரை யுத்த இயக்கம் சாதுரியமாக மக்களை ஏமாற்ற முயல்கிறது.

பிரதானமான எல்லா ஆங்கில, சிங்களப் பத்திரிகைகளும் சமாதானப் போரை ஆதரிக்கின்றன. சிங்கள மாற்றுப் பத்திரிகைகளும் கூடத் தற்காப்பு யுத்தம் அவசியம் என்று அரசுக்குச் சொல்கின்றன.

இத்தகைய சூழலில் யுத்தத்தை நிறுத்தும்படி உரத்துக் கேட்பதற்கு ஒருவரும் இல்லாமல் போய்விட்டதில் என்ன ஆச்சரியம்?

தீர்வை முன்வைக்காமல், அரசமைப்பை மீளமைப்புச் செய்யாமல் சிறுபான்மைத் தேசியங்களின் உரிமைகளை அங்கீகரித்து நடைமுறைப்படுத்தாமல் அரசு ஈடுபடும் எந்த யுத்தமும் அதர்ம யுத்தம் தான்.

இந்த அதர்ம யுத்தத்துக்குத் தற்காப்புச் சாயமும் பூசமுடியாது; மனிதாபிமான முக மூடியும் மாட்ட இயலாது

பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற முனைப்பு இருந்திருந்தால் குறைந்த பட்சம் வடக்குக்கு வெளியிலாவது சிறுபான்மை மக்கள் சமத்துவத்தை அனுபவிக்கக்கூடிய வகையில் அரசு நடைமுறைகளை மேற்கொண்டிருக்கலாம்.

ஹிட்லருடைய நாஸிஸத்துக்கு எதிராக இயங்கிய, யூதத் தடுப்பு முகாம்களுக்கு உணவுப் பொட்டலங்களை வழங்கியும், நாஸிஸத்துக்கு எதிராக மிகுந்த நெருக்கடியான சூழலில் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டும் வந்த ஒரு இயக்கத்தினர் இருந்தனர். அவர்களுக்கும் பெயர் வெள்ளை ரோஜா இயக்கத்தினர். இவர்களில் பெரும்பாலானோர் பின்னர் ஹிட்லரால் கொல்லப்பட்டு விட்டனர்.

வரலாற்றுச் சக்கரத்தை அறிவுபூர்வமாகத் திருப்பத் தவறும் அனைவரும் முகமற்ற, ஆத்மா அற்ற கோழைகள் என்று வெள்ளை ரோஜா இயக்கத்தினர் சொன்னார்கள்; மனிதாபிமானத்துக்காக உயிரை விட்டார்கள்.

சூரியமல் இயக்கம் போன்ற ஒன்று என்று பிரச்சாரம் செய்யப்படும் போர் ஆதரவு வெண்தாமரை இயக்கம் சமாதானத்தையும் சுதந்திரச் சிந்தனையையும் அவமானம் செய்கிறது.

எமக்குத் தேவை அப்பாவிப் பொது மக்களின் குருதி படிந்த வெள்ளைத் தாமரை இதழ்கள் அல்ல-

கறைபடியாத வெள்ளை ரோஜாக்கள்!

## யாழ்ப்பாண யுத்தம் '95

எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே அரசின் யாழ்ப்பாணப் படையெடுப்பு பெரியளவில் தொடங்கிவிட்டது. இது செப்ரெம்பர் மாதம் மழைகாலம் ஆரம்பிக்கும் வரை தொடரும் என்று இராணுவ வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. இக்கால எல்லைக்குள் ஒன்றன் பின் ஒன்றாகப் பல பாரிய படை நகர்வுகள் யாழ்.குடா நாட்டின் பல பகுதிகளில் நடைபெறும். அதன் பின்னர் இராணுவம் குடாநாட்டின் பல பகுதிகளிலும் தன் நிலைகளைப் பலப்படுத்தி பரவலாகக் காலூன்றும். அத்துடன் யாழ்ப்பாணத் தீபகற்பமானது கிழக்கு மாகாணத்தைப் போன்ற ஒரு நிலைமைக்கு வந்துவிடும் எனவும் கூறப்படுகிறது.

தொண்டமானாறிலிருந்து - மாதகல் வரை இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்த குடாநாட்டின் வடபகுதிக் கரையோரம், முன்னேறிப் பாய்ச்சல் நடவடிக்கை காரணமாக வடமேற்காக மூளாய்வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளது -மாதகலிற்கு மேற்காக உள்ள கரையோரம்.

அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்குத் தேவையான பெருமளவு கனரக வாகனங்களையும், போர்த் தளபாடங்களையும் கொண்டு போய் இறக்கிவிடும் L.C.M எனப்படும் பாரமேற்று கடற்கலங்கள் கரைதட்ட வசதியாக அமைந்துள்ளது.

கடல்மார்க்கமாகத் தற்போது சாமான்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. தற்போது புலிகள் வசம் ஆழ்கடலை அண்டிய கரையோரம் எனச் சொல்லக்கூடிய வகையில் தொண்டமானாறிலிருந்து நாகர்கோயில் வரையிலான பிரதேசமே குடாநாட்டில் கைவசமுண்டு. கரைப் பிரதேசங்களின் கட்டுப்பாடு இப்படியாகப் புலிகளின் கைகளிலிருந்து பறித்தெடுக்கப்பட்டால் கடற்புலிகளின் அச்சுறுத்தல் இல்லாமற் போய்விடும் என்பது அரசின் கணிப்பு.

அத்துடன் குடாநாட்டின், வடகரையிலிருந்து தென்கரை வரையிலான ஒரு பெரிய பிரதேசத்தை கட்டுப்பாட்டினுள் கொணர்ந்து அதை பொன்னாலை மூளாய் ஊடாக காரைநகருடனும் அராலியூடாக தீவுப்பகுதியுடனும் இணைத்து தன் பலத்தை அசைக்க முடியா வண்ணம் நிறுவும் எண்ணத்திலேயே கடந்த சில நாட்களாக இராணுவம் முன்னேற முயல்கிறது. மூளாயிலிருந்து தென்கிழக்காக ஒரு பெரும் படைநகர்வும், சண்டிலிப்பாய்க்குத் தெற்காக துநாவி எனும் இடத்தினூடாக ஒரு பெரும் படை நகர்வும் நடைபெற்றன. இதை எழுதும் வரையில் அராலியை நோக்கிய பாதையில் அமைந்துள்ள துநாவியில் படையினரின் முன்னேற்றத்தைத் தடுக்கப் புலிகள் கடுமையாகச் சண்டையிட்டு வருவதாகத் தெரிகிறது.

அராலியைக் கைப்பற்றி விட்டால், அதற்கப்பால் கல்லுண்டாய் வெளி, பொம்மை வெளி என்பவற்றினூடாக மிகச் சுலபமாக யாழ் நகரை நோக்கி முன்னேறி அதனைக் கைப்பற்றி விடலாம் என்பது இராணுவத்தின் திட்டம். தீவுப்பகுதியிலிருந்து அராலித்துறையூடாக இராணுவம் யாழ் நகரை நோக்கிக் கரையோரமாக ஒரு பெரும் படையெடுப்பை நடத்தலாம் என நீண்ட காலமாக எதிர்பார்த்து வந்த புலிகள் அராலிப் பகுதியில் பெரும் சண்டையில் ஈடுபடக்கூடிய ஒழுங்குகளை ஏலவே செய்து வைத்திருந்தனர் என்பதும் இவ்விடத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.

ஆனால் இராணுவம் தற்போது மேற்கொண்டுள்ள அராலிக் கரையை நோக்கிய இரட்டைப்படை நகர்வு, மேலும் முன்னேறி அப்பகுதியிற் காணப்படும் திறந்த வெளிகளை அடைந்து விட்டால் பின்னர் நிலைமையைச் சமாளிப்பது கடினம் என்பதை உணர்ந்து கொண்டே புலிகள் மிகக் கடுமையாகப் போரிலீடுபடுகின்றனர் எனலாம்.

முன்னேறிப் பாய்தல் நடவடிக்கையின் மிக முக்கிய பெரிய அங்கமான சண்டிலிப்பாய் துநாவி வழியிலான படை நகர்வு சனத்தொகை கூடிய கட்டிடம் நிறைந்த பகுதிகளினூடாக முன்னேற வேண்டியுள்ளதால், இராணுவம் செறிந்த பீரங்கித் தாக்குதலையும் விமானக் குண்டு வீச்சையும் பயன்படுத்துகிறது. அதாவது ஒரு குறிப்பிட்ட பகுதியை நோக்கிக் காலாட் படைகள் நகருவதற்கு முன்னர் அப்பகுதி பலாலியிலுள்ள கனரகப் பீரங்கிகளால் நொறுக்கப்படுகிறது. அதன் பின்னர் தாங்கிகளும் வழியிலுள்ள கட்டிடங்களை தரைமட்டமாக்கும் புல்டோசர்களும் முன்னேறும். இவ்வகையான படை நகர்வின்போது பொது மக்களுக்குச் சேதம் மிகக் கடுமையாகவே இருக்கும். குடாநாட்டிலிருந்து கிடைக்கும் தகவல்களின்படி படைநகர்வு நடைபெற்ற பகுதிகளில் சடலங்கள் உருக்குலைந்து சிதறுண்டு கிடப்பதாகத் தெரிகிறது.

ஒரு பெரும் படையணியை முதலில் தடையின்றி முன்னேற விட்டு விட்டு, அவ்வணியின் பக்கவாட்டில் அதன் கட்டுக் கோப்பைச் சிதறடிக்கும் வண்ணம் மேற்கொள்ளப்படும் Flank Attack எனும் தாக்குதல் முயற்சியை இராணுவம் நன்றாக எதிர்பார்த்தே சென்றிருக்கிறது எனலாம். ஆனையிறவிலிருந்து கிளாலியைக் கைப்பற்றப் புறப்பட்ட யாழ்தேவிப் படையணி புலோப்பளையில் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான பக்கவாட்டுத் தாக்குதலிலேயே சீர்குலைந்தது என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். ஆயினும் சண்டிலிப்பாய் -துநாவி படைநகர்வு மீது ஒரு வெற்றிகரமான பக்கவாட்டுத்தாக்குதலை நடத்த முடியாத அளவிற்கு இராணுவம் புலோப்பளையில் கற்ற பாடங்களின் அடிப்படையில் முன்னெச்சரிக்கையாகச் செயல்படுகிறது எனலாம். இப்படியான படைநகர்வை முறியடிக்கக்கூடிய ஒரு பக்கவாட்டுத் தாக்குதலுக்கான சரியான முயற்சிகளில் புலிகள் ஈடுபடவில்லை என்பதே இதிலிருந்து வெளிப்படுகிறது. ஆயினும் இவ்வாறான முன்னேறும் போரில் திடீர் திருப்பங்கள் ஏற்படும் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். அடுத்து வரும் நாட்களிலேயே போரின் திசை எவ்வாறிருக்கும் என்பது வெளிப்படத் தொடங்கும்.

டி.சி



இரத்மலானை விமான நிலையத்துக்கு (10.7.95) திங்கட்கிழமை அன்று கொண்டுவரப்பட்ட புதிய AN23B ரக ஏவுகணை எதிர்ப்பு சக்தி வாய்ந்த ரஷ்ய போர் விமானங்கள் மூன்றில் ஒன்றையே மேலேயுள்ள படத்தில் காண்கிறீர்கள்.


### காணாமல் போயுள்ளனரா?

*உங்கள் உறவினர்கள்-நண்பர்கள் யாராவது அரச படையினரால் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனரா?*

*உங்கள் உறவினர்கள்-நண்பர்கள் யாராவது சமீபத்தில் காணாமற் போயுள்ளனரா?*

*தடுப்புக்காவலில் உள்ளவர்களின் விடுதலைக்கான நடவடிக்கைகளில் அல்லது காணாமல் போனவர்களைத் தேடும் நடவடிக்கைகளில் ஈடுபட உங்களுக்கு உதவிகள் தேவையா?*

*இது தொடர்பான உதவிகளை நீங்கள் எமது சட்ட உதவித் திட்டத்திலிருந்து இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.*

*மேலதிக விபரங்களுக்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:*

இணைப்பாளர்,
இலவச சட்ட உதவித் திட்டம்
இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம்
(MIRJE)
இல.4, ஜயரத்ன மாவத்தை, திம்பிரிகஸ்யாய,
கொழும்பு–05.
☎–584380, 593615, 594229.


சரிநிகர் பிரதம ஆசிரியர்: [illegible] தொடர்புகள்: இல.4, ஜயரத்ன மாவத்தை, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05. ☎ 593615
வெளியீட்டாளர்: [illegible] கொழும்பு-03. அச்சுப்பதிவு: நவமக அச்சகம், 334, காலி வீதி இரத்மலானை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

95.04.11